REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2020 ஒகஸ்ட் 24 திங்கட்கிழமை
# தினகரன்
THINAKARAN
தினகரன்
வரு. 88 இல. 200 | August 24,Monday, 2020 | 20பக்கங்கள் | 30/-

## மேலும் 376 பேர் நேற்று அதிகாலை நாடு திரும்பினர்




அவுஸ்திரேலியா, ஐக்கிய அரபு இராச்சியம், கென்யா மற்றும் கட்டாரில் இருந்து 376 இலங்கையர்கள் நேற்று 06

### வடக்கிலிருந்து புதிய இரு தலைவர்களை மக்கள் தெரிவு செய்துள்ளனர்;

# தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் எனும் அந்தஸ்தை TNA இழந்துள்ளது



**எம்.ஏ.அமீனுல்லா**

### தெற்கை போலவே வடக்கிலும் அபிவிருத்தி முன்னெடுக்கப்படும் என்கிறார் ஜீஎல். பீரிஸ்

வடக்கில் இருந்து புதிய தலைவர்களை தமிழ் மக்கள் தெரிவுசெய்துள்ளதன் மூலம் தமிழ் தேசிய கூட்டமைப்பு தமிழ் மக்களின் ஏகபிரதிநிதி இல்லை என்பது உறுதியாக இருக்கின்றது. அத்துடன் அரசாங்கத்தின் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் வடக்கு பிரதேசங்களுக்கும் கொண்டு செல்லப்படும் என கல்வி அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்தார். அமைச்சர் நேற்று கண்டிக்கு விஜயம் மேற்கொண்டு அஸ்கிரிய மற்றும் மல்வத்து மகா நாயக்க தேரர்களின் ஆசிர்வாதத்தை பெற்றுக்கொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

பொதுத் தேர்தலில் வடக்கு மக்கள் அதிகாரத்தை ஒரு கட்சிக்கு மாத்திரம் வழங்காமல் பிரித்து வழங்கியிருப்பதை காணமுடிகின்றது. இதனால் வடக்கில் அரசியலில் மாற்றம் ஏற்பட்டிருக்கின்றது. வடக்கில் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதி தமிழ் தேசிய கூட்டமைப்பு மாத்திரமாகும். தமிழ் மக்களின் உரிமைகள் தொடர்பாக தங்களுக்கு மாத்திரம்தான் கதைக்க முடியும் என கடந்த 06

25, 26ஆம் திகதிகளில்

## புதிய எம்.பிகளுக்கு இருநாள் செயலமர்வு

**சுப்பிரமணியம் நிஷாந்தன்**



புதிய பாராளுமன்றத்திற்குத் தெரிவாகியுள்ள எம்.பிகளுக்கு பாராளுமன்ற செயற்பாடுகள் தொடர்பில் விளக்கமளிக்கும் இரண்டுநாள் செயலமர்வொன்று 06

## செப்டம்பர் மாத இறுதிக்குள் விமான நிலையம் திறப்பு

பிரசன்ன ரணதுங்க தெரிவிப்பு



அடுத்த மாதம் இறுதிக்குள் விமான நிலையம் திறக்கப்படும் என்று சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

எனினும், சுகாதாரத் துறையின் அறிவுறுத்தலின் பேரில் மட்டுமே இதுபோன்ற நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். நாட்டின் மக்களின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு சுற்றுலாப் 06



முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பனிக்கன்குளம் கிராமத்தில் காட்டு யானை ஒன்று நேற்று அதிகாலை கிராமவாசி ஒருவரின் கிணற்றில் விழுந்தது. நீண்ட போராட்டத்தின் பின்னர் யானை கிணற்றில் இருந்து பாதுகாப்பாக மீட்கப்பட்டு வனப்பகுதிக்கு அனுப்பி வைக்கப்பட்டது. கிணற்றில் சிக்கிய யானையை படத்தில் காணலாம்.
(படம்: மாங்குளம் நிருபர்)



## முதலீடுகளை வலுப்படுத்த புதிய பொறிமுறை தயாரித்து ஊக்குவிப்பு

வரவு செலவு திட்டத்தில் நிவாரணம் - அஜித் நிவாட் கப்ரால்

வரவு செலவுத் திட்டத்தில் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு நிவாரணம் வழங்கக்கூடிய வழிமுறைகள் அறிமுகப்படுத்துவது அவசியம் என்று நிதி இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்தார். நாட்டின் பாரம்பரிய கைத்தொழில் உற்பத்திகளுக்கு அதிக பட்ச கேள்வியை ஏற்படுத்துவது அரசாங்கத்தின் நோக்கம் என்று குறிப்பிட்ட நிதி இராஜாங்க 06

## கொள்ளுப்பிட்டி பாதுகாப்பு வலயத்துக்குள் டிரோன் கமரா



கொள்ளுபிட்டியிலுள்ள அதி உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் ட்ரோன் கெமராவை செலுத்திய வெளிநாட்டவர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபர் 06

### நாட்டில் 12 ஆவது கொரோனா மரணம் பதிவு;

# இந்தியாவிலிருந்து நாடு திரும்பிய பெண்ணொருவர் நேற்று மரணம்



ஜனாஸா தொழுகையின் பின் உடல் தகனம்

கொரோனா தொற்று காரணமாக இலங்கையில் 12 ஆவது மரணம் பதிவாகியுள்ளது.

இந்தியாவிலிருந்து கடந்த 20 ஆம் திகதி நாடு திரும்பிய பெண்ணொருவரே (47 வயது ) உயிரிழந்துள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோய் பிரிவின் விசேட வைத்திய நிபுணர் சுதத் சமரவீர குறிப்பிட்டுள்ளார்.

ஐ.டி.எச் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், குறித்த பெண் நேற்று (23) உயிரிழந்துள்ளார். குறித்த பெண், இருதய நோய் மற்றும் புற்றுநோயால் அவதிப்பட்டு வந்ததாக வைத்திய நிபுணர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார். இவருக்கு ஏற்பட்ட இருதயக்கோளாறே மரணத்திற்கான காரணம் எனவும் வைத்திய நிபுணர் 06

சிறுவர் மீதான அநீதி;

## புதிய சட்டங்கள் மூலம் கடுமையான தண்டனை

சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் தொடர்பில் விசாரிக்க புதிய நீதிமன்றம் ஒன்றை அமைக்கவுள்ளதாக நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார். கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றிலேயே அவர் இதனை கூறினார்.



தொடர்ந்தும் உரையாற்றிய அவர், சில விடயங்களை மறைத்து வைத்திருக்க முடியாது. பூப்போன்ற சிறுவர்களுக்கு அநீதி இழைக்கப்படுமாக இருந்தால் அதற்குரிய தண்டனையை வாழ்நாள் முழுவதும் அனுபவிக்க நேரிடும். அதற்கான சட்டங்களை இயற்ற முடியும். 06

## உருளைக்கிழங்கின் இறக்குமதி வரி 5 ரூபா அதிகரிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



இறக்குமதி செய்யப்படும் உருளைக்கிழங்கு ஒரு கிலோவுக்கான இறக்குமதி வரியை ஐந்து ரூபாவால் அதிகரிப்பதற்கு தீர்மானித்துள்ளதாக நிதியமைச்சு தீர்மானித்துள்ளது.

நிதியமைச்சின் செயலாளர் எஸ்.ஆர். ஆட்டிகல அது தொடர்பில் தெரிவிக்கையில், உள்நாட்டு உருளைக்கிழங்கு உற்பத்தியாளர் களை 06

## திடீர் மின்துண்டிப்புக்கு அமைச்சு பொறுப்பு எனில் உடன் பதவி விலகல்

குழு அறிக்கை இன்று வெளியாகும் நிலையில் டளஸ் சவால்



கடந்த வாரம் நாட்டில் மின் துண்டிக்கப்பட்டது தொடர்பாக ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட குழு இன்று தனது அறிக்கையை மின்சக்தி அமைச்சர் டளஸ் அலஹப்பெருமவிடம் கையளிக்க இருப்பதாக மின்சக்தி அமைச்சு தெரிவித்தது.

கடந்த திங்கட்கிழமை நாடுபூராவும் திடீர் மின்துண்டிப்பு ஏற்பட்டது. கெரவலபிட்டியவில் ஏற்பட்ட மின்சார கோளாறையடுத்து பல மணிநேரம் மின்துண்டிப்பு இடம்பெற்றது. இதனை தொடர்ந்து 5 நாட்கள் நாடு பூராவும் காலையிலும் இரவிலும் மின்துண்டிப்பு அமுல்படுத்தப்பட்டது.

இது தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க மின்சக்தி அமைச்சர் குழுவொன்றை நியமிக்குமாறு அமைச்சின் செயலாளருக்கு அறிவித்திருந்தார். 06

தனித்தா, கூட்டணியா என்பது பின்னர்;

## மாகாண சபை தேர்தலில் போட்டியிடுவேன் - அனுஷியா

மாகாணசபைத் தேர்தலில் நிச்சயம் போட்டியிடுவேன் என்று மலையக மக்கள் முன்னணியின் ஸ்தாபகத் தலைவரான அமரர் சந்திரசேகரனின் புதல்வி சட்டத்தரணி அனுஷியா சந்திரசேகரன் தெரிவித்தார்.



இணையவழி கலந்துரையாடலின்போது எழுப்பப்பட்ட கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்படி தகவலை வெளியிட்டார்.

அத்துடன் தனித்து போட்டியிடுவதா அல்லது கூட்டணி அமைத்து போட்டியிடுவதா என்பது தொடர்பில் அப்போதைய அரசியல் களநிலவரத்தை அடிப்படையாகக்கொண்டே முடிவெடுக்கப்படும் எனவும் அனுஷியா சந்திரசேகரன் 06

சுதந்திரக் கட்சியின்

## உப தலைவராகிறார் அங்கஜன் இராமநாதன்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வருடாந்த மாநாடு செப்டம்பர் மாதம் 2 ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது. இதன்போது முக்கிய சில பதவிகளில் மாற்றம் வரக்கூடும் என அக்கட்சி வட்டாரங்களில் இருந்து தகவல் வெளியாகியுள்ளது.



இதன்படி சுதந்திரக்கட்சியின் தலைமைப்பதவியில் இருந்து மைத்திரிபால சிறிசேன விலகுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பொதுத்தேர்தலில் வெற்றி பெற்ற அங்கஜன் 06

## விக்னேஸ்வரனின் பிள்ளைகளுக்கே தமிழ் தெரியாது - SP

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் பெரிய தந்தையாவதற்கே விக்னேஸ்வரன் முயற்சிப்பதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்க கூறியுள்ளார்.



தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் க.வி.விக்னேஸ்வரன் பாராளுமன்றத்தில் ஆற்றிய கன்னி உரை தொடர்பில் 06

## விக்னேஸ்வரன் எம்.பியின் பேச்சு ஒரு சில தமிழ் ஊடகங்களில் மிகைப்படுத்தி சிலாகிப்பு

அதனால் தமிழருக்கு எவ்வித பிரயோசனமும் இல்லை



பாராளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வவன் சபையில் ஆற்றிய உரை தமிழ் மக்களுக்கு எந்த விதமான நன்மைகளையும் பெற்றுத் தரப்போவதில்லையென்று தெரிவித்துள்ள கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மக்கள் தன்மீது வைத்துள்ள நம்பிக்கையும் எதிர்பார்ப்புக்களும் நிச்சயம் நிறைவேறும் என்றும் தெரிவித்துள்ளார்.

யாழ். பிராந்திய கூட்டிணைக்கப்பெற்ற பஸ் கம்பனிகளின் இணையத்தில் நேற்று முன்தினம் ஏற்பாடு செய்யப்பட்ட கௌரவிப்பு நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில்,

நடைபெற்று முடிந்த தேர்தலில் மக்கள் 06

## பொறியில் சிக்கி மேலும் ஒரு சிறுத்தை உயிரிழப்பு



கம்பளை, தொலுவ பகுதியில் நேற்றைய தினம் மேலும் ஒரு சிறுத்தை பொறியில் சிக்கி உயிரிழந்துள்ளது.

இது தொடர்பில் தகவலறிந்த வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் குறித்த பகுதிக்கு சென்று 06

## டுபாய்க்கு தப்பி செல்ல முயன்ற 4 பாதாள கோஷ்டியினர் கைது

விமான நிலையத்தில் நேற்று பிடிபட்டனர்




பாதாள உலக குழுவின் துப்பாக்கிதாரியான "வெல்லே சாரங்க" உள்ளிட்ட மேலும் 3 பேர் கொழும்பு குற்றப் பிரிவினரால் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சந்தேக நபர்கள் டுபாய் நோக்கி செல்வதற்கு தயாராக இருந்த நிலையிலேயே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. 06

# இராமர் கோயில் கட்டும் இயக்கத்துடன் தலைவர்களை கொலை செய்ய திட்டம்

## டில்லியில் ஐ.எஸ் பயங்கரவாதி கைது: டில்லியை குறி வைக்கும் திட்டம் அம்பலம்

டில்லியில் கடந்த சனிக்கிழமை இரவு பொலிசார் நடத்திய தேடுதலில் ஐ.எஸ் பயங்கரவாதி ஒருவர் பிடிபட்டார். அவரிடமிருந்து சக்தி வாய்ந்த வெடிகுண்டுகள், துப்பாக்கியை பொலிசார் கைப்பற்றினர். அவர் டில்லியில் பயங்கர தாக்குதல் நடத்த சதித் திட்டம் தீட்டியிருந்ததும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

அயோத்தியில் இராமர் கோவில் கட்டுவதை தடுக்கும் நோக்கில், இராமர் கோவில் இயக்கத்துடன் தொடர்புடைய ஹிந்து அமைப்புகளின் தலைவர்களை கொலை செய்ய பாகிஸ்தான் பயங்கரவாத அமைப்புகள் சதித் திட்டம் தீட்டியுள்ளதாக இந்திய உளவுத்துறை எச்சரித்துள்ளது. இதனால் உத்தர பிரதேசத்திலும் பொலிஸ் கண்காணிப்பு தீவிரப் படுத்தப்பட்டுள்ளது.

ஐ.எஸ் பயங்கரவாத அமைப்புடன் தொடர்புடைய பயங்கரவாதி ஒருவர் மறைந்திருப்பதாக பொலிசாருக்கு தகவல் கிடைத்தது. இதையடுத்து தவுலாகான் பகுதிக்கு சென்ற பொலிசார், பயங்கரவாதி பதுங்கியிருந்த பகுதியை சுற்றிவளைத்தனர். அப்போது அங்கு மறைந்திருந்த பயங்கரவாதி பொலிசாரை நோக்கி துப்பாக்கியால் சுட்டார். இதையடுத்து பொலிசார் பதிலடி கொடுத்தனர். ஒரு மணி நேரம் நீடித்த சண்டைக்குப் பின்னர் பயங்கரவாதியை பொலிசார் பிடித்தனர். அவரிடமிருந்து 15 கிலோ எடையுள்ள சக்தி வாய்ந்த வெடிகுண்டுகள் வைக்கப் பட்டிருந்த இரண்டு பிரஷர் குக்கர்கள், கைத்துப்பாக்கி, மோட்டார் சைக்கிள் ஆகியவற்றை பொலிசார் கைப்பற்றினர்.

அவர் பெயர் அபு யூசுப்( வயது 30) என்பதும், ஐ.எஸ் அமைப்பில் பயிற்சி பெற்ற பயங்கரவாதி என்பதும் தெரியவந்தது. இதுபற்றி டில்லி சிறப்பு பொலிஸ் பிரிவின் துணை ஆணையர் பிரமோத் சிங் குஷ்வாஹா கூறியதாவது:

பிடிபட்ட ஐ.எஸ் பயங்கரவாதி யூசுப், உத்தர பிரதேச மாநிலம், பல்ராம்பூர் மாவட்டத்தைச் சேர்ந்தவர். முதலில், யூசுப் முன்னுக்குப் பின் முரணாக பதில் அளித்தார். பின்னர் முறைப்படி நடத்தப்பட்ட விசாரணையில்தான், அவர் ஐ.எஸ் பயங்கரவாத அமைப்பில் பயிற்சி பெற்றுள்ளது உறுதியானது. ஆப்கானிஸ்தானின், கோரசான் மாகாணத்தில் உள்ள ஐ.எஸ் பயங்கரவாதிகளிடம் அவர் பயிற்சி பெற்றுள்ளார்.

மேலும், ஐ.எஸ் பயங்கரவாத அமைப்புடன், இணையதளம் வழியாக தொடர்ந்து தொடர்பில் இருந்து வந்துள்ளார். பயங்கர தாக்குதல் நடத்தும் நோக்கில்தான் யூசுப் டில்லிக்கு வந்துள்ளார். அவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட மோட்டார் சைக்கிள், உ.பி. மாநிலத்தில் பதிவு செய்யப்பட்டு உள்ளது. டில்லியில் பல இடங்களை யூசுப் சுற்றிப் பார்த்துள்ளார். தனி ஆளாக நடத்தும் தாக்குதலை வுல்ப் அட்டாக்' என ஐ.எஸ் பயங்கரவாதிகள் அழைப்பர். அதன்படி டில்லியில், வுல்ப் அட்டாக் நடத்த யூசுப் சதித் திட்டம் தீட்டிஇருந்தது தெரிந்தது. யூசுப்பிடமிருந்து கைப்பற்றப்பட்ட வெடிகுண்டுகளுடன் கூடிய குக்கர்கள் செயலிழக்க வைக்கப்பட்டன. மேலும், யூசுப் டில்லி மற்றும் உ.பியில் சுற்றிப் பார்த்த பகுதிகளில் கமாண்டோ படையினர் தீவிர தேடுதல் வேட்டை நடத்தி வருகின்றனர்.

இவ்வாறு, அவர் கூறினார்.


இதற்கிடையே அபு யூசுப் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு ட்டு நாட்கள் பொலிஸ் காவலில் விசாரணைக்கு அனுப்பப்பட்டுள்ளார். இந்த சம்பவத்தை தொடர்ந்து, 'உ.பி மாநிலம் முழுவதும், பொலிசார் தயார் நிலையில் இருக்க வேண்டும்' என, மாநில டி.ஜி.பி., ஹிதேஷ் சந்திர அவஸ்தி உத்தரவிட்டுள்ளார். உ.பியிலிருந்து டில்லிக்கு நுழையும் வாகனங்கள் தீவிரமாக பரிசோதிக்கப்பட்டு வருகின்றன.

கர்நாடக மாநிலம் பெங்களூரில் ஐ.எஸ் பயங்கரவாத அமைப்புடன் தொடர்பு வைத்திருந்த டொக்டர் அப்துல் ரஹ்மான் சமீபத்தில் கைது செய்யப்பட்ட நிலையில் டில்லியில் அபு யூசுப் கைது செய்யப்பட்டு உள்ளார்.

இதுஇவ்விதமிருக்க அயோத்தியில் இராமர் கோவில் கட்டுவதை தடுக்கும் நோக்கில் இராமர் கோவில் இயக்கத்துடன் தொடர்புடைய ஹிந்து அமைப்புகளைச் சேர்ந்த தலைவர்களை கொல்ல, பாகிஸ்தான் ஆதரவு பெற்ற பயங்கரவாத அமைப்புகள் சதித் திட்டம் தீட்டியுள்ளதாக உளவுத்துறை எச்சரித்துள்ளதால் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

இராமர் கோவில் இயக்கத்துடன் தொடர்புடைய ஆர்.எஸ்.எஸ், விஸ்வ ஹிந்து பரிஷத், பா.ஜ, பஜ்ரங்தள், அகில பாரதிய வித்யார்த்தி பரிஷத் உள்ளிட்ட பல்வேறு ஹிந்து அமைப்புகளைச் சேர்ந்த தலைவர்களை கொல்ல, இந்த பயங்கரவாத அமைப்புகள் சதித் திட்டம் தீட்டியுள்ளதாக தகவல் கிடைத்துள்ளது.

## கொரோனா வைரஸ் ; குணமடைந்தோர் 22,80,567 பேர் தொற்றாளர்கள் 30,44,941 பேர்



நாட்டில் கடந்த 24 மணி நேரத்தில் கொரோனா வைரஸ் பாதிப்பிலிருந்து 57,989 பேர் குணமடைந்துள்ள நிலையில், குணமடைந்தோரின் விகிதம் 74.90 சதவிகிதமாக உயர்ந்துள்ளதாக மத்திய சுகாதார மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இது தொடா்பாக மத்திய சுகாதாரத் துறை அமைச்சகம் வெளியிட்ட செய்தியில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

கொரோனாவில் இருந்து 22,80,567 போ் குணமடைந்துள்ளனா். இது மொத்த பாதிப்பில் 74.90 சதவிதமாக உள்ளது. ஞாயிற்றுக்கிழமை காலை வரையிலான 24 மணி நேரத்தில் 69,239 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனால் மொத்த தொற்று பாதிப்பு 30,44,941 ஆக உயர்ந்துள்ளது. அதே கால அளவில் 912 போ் உயிரிழந்தனா். இதனால் மொத்த உயிரிழப்பு 56,706ஆக அதிகரித்துவிட்டது. எனினும், குணமடைந்தோருக்கும் தொற்றுக்கு சிகிச்சை பெற்று வருவோருக்கான இடைவெளி 15,72,899 ஆக உள்ளது. குணமடைந்து வருவோரின் சதவீதம் சீரான அளவில் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. மேலும், இப்போதைய சூழலில் 7,07,668 போ் சிகிச்சையில் உள்ளனா்.

ஆகஸ்ட் 22 ஆம் தேதி வரை 3,52,92,220 கோடி கொரோனா பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதில் கடந்த 24 மணி நேரத்தில் மட்டும் 8,01,147 பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இப்போதைய சூழ்நிலையில் கொரோனா பரிசோதனையை அதிகரிப்பதுதான் தொற்று பரவலைத் தடுப்பதற்கான முக்கிய வழிமுறையாகும். ஏனெனில், தொற்று உள்ளவர்கள் உடனுக்குடன் கண்டறியப்பட்டு தனிமைப் படுத்தப்படுவதன் மூலம், அவர்களால் மற்றவர்களுக்கும் தொற்று பரவுவது தடுக்கப்படுகிறது. தொடக்கத்தில் கொரோனா பரிசோதனை எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டபோது, அதில் நோய்த்தொற்று உறுதியாவோர் விகிதமும் அதிகம் இருந்தது. ஆனால், இப்போது நோய்த் தொற்று உறுதியாகும் விகிதம் குறைந்துள்ளது.

பாதிப்பு: 30,44,941
பலி: 56,706
குணமடைந்தோர்: 22,80,567
சிகிச்சை பெற்று வருவோர்: 7,07,668

## திரைப்படம், தொலைக்காட்சி படப்பிடிப்புக்கு அனுமதி

### ஒளிபரப்புத்துறை அமைச்சர் பிரகாஷ் ஜவடேகர்



திரைப்படங்கள் மற்றும் தொலைக்காட்சித் தொடர்களுக்கு படப்பிடிப்பை தொடங்கலாம் என மத்திய தகவல் மற்றும் ஒளிபரப்புத் துறை அமைச்சர் பிரகாஷ் ஜவடேகர் அனுமதி அளித்துள்ளார்.

நாடு முழுவதும் கடந்த மார்ச் மாதம் முதல் பிறப்பிக்கப்பட்ட ஊரடங்கு உத்தரவால் பல்வேறு தொழில்துறைகள் முடக்கப்பட்டன. அந்த வகையில் திரைப்பட படப்பிடிப்புகளும் இரத்துச் செய்யப்பட்டன. இதனால் சினிமாத்துறையை நம்பி இருந்த பல தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டனர்.

இதனிடையே திரைப்படம் மற்றும் தொலைக்காட்சித் தொடர்களுக்கான படப்பிடிப்புகளுக்கு மத்திய தகவல் மற்றும் ஒளிபரப்புத் துறை அமைச்சர் பிரகாஷ் ஜவடேகர் ஒப்புதல் அளித்துள்ளார். மேலும் படப்பிடிப்பின்போது கடைபிடிக்க வேண்டிய பாதுகாப்பு வழிமுறைகளையும் அவர் வெளியிட்டுள்ளார்.

அதன்படி, எளிதில் நோய்த் தொற்று ஏற்படும் அபாயம் உள்ளவர்கள் கூடுதல் பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

படப்பிடிப்பின் போது தொழிலாளர்கள் அனைவரும் கட்டாயம் முகக் கவசம் அணிந்திருக்க வேண்டும். அடிக்கடி கைகளை கழுவி சுத்தம் செய்துகொள்ள வேண்டும். படப்பிடிப்பிற்கு வரும் தொழிலாளர்களுக்கு கிருமிநாசினி வழங்க வேண்டும்.

பணியாளர்கள் ஆரோக்கிய சேது செயலியை கட்டாயம் வைத்திருக்க வேண்டும், படப்பிடிப்பு தொடங்கும் நிலையங்களின் முகப்புகளில் தெர்மல் ஸ்கேனிங் பரிசோதனை கட்டாயம் செய்துகொள்ள வேண்டும்.

அனைத்து நேரங்களிலும் சமூக இடைவெளியை கடைபிடிக்க வேண்டும். படப்பிடிப்பின் போது யாருக்கேனும் காய்ச்சல் அறிகுறிகள் இருந்தால், அனைவரும் PCR பரிசோதனை செய்துகொள்ள வேண்டும். தொற்று உறுதி செய்யப்பட்டால், படப்பிடிப்பு தளத்தை தூய்மைப்படுத்த வேண்டும் என்பது உள்ளிட்ட வழிகாட்டுதல் நெறிமுறைகள் வழங்கப்பட்டுள்ளன.

## மதுரையில் மாணவி பாலியல் வன்கொடுமை: வாலிபர் கைது

மதுரை நாகமலை புதுக்கோட்டை அருகே +2 மாணவியை ஆசை வார்த்தை கூறி கடத்தி சென்று பாலியல் வன்கொடுமை செய்த வாலிபர், போக்சோ சட்டத்தில் கைது செய்யப்பட்டார்.

மதுரை மாவட்டம் நாகமலை புதுக்கோட்டை பகுதியை அடுத்த ஒந்திமலையை சேர்ந்த வாலிபர் பரதன். இவர் கீழ்குயில்குடி கிராமத்தை சேர்ந்த +2 மாணவியை காதலித்து வந்துள்ளார். மேலும் திருமணம் செய்து கொள்வதாக ஆசை வார்த்தை கூறி அந்த மாணவியை கடத்தி சென்று பாலியல் வன்கொடுமை செய்து, வீட்டில் அடைத்து வைத்திருந்ததாக கூறப்படுகிறது.

இந்நிலையில் மாணவியின் பெற்றோர் அளித்த முறைப்பாட்டின் பேரில் சமயநல்லூர் அனைத்து மகளிர் காவல்நிலைய போலீசார் வழக்குப்பதிவு செய்து பரதன் வீட்டிற்கு சென்று விசாரணையில் ஈடுபட்டனர்.

அப்போது பரதன் மாணவியை கடத்தி மதுரை பைக்கரா பகுதியில் உள்ள தனது உறவினர் வீட்டில் அடைத்து வைத்திருந்ததும் அவரை பாலியல் வன்கொடுமை செய்ததும் தெரியவந்தது.

இதனையடுத்து மாணவியை மீட்டு பெற்றோரிடம் ஒப்படைத்த போலிசார் பரதனை போக்சோ மற்றும் குழந்தை திருமண தடுப்பு சட்டத்தில் கைது செய்து சிறையிலடைத்தனர்.

## காங்கிரஸ் கட்சியின் இடைக்கால தலைவர் பதவியில் இருந்து சோனியாகாந்தி விலகல்

காங்கிரஸ் கட்சியின் இடைக்கால தலைவர் பதவியில் இருந்து சோனியா காந்தி விலகியதாக தகவல் வெளியாகியுள்ளது. இன்று காங்கிரஸ் கட்சியின் காரிய கமிட்டி கூட்டம் நடைபெற உள்ள நிலையில் இடைக்கால தலைவர் பதவியில் இருந்து சோனியகாந்தி விலகியதாக தகவல் வெளியாகியுள்ளது. முன்னதாக காங்கிரஸ் கட்சியின் தலைவராக ராகுல்காந்தி பொறுப்பேற்றிருந்தார். ஆனால் கடந்த பாராளுமன்றத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி தோல்வியை தழுவியது. இதனால் தோல்விக்கு பொறுப்பேற்று ராகுல்காந்தி தனது தலைவர் பதவியை ராஜினாமா செய்தார்.

## சென்னை கோயம்பேட்டில் 5 பேருந்துகள் தீயில் எரிந்து சேதம்



சென்னை கோயம்பேட்டில் நிறுத்தப்பட்டிருந்த 5 ஆம்னி பேருந்துகள் தீயில் எரிந்து சேதமடைந்துள்ளன.

சென்னை கோயம்பேடு ஆம்னி பேருந்து நிலையில் திடீரென தீ விபத்து ஏற்பட்டுள்ளது. இதில், அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 5 ஆம்னி பேருந்துகள் தீப்பற்றி எரிந்தது. இதனால் அந்த பகுதியில் பரபரப்பு நிலவியது.

தகவல் அறிந்து 6 தீயணைப்பு வாகனங்களுடன் வந்த தீயணைப்பு வீரர்கள் தீயை அணைக்க போராடி வருகின்றனர். தீ விபத்துக்கான காரணம் எதுவும் இதுவரை வெளியாகவில்லை.

## துரையில் செல்போன் கோபுரம் அமைக்க மக்கள் எதிர்ப்பு




மதுரையில் செல்போன் கோபுரம் அமைக்க மக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.

மதுரை தத்தனேரி அருள்தாஸ்புரம் கே.டி.கே தங்கமணி பகுதியில் செல்போன் கோபுரம் அமைக்க மக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். முதற்கட்டமாக அப்பகுதியில் 15 அடிக்கும் மேலாக பள்ளம் தோண்டப்பட்ட நிலையில், அங்கு செல்போன் கோபுரம் அமைக்கக்கூடாது என எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.

ஏற்கெனவே அப்பகுதியில் இரண்டு முறை செல்போன் கோபுரம் அமைக்க சில தனியார் செல்போன் நிறுவனங்கள் முயன்ற நிலையில், மண்ணின் தரம் மற்றும் உறுதித்தன்மை சரியில்லாத காரணத்தால் பின்வாங்கி விட்ட நிலையில், தற்போது வேறு ஒரு தனியார் செல்போன் நிறுவனம் செல்போன் கோபுரத்தை அமைக்க முற்பட்டு வருவதாக பொதுமக்கள் குற்றச்சாட்டு தெரிவித்தனர். மேலும் தங்கள் பகுதியில் செல்போன் கோபுரம் அமைத்தால் குழந்தைகளுக்கு உடல்நலக்குறைவு பாதிப்புகள் ஏற்படும் எனவும் தெரிவித்தனர். இப்பகுதியில் தரைமட்டம் மற்றும் நிலத்தின் தன்மை உறுதியற்ற வகையில் இருப்பதால் செல்போன் கோபுரம் அமைக்கக்கூடாது என மக்கள் தெரிவித்தனர்.

## அயோத்தியில் கட்டப்படவுள்ள மசூதிக்கான சின்னத்தை இஸ்லாமிய கலாசார அமைப்பு வெளியிட்டுள்ளது



அயோத்தியில் பாபர் மசூதிக்குப் பதிலாக அமைக்கப்படவுள்ள புதிய மசூதியைக் கட்டும் பொறுப்பை, உத்தரபிரதேச மத்திய வக்ப் வாரியம் இந்திய இஸ்லாமிய கலாசார கூட்டமைப்பு' என்ற அமைப்பிடம் அளித்துள்ளது. அந்த அமைப்பின் சார்பில் கட்டப்பட உள்ள மசூதிக்கான சின்னம் சனிக்கிழமையன்று வெளியிடப்பட்டுள்ளது. எண்கோண வடிவத்தில் அமைந்துள்ள இந்த சின்னமானது இரண்டு சதுரங்கள் ஒன்றையொன்று தொட்டுக்கொள்வது போல வடிவமைக்கப்பட்டுள்ளது.

இது குறித்து செய்தியாளர்களிடம் பேசிய கூட்டமைப்பின் செயலாளர் அதர் ஹுசைன், 'இந்த சின்னமானது 'ரூப் எல் ஹிஸ்ப்' என்னும் இஸ்லாமிய குறியீடாகும். இது 60 ஹிஸ்புகளாக பிரிக்கப்பட்டுள்ள குர் ஆனின் பகுதிகளை அமர்ந்து ஓதும் இடத்தைக் குறிக்கிறது. அரபு எழுத்துருவில் அத்தியாயங்களை குறிக்கவும் இது பயன்படுகிறது' என்று தெரிவித்தார்.

2020 ஓகஸ்ட் 24 திங்கட்கிழமை

# தினகரன்
THINAKARAN தினகரன்

24ம் திகதி முதல் 26ம் திகதி வரை
**தொழுகை நேரம்**

| | |
|---|---|
| சுபஹ் | - 04.46 |
| லுஹர் | - 12.14 |
| அஸர் | - 03.25 |
| மஃரிப் | - 06.22 |
| இஷா | - 07.34 |

**இன்றைய சுபதினம்**
சார்வரி வருடம் ஆவணி 08
ராகுகாலம் : காலை : 7.30 - 9.00 வரை
சுபநேரம் : காலை : 6.00 - 7.30 வரை
யோகம்: அமிர்த மரண யோகம்
நட்சத்திரம்: சுவாதி இரவு 8.37
திதி: சஷ்டி

தினகரன் விளம்பரம் 0112429367 விற்பனை பிரிவு 0112429444, 0112429378 ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk




கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட சிறுவர் துஷ்பிரயோகத்தில் இருந்து சிறுவர்களை பாதுகாப்போம் என்ற தொனிப்பொருளில் நடைபெற்ற வைபவத்தில் கலந்து கொண்ட நீதியமைச்சர் அலி சப்ரி பிரதமரின் பாரியார் சிரந்தி ராஜபக்ச, சிறுவர் அதிகார சபையின் அதிகாரிகள் ஆகியோர் சிறுவர்கள் நினைவாக மெழுகுவர்த்தி ஏந்தியிருப்பதை படத்தில் காணலாம்.
(படம் அஷ்ரப் ஏ சமத்)

# இடைக்கால கணக்கறிக்கை மீது 27, 28 ஆம் திகதிகளில் விவாதம்

**சுப்பிரமணியம் நிஷாந்தன்**

எதிர்வரும் செப்டெம்பர் முதலாம் திகதி முதல் டிசம்பர் 31ஆம் திகதி வரையான நான்கு மாத காலப் பகுதிக்கான அரச செலவினங்களை ஈடு செய்யும் 949.76 பில்லியன் இடைக்கால கணக்கறிக்கை மீது 27,28 ஆம் திகதிகளில் பாராளுமன்றில் விவாதம் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் மஹிந்த ராஜபக்சவால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இந்த இடைக்கால கணக்கறிக்கை பாராளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் கடந்த அமர்வில் உள்வாங்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றதால் 2020ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை கடந்த அரசாங்கம் பாராளுமன்றில் சமர்ப்பித்திருக்கவில்லை. ஆட்சி மாற்றத்தின் பின்னர் புதிய அரசாங்கத்தால் சமர்ப்பிக்கப்பட்ட கணக்கு வாக்கெடுப்புக்கு பாராளுமன்றில் பெரும்பான்மையை கொண்டிருந்த ஐ.தே.க ஆதரவளிக்காமையால் கணக்கு வாக்கெடுப்பு நிறைவேற்றப்படாத நிலையிலேயே மார்ச் மாதம் பாராளுமன்றம் கலைக்கப்பட்டிருந்தது.

அரசியலமைப்பில் ஜனாதிபதிக்கு உள்ள நிதி அதிகாரங்களின் பிரகாரம் கடந்த 5 மாதங்களுக்கான அரச செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டன. பொதுத் தேர்தல் முடிவடைந்துள்ள பின்புலத்தில் வரவு செலவுத் 06

## நாணயமாற்று

| | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 120.37 | 126.14 |
| கனடியன் டொலர் | 132.20 | 138.18 |
| யூரோ | 201.26 | 209.00 |
| ஜப்பான் யென் | 1.6887 | 1.7628 |
| சிங்கப்பூர் டொலர் | 128.46 | 133.83 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 224.45 | 232.40 |
| சுவிஸ் பிராங்க் | 187.86 | 195.81 |
| அமெரிக்க டொலர் | 183.51 | 188.61 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை |
|---|---|
| பஹ்ரின் டினார் | 492.89 |
| குவைத் டினார் | 603.09 |
| ஓமான் ரியால் | 483.42 |
| கட்டார் ரியால் | 50.73 |
| சவூதி ரியால் | 49.54 |
| ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 50.66 |

# அனைத்து இன, மதங்களையும் சமமாக கருதி செயற்படுவோம்



அனைத்து இனங்களையும் மற்றும் மதங்களையும் சமமாக கருதுவதுடன், பௌத்த மதத்திற்கு அரசியலமைப்பில் வழங்கப்பட்டுள்ள இடத்தை பாதுகாப்பதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படப் போவதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

வடமேல் மாகாண மஹாசங்க கூட்டத்தில் கலந்துக் கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

குருநாகல் மாவட்ட வேட்பாளராக களமிறங்கிய தனக்கு கடந்த பொதுத் தேர்தலில் மகத்தான வெற்றியைப் பெற்றுக் கொள்வதற்கு குருநாகல் மாவட்டத்தின் அனைத்து தொகுதிகளிலுமுள்ள மதகுருமார்கள் மற்றும் பொதுமக்கள் செய்த அர்ப்பணிப்பிற்கு இதன்போது பிரதமர் நன்றி தெரிவித்தார்.

அதேபோன்று நாட்டின் எதிர்கால திட்டங்களை மஹாசங்கத்தினரின் ஆலோசனை மற்றும் அறிவுரையின் பேரில் செயற்படுத்துவதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச தெளிவாகக் கூறியுள்ளதாக பிரதமர் குறிப்பிட்டார். அனைத்து இனங்களையும் மதங்களையும் சமமாக நடத்துவதிலும், அரசியலமைப்பில் பௌத்த மதத்திற்கு வழங்கப்பட்டுள்ள இடத்தை பாதுகாப்பதிலும் அர்ப்பணிப்புடன் செயற்படுவதாகவும் பிரதமர் குறிப்பிட்டார். 06

## அனைவரும் சுதந்திரமாக வாழும்
# சூழலை உருவாக்குவதற்கே புதிய அரசியலமைப்பு

**முதற்கட்டமாக 20 ஆவது திருத்தம் துரிதப்படுத்தப்படும்**



**(லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்)**

நாட்டின் அபிவிருத்தி மற்றும் அமைதியான சூழல் ஆகியவற்றுடன் அனைத்து இன மக்களும் இலங்கையர் என்ற ரீதியில் சுதந்திரமாக வாழக் கூடிய நிலையை கட்டியெழுப்பும் எதிர்பார்ப்பிலேயே அரசாங்கம் புதிய அரசியலமைப்பை கொண்டு வர தீர்மானித்துள்ளது என நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார். அரசியலமைப்பு திருத்தம் தொடர்பான நடவடிக்கைகள் இரண்டு கட்டங்களாக முன்னெடுக்கப்படும்.

அதற்கிணங்க முதலில் 19 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை மாற்றுவதுடன் அதன் பிறகே புதிய அரசியலமைப்புத் திருத்தத்தை கொண்டுவருவது தொடர்பிலான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் எனவும் நீதியமைச்சர் தெரிவித்தார். 06

# மக்கள் காங்கிரஸிலிருந்து நௌஷாட் இடைநிறுத்தம்



சம்மாந்துறை பிரதேச சபையின் முன்னாள் தவிசாளரும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் உயர்பீட உறுப்பினருமான ஏ.எம். எம்.நௌஷாட், அக்கட்சியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார். அத்துடன், கட்சி சார்ந்து அவர் வகித்த பதவிகளிலிருந்தும் நீக்கப்பட்டுள்ளார். கட்சியின் நலன்களுக்கு எதிராகவும், நெறிமுறைகளை மீறி செயற்பட்டதனாலே அவர் இடைநிறுத்தப்பட்டுள்ளார். கடந்த பொதுத்தேர்தல் காலத்தில், முன்னாள் பிரதேச சபை தவிசாளர் நௌஷாட்டின் பேச்சுக்களும் செயற்பாடுகளும் கட்சிக்குப் பாதகமாக அமைந்ததனாலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் பதியுதீனுக்கு, கட்சி யாப்பில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமையவே, அவர் கட்சியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# சமூக, பொருளாதார தாக்கங்களை ஆராயும் பொறிமுறையாக அரச நிர்வாகம் மேம்படுத்தப்பட வேண்டும்



சமூக பொருளாதார தாக்கங்களை ஆராயும் ஒரு வழிமுறையாக அரச நிர்வாக பொறிமுறையை மேம்படுத்த வேண்டும் என பொருளாதார புத்தெழுச்சி மற்றும் வறுமை ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணியின் தலைவர் பசில் ராஜபக்ஷ தெரிவித்தார். இலங்கை நிர்வாக சேவைகள் சங்கத்துக்கும் ஜனாதிபதி செயலணியின் தலைவருமான பசில் ராஜபக்ஷவிற்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் (22) அலரி மாளிகையில் நடைபெற்றது.அதன்போது துல்லியமான தரவுகளையும் தகவல்களையும் ஒரே இடத்தில் கொண்டு வர வேண்டியதன் அவசியத்தை தலைவர் சுட்டிக்காட்டினார்.

பொதுமக்களின் பணத்தை செலவிட்டு தயாரிக்கப்படும் தேர்தல் வாக்காளர் பட்டியல்களை பொதுச் சொத்தாக மாற்றுவதன் முக்கியத்துவம் மற்றும் அதில் காணப்படும் சட்ட சிக்கல்கள் தொடர்பில் நிர்வாக சேவைகள் சங்கம் சுட்டிக்காட்டியது. 06

## வாகன விபத்துக்களில் சிறுவர் உட்பட மூவர் பலி

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் நேற்று இடம்பெற்றுள்ள வாகன விபத்துக்களில் 11 வயது சிறுவர் உட்பட மூன்று பேர் பலியாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அதற்கிணங்க வெலிக்கந்த, அருங்கல்ல பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தொன்றில் 11 வயது சிறுவர் உயிரிழந்துள்ளான். வீட்டில் நிறுத்தப்பட்டிருந்த லொறியை 15 வயதான சிறுவன் செலுத்த முற்படுகையில் அச்சமயம் அந்த லொறிக்கு முன்பாக சைக்கிள் ஓடிக்கொண்டிருந்த 11 வயது சிறுவனே உயிரிழந்துள்ளான். படுகாயங்களுடன் பலப்பிட்டிய ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிறுவன் உயிரிழந்துள்ளான். அதேவேளை, 06

# 10.7 மில். செலவில் நாட்டுக்கு அழைத்துவரப்பட்ட கோமா நோயாளி

**குணமடைவார் என மனைவி நம்பிக்கை தெரிவிப்பு**

அன்ட்றூ ரொஹான் சௌந்தரநாயகம் கடவத்தையைச் சேர்ந்தவர். சவூதி அரேபியாவின் ரியாத் நகரிலுள்ள கல்ப் வெஸ்ட் கம்பனியில் கடந்த 13 வருடங்களாக விற்பனை மற்றும் சந்தை முகாமையாளராக தொழில்செய்து வந்த இவர் இரண்டு மாதங்களுக்கு முன் திடீரென சுகவீனமுற்று கோமா நிலைக்கு சென்றார். அவரது குடும்பத்தினரின் வேண்டுகோளின் பேரில் அவரை அவரது சவூதி அரேபிய கம்பனி விசேட ஜெட் விமானம் மூலம் 10.7 மில்லியன் ரூபா செலவில் கொழும்புக்கு அனுப்பி வைத்துள்ளது. கொழும்பில் உள்ள தனியார் வைத்தியசாலையில் அவர் இப்போது சிகிச்சை பெற்று வருகிறார்.

இச் சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது, குறிப்பிட்ட நோயாளி கடந்த வியாழக்கிழமை விசேட விமானம் மூலம் இலங்கை வந்தடைந்தார். அவருடன் அதே விமானத்தில் வைத்தியர்களும், உதவியாளர்களும் உடன் வந்தனர். நோயாளி தற்போது நரம்பு வைத்தியர் சுனில் பெரேராவின் கீழ் சிகிச்சை பெற்று வருவதாகவும் அவர் சீக்கிரமே கோமா மயக்க நிலையில் இருந்து விடுபடுவார் என்று நம்புவதாகவும் சௌந்தர நாயகத்தின் மனைவி மார்கரட் தெரிவித்தார்.

# 13 ஆவது திருத்தம் தொடர்பில் இந்தியா கவனம் செலுத்தும்

## தமிழ் கூட்டமைப்பிடம் இந்திய உயர்ஸ்தானிகர் தெரிவிப்பு

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

13 ஆவது அரசியலமைப்பு முழுமையாக இல்லாதொழிக்கப் படுமானால் அது தொடர்பில் இந்தியா கவனம் செலுத்தும் என இலங்கைக்கான புதிய இந்திய உயர்ஸ்தானிகர் தெரிவித்துள்ளார்.

தமிழ் தேசிய கூட்டமைப்பினருடனான சந்திப்பின் போது இது தொடர்பில் கருத்து தெரிவித்துள்ள அவர், வடக்கு, கிழக்கு அரசியல் மற்றும் அபிவிருத்தி நிலவரங்கள் தமிழ் கட்சிகள் இணைந்து செயற்படுவது தொடர்பிலும் கருத்துக்களை புரிந்து கொண்டதாகச் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார்.

13ஆவது அரசியலமைப்பு திருத்தம் இந்தியாவுடன் சம்பந்தப்பட்டுள்ள நிலையில் அரசாங்கம் அதனை முழுமையாக இல்லாதொழிக்க முயற்சிக்காது என குறிப்பிட்டுள்ள அவர், அவ்வாறு இடம்பெறுமானால் அது தொடர்பில் கவனம் செலுத்தப்படும் என்றும் தெரிவித்ததாக சித்தார்த்தன் எம்.பி. தெரிவித்தார். 06

## பாதாள உலக துப்பாக்கிதாரி பொலிஸ் சூட்டில் உயிரிழப்பு

பிரபல பாதாள உலகத்தலைவர் அங்கொட லொக்காவுடைய குழுவின் மற்றுமொரு துப்பாக்கிதாரி பொலிஸாரின் துப்பாக் சூட்டில் உயிரிழந்துள்ளார். 'சமியா' என்ற சமிந்த எதிரிசூரிய என்ற நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். கம்பஹா பகுதியில் வைத்து அவர் சுட்டு கொல்லப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். குறித்த நபர் பொலிஸாரை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ள முயற்சித்த போது அவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இதற்கு முன்னர், 'சொல்டா' என்ற அசித ஹேமதிலக என்ற அங்கொட லொக்காவுடைய குழுவின் பிரதான துப்பாக்கிதாரி பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டது தெரிந்ததே.

ASIA ASSET FINANCE PLC
The unconventional finance company

மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கரவண்டிகளுக்கான
**பிரமாண்ட ஏல விற்பனை**
2020 ஆகஸ்ட் 27ம் திகதி வியாழக்கிழமை
காலை 10.30 மணிக்கு நடைபெறும்
ஆசியா எசெட் பினான்ஸ் பிஎல்சி,
வாகனம் விற்பனை மையம்
இல. 370, காலி வீதி, ராவத்தவத்தை, மொறட்டுவ.

Comprising

| மோட்டார் சைக்கிள் | | |
|---|---|---|
| WP BHK-7985 | Yamaha Ray ZR | 2018 |
| NP BHM-9579 | Yamaha R-15 | 2018 |
| WP BHL-6195 | Yamaha FZ Version 2.0 | 2018 |
| SP BFQ-3196 | YAMAHA FZ 16 | 2017 |
| NP BHW-8716 | YAMAHA FZ | 2019 |
| NP BGN-2561 | YAMAHA FAZZER | 2018 |
| NP BHT-3561 | TVSSTRYKER | 2017 |
| NP BHK-4762 | TVS XL SUPER HD | 2018 |
| NP BHG - 4999 | TVS XL SUPER HD | 2018 |
| NP BHK-6446 | TVS WEGO | 2018 |
| WP BHT-1074 | TVS STRYKER | 2017 |
| SP BHK-2219 | TVS STRYKER | 2018 |
| SP BHF-4358 | TVS NTORQ | 2018 |
| EP BFR-5461 | TVS Metro | 2017 |
| EP BGA-2381 | TVS Metro | 2017 |
| WP BEP-7266 | TVS APACHE 200CC | 2016 |
| WP BHP-4069 | TVS APACHE 200CC | 2017 |
| WP BHK-4713 | TVS APACHE 160 CC | 2018 |
| WP BHP-5203 | TVS Apache 150 | 2018 |
| NP BGD-7646 | TVS APACHE 150 | 2018 |
| SG BGX-5207 | TVS Apache | 2018 |
| NP BHX-9555 | TVS Apache | 2019 |
| NP BCK-1956 | TVS Apache | 2015 |
| NP BFV-0291 | TVS Apache | 2017 |
| WP BHT-3305 | TVS APACHE | 2017 |
| WP BHK-7646 | Suzuki Gixxer 150 | 2018 |
| WP BGR-0018 | SUZUKI GIXXER | 2018 |
| WP BHZ-5812 | Suzuki Burgman | 2019 |
| WP BHZ-5786 | suzuki access 125 | 2018 |
| NP BHU-1018 | PULSAR-200NS | 2019 |
| NP BGH 4047 | PULSAR-200NS | 2017 |
| NP BGM-5239 | PULSAR-200NS | 2018 |
| SP BGG-4475 | MAESTRO EDGE | 2017 |
| SP BFY-2756 | MAESTRO EDGE | 2017 |
| NP BHN-9874 | KTM RC 200 | 2018 |
| NP BCG-8980 | Honda/Activa3G | 2015 |
| NP BAZ-8314 | HONDA DREAM YUGA | 2013 |
| SP BFU-3825 | HONDA DIO | 2017 |
| SP BHE-5372 | HONDA DIO | 2018 |
| SP BGU-4524 | HONDA DIO | 2018 |
| NP BEI-8881 | HONDA CB TWISTER | 2016 |
| NP BGX-4394 | Honda CB SHINE | 2018 |
| NP BFE-7327 | HERO/HF-delux | 2017 |
| NP BDI-0432 | HERO/GLAMOUR | 2015 |
| NP BEL-9545 | HERO/GLAMOUR | 2016 |
| NP BEL-6974 | Hero/Dash | 2016 |
| NP BDA-4800 | Hero/Dash | 2015 |
| NP BFZ 5051 | HERO SPLENDOR ISMART | 2017 |
| NW BBF-6933 | Hero Splender I Smart | 2014 |
| NP BBK-4585 | Hero PLEASURE | 2014 |
| CP BFV-7236 | HERO I SMART 110 | 2017 |
| NW BCG-5078 | HERO HUNK | 2015 |
| WP BHG-7635 | Hero HF Delux | 2018 |
| NP BHU-1572 | HERO DESTINI | 2019 |
| EP BFK-4219 | HERO DASH VX | 2016 |
| WP BES-4642 | HERO DASH VX | 2016 |
| WP BHI-1260 | HERO DASH LX | 2015 |
| WP BHE-3042 | HERO DASH | 2016 |
| WP BFC-3161 | HERO DASH | 2017 |
| EP BGA-6691 | GIXXER-SF | 2017 |
| EP BFS-7698 | GIXXER MOTOR GP | 2017 |
| SP BGD-7550 | DISCOVER 100 4G | 2017 |
| NP BDI-4875 | Bajaj/Pulsar150 | 2015 |
| NP BGD-9345 | BAJAJ V15 | 2016 |
| NP BFX-5039 | Bajaj V.15 | 2017 |
| NP BEE-5240 | Bajaj V 15 | 2016 |
| NP BFF 5812 | Bajaj PULSAR 200 NS | 2017 |
| NW BFA-3992 | BAJAJ PULSAR 180 | 2017 |
| CP BCR-1476 | Bajaj Pulsar 135 | 2015 |
| NP BGQ-0336 | BAJAJ PULSAR | 2018 |
| SP BGC-0592 | BAJAJ CT 100 | 2017 |
| NW BFP-8914 | APACHE 180 | 2017 |

| முச்சக்கரவண்டி | | |
|---|---|---|
| NP YI-8584 | TVS KING | 2010 |
| WP YE 9251 | TVS KING | 2010 |
| WP YF-9903 | TVS KING | 2010 |
| WP YI - 8957 | TVS KING | 2010 |
| WP YO-6011 | TVS KING | 2011 |
| EP YZ-4598 | TVS KING | 2012 |
| EP AAF-5453 | TVS KING | 2012 |
| EP YT-1654 | TVS KING | 2011 |
| EP YJ-2420 | TVS KING | 2010 |
| WP ABC-5228 | TVS KING | 2015 |
| NW AAH - 0846 | BAJAJ RE 205 | 2013 |
| CP QL-1451 | BAJAJ AUTO AR4S | 2007 |
| NW QK- 1992 | BAJAJ AUTO AR4S | 2007 |
| NW QO-0944 | BAJAJ AUTO AR4S | 2008 |
| CP QO-8890 | BAJAJ AUTO AR4S | 2008 |
| CP QV-4246 | BAJAJ AUTO AR4S | 2009 |
| EP QT-3895 | BAJAJ AUTO AR4S | 2009 |
| WP QV-5604 | BAJAJ AUTO AR4S | 2009 |

| கார் | | |
|---|---|---|
| WP CAY-9110 | WagonR FX | 2018 |

2020 ஆகஸ்ட் 25ம் மற்றும் 26ம் திகதி காலை 8.30 மணி முதல் மாலை 5.00 மணிவரை
மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கரவண்டிகளை பார்வையிடலாம்

Buy or Sell in Confidence with
DALLAS KELAART's Auctions (Pvt) Ltd.
146/3, Caldera Gardens, Off Dutugemunu Street, Kohuwela
Tel: 11 4367467, 11 4367111|E-mail: aucslk@gmail.com |www.facebook.com/dkauctionslk

தினகரன் THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ்: 2429270, 2429329, விளம்பர முகாமையாளர்: 2429321

சார்வரி வருடம் ஆவணி மாதம் 08ஆம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1442 முஹர்ரம் பிறை 04

### குறள் தரும் சிந்தனை



செயற்பால தோரும் அறனே ஒருவற்கு
உயற்பால தோரும் பழி

ஒருவன் வாழ்நாளில் முயற்சி மேற்கொண்டு செய்யத்தக்கது அறமே. செய்யாமல் காத்து கொள்ளத்தக்கது பழியே.

## தொழில் சந்தைக்கு ஏற்ற வகையில் கல்வித் துறையில் மாற்றம் தேவை

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டுள்ள கல்வி நிறுவனங்களில் கல்வி கற்று, பட்டம் பெற்றுள்ள அனைத்துப் பட்டதாரிகளுக்கும் உரிய வகையில் நியமனங்களை வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சரும் சபை முதல்வருமான தினேஷ் குணவர்த்தன பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே வழங்கப்பட்டிருந்த உறுதிமொழிக்கு அமைய நாட்டில் அறுபதாயிரம் பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கப்படும் என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டி உள்ளார். முன்னைய அரசாங்கம் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதில் அலட்சியமாக செயற்பட்டதை சுட்டிக்காட்டியுள்ள தினேஷ் குணவர்த்தன, பட்டதாரிகள் எவருக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் அரசாங்கம் திட்டத்தை முன்னெடுக்கும் என்றும் உறுதி அளித்துள்ளார்.

பட்டதாரிகளுக்கு தொழில்வாய்ப்பு வழங்கப்படாதது நாட்டில் நீண்ட காலமாக தீர்க்கப்படாத பிரச்சனையாக இருந்து வருகிறது. பட்டதாரிகளின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டு செல்வதற்கேற்ப நாட்டில் தொழில் வாய்ப்புகள் பெருகாமல் இருப்பதே இதற்கான முக்கிய காரணமாகும்.

முன்னைய காலங்களில் அரசாங்க பல்கலைக்கழகங்களில் உள்வாரி மாணவர்கள் மாத்திரமே பட்டம் பெற்று வெளியேறுதல் வழமையாக இருந்தது. எனவே குறைந்தளவானோரே பட்டம் பெற்று வெளியேறினர். அவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதும் இயலுமானதாக இருந்தது.

ஆனால் காலப்போக்கில் இந்த நிலைமையில் மாற்றம் ஏற்பட்டது. வெளிவாரி பட்டப்படிப்பு முறைமை ஏற்படுத்தப்பட்டதன் காரணமாக பெருமளவான மாணவர்களால் ஏதோ ஒரு துறையில் பட்டம் பெற்றுக் கொள்ள முடிந்தது. மற்றொரு புறத்தில் திறந்த பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது. இதன் காரணமாக க.பொ.த உயர்தரத்தில் சித்தி பெற்றவர்கள் பட்டம் பெற்றுக் கொள்ள முடியுமானதாக இருந்தது.

இவற்றின் காரணமாக நாட்டில் பட்டதாரிகளின் எண்ணிக்கை வகைதொகையின்றி அதிகரித்துச் சென்றது. ஆனால் அவர்கள் அனைவருக்கும் வேலைவாய்ப்பு வழங்குவது முடியாத காரியமாக இருந்தது. இவ்வாறு பட்டம் பெறுபவர்களில் கூடுதலானோர் கலைத்துறையினர் என்பது குறிப்பிடத்தக்கது. இன்றைய வேலைவாய்ப்புச் சந்தையை பொறுத்தவரை கலைத்துறையில் பட்டம் பெறுபவர்கள் தொழில்வாய்ப்பை தேடிக் கொள்வது மிகவும் சிரமமானதாகும். பட்டதாரிகள் அனைவருக்கும் ஆசிரிய நியமனம் வழங்குவதோ அல்லது ஏனைய அரச நியமனங்களை வழங்குவதோ சாத்தியமானதல்ல.

தொழில்வாய்ப்பை இலக்கு வைத்த கல்வியை கற்பதில் எமது மாணவர்கள் கூடுதலாக நாட்டம் செலுத்துவது இல்லை. ஏதேனும் ஒரு துறையில் பட்டம் ஒன்றை பெற்று விட்டால் போதும் என்ற மனநிலையிலேயே இன்றைய மாணவர்களில் கூடுதலானோர் உள்ளனர். பட்டம் ஒன்றை பெற்று விட்ட பின்னர் எவ்வாறாவது அரசாங்க நியமனம் ஒன்று தங்களுக்குக் கிடைக்கும் என்பது மாணவர்களது நம்பிக்கையாகும்.

இலங்கையில் இவ்வாறு நீண்ட காலமாக தொடர்ந்து வந்த நவீன காலத்துக்குப் பொருத்தமற்ற கல்வித் திட்டம் காரணமாகவே பட்டதாரிகளின் எண்ணிக்கை அதிகரித்ததுடன் அவர்கள் அனைவருக்கும் வேலைவாய்ப்பு வழங்குவதும் சிக்கலான விடயமாகிப் போயுள்ளது.

ஆனாலும் புதிதாக பதவி ஏற்றுள்ள அரசாங்கம் பட்டதாரிகளை கைவிடுவதற்கு தயாராக இல்லை என்பது உறுதியாகத் தெரிகிறது. கல்வி முறையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்பது அரசாங்கத்தின் உறுதியான கொள்கையாக இருக்கின்றது. கல்வி அமைச்சர் ஜி.எல் பீரிஸ் இது குறித்து சில தினங்களுக்கு முன்னர் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. கல்வித்துறையில் மாற்றங்களை ஏற்படுத்துவது ஒருபுறமிருந்த போதிலும், ஏற்கனவே பட்டம் பெற்றுள்ள பட்டதாரிகளை கைவிடுவதற்கு அரசாங்கம் தயாராக இல்லை. அவர்களுக்கு பொருத்தமான தொழில்வாய்ப்பை வழங்குவது என்ற முடிவில் அரசாங்கம் உறுதியாகவே உள்ளது. இது குறித்து எதிரணியினர் சில தினங்களாக தவறான பிரசாரங்களை முன்னெடுத்து வருவது தெரிகின்றது. ஆனாலும் தகுதியுடைய பட்டதாரிகள் அனைவருக்கும் தொழில் வழங்கப்படும் என்று அரசாங்கம் வழங்கிய உறுதிமொழியில் மாற்றம் கிடையாது என்று அமைச்சர் தினேஷ் குணவர்த்தன உறுதியளித்திருப்பது பட்டதாரிகளுக்கு நிம்மதி தருகின்ற செய்தியாகும்.

இதேவேளை இவ்வாறு அனைவருக்கும் நியமனம் வழங்கப்பட்டாலும் கூட பட்டதாரிகளுக்கு தொழில் வாய்ப்பு வழங்குவது எதிர்காலத்திலும் தொடர்கின்ற ஒரு பிரச்சினையாகவே இருக்கப் போகின்றது. இவ்விடயத்தில் அரசாங்கம் இரு விடயங்களை கவனத்தில் கொள்வது அவசியமாகும். முதலாவதாக இன்றைய நவீன உலகுக்கு பொருத்தமான துறைகளில் மாணவர்கள் பட்டம் பெறும் வகையில் கல்வித்துறையில் மாற்றங்கள் செய்யப்பட வேண்டும்.

இரண்டாவதாக அரசாங்கத் துறையில் மாத்திரமன்றி தனியார் துறையிலும் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கக் கூடிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். தனியார் முதலீடுகளை ஊக்குவிப்பதன் மூலம் பட்டதாரிகளுக்கான தொழில் துறையை அதிகரிக்கக் கூடியதாக இருக்கும். எவ்வாறாக இருந்த போதிலும், கடந்த காலத்தில் புறக்கணிக்கப்பட்ட பட்டதாரிகளுக்கு தற்போது வேலைவாய்ப்பு கிடைக்க இருப்பது நல்லதொரு செய்தியாகும்.

editor.tkn@lakehouse.lk

# விருட்சமாக வளர்ந்த வாகை மரங்களால் தோட்டத் தொழிலாளருக்கு பேராபத்து

## எந்நேரமும் சரிந்து விழும் மரங்கள், எங்குமே குளவிக் கூடுகள், தேயிலை செடிகள் வளர்வதிலும் பாதிப்பு



கண்டி, ஹந்தான குறுப் தோட்டத்தில் உள்ள தேயிலை மலைகளில் வாகை இனத்துக்குரிய மரங்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. இந்த மரங்கள் நடப்பட்டவை அல்ல, தானாக முளைத்தவை ஆகும்.

இருபது வருடங்களுக்கு மேல் வயதுடைய இந்த மரங்கள் வளர்ந்து இப்போது பெரும் விருட்சங்களாக உள்ளன. அண்மையில் வீசிய கடும் காற்றின் போது ஒரு மணித்தியாலத்திக்குள் நூற்றுக்கும் அதிகமான மரங்கள் வேரோடு சரிந்து வீழ்ந்து பெரும் பாதிப்பை ஏற்படுத்தின. இம் மரங்கள் தொழிலாளர்களது குடியிருப்புகளின் கூரைகளிலும் வீழ்ந்து சேத்தை ஏற்ப்படுத்தின.

இதன் வேர்கள் மண்ணில் ஆழமாக ஊடுருவுவதில்லை. கற்பாறைகளிலும் கற்குவியல்களிலும் வங்கிகளிலும் இம் மரங்கள் வளர்ந்துள்ளன. மண்ணில் உறுதியான பிடிமானம் இன்மையால் இவை சிறிய காற்றிலும் சரிந்து வீழ்கின்றன.

தொழிலாளர்கள் தொழிலில் ஈடுபட்டுக் கொன்டு இருக்கும்போதும் மரங்களின் கிளைகள் முறிந்து விழுகின்றன. மரங்கள் வேரோடும் சாய்கின்றன. இதன் காரணமாக மிக அச்சத்துடனேயே தொழிலாளர்கள் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த வாகையின மரங்கள் அதிகம் பூக்கும் ஒரு இனமாகும். இதனால் தேனீக்கள், குளவிகள் இவற்றில் கூடு கட்டி வாழ்கின்றன. நூற்றுக்கணக்கான குளவிக் கூடுகள் இந்த மரங்களில் காணப்படுகின்றன. இதனால் தொழிலாளர்கள் அடிக்கடி குளவிகளின் தாக்குதலுக்கு உள்ளாகி வருகின்றனர்.

கண்டி_கலஹா குறுந்தூர பிரதான பாதையில் இந்தத் தோட்டம் அமைந்துள்ளது. இப்பாதையோர தேயிலை மலைகளிலும் பெரிய மரங்கள் நூற்றுக் கணக்கில் உள்ளன. மரங்கள் வேருடன் சரிந்து வீழ்ந்தும், பெரும் மரக்கிளைகள் உடைந்து வீழ்ந்தும் அடிக்கடி பாதையில் போக்குவரத்து தடைப்படுகின்றது.

தொழிலாளர்களது குடியிருப்புகளுக்கு அருகில் அதிகமாக இந்த மரங்கள் உள்ளன. வெஸ்ட் டிவிசன், மூன்றாம் கட்டை டொப்டிவிசன் ஆகிய தோட்டப் பிரிவுகளிலேயே அதிகமான மரங்கள் காணப்படுகின்றன. இந்த மரங்களை தறித்து அகற்றி தமக்கு பாதுகாப்பை பெற்றுத் தரும்படி தொழிலாளர்கள் வேண்டுகோள் விடுத்து வருகின்ற போதும், இதுதொடர்பாக தோட்ட நிர்வாகமோ அனர்த்த முகாமைத்துவ திணைக்களமோ இதுவரையில் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.



ஜனவசம நிர்வாகத்தின் கீழ் இந்தத் தோட்டம் உள்ளது. வாகை மரங்கள் அதிகம் காணப்படுவதால் தேயிலைச் செடிகள் பல்வேறு விதத்திலும் பாதிப்புக்கு உள்ளாகி தேயிலை விளைச்சல் குறைவடைந்துள்ளது. அதிக நிழல் என்பதால் தேயிலைச் செடிகள் வளர்வதில்லை.

வாகை இலைகள் தேயிலைச் செடி மீது வீழ்வதாலும், மரக் கிளைகள் உடைந்து வீழ்வதாலும தேயிலைச் செடிகள் பாதிப்படைந்து வருகின்றன .

மரத்தின் வேர் மண்ணின் மேற் பகுதியில் செல்வதால் தேயிலைச் செடிகளுக்கான பசளை, நீர் என்பவற்றை இவை உறிஞ்சி எடுத்துக் கொள்கின்றன. இதனால் தேயிலைச் செடிகளின் வளர்ச்சி பாதிக்கப்படுகின்றது. இந்த மரங்களில் இருந்து எதுவித பயனும் பெறப்படுவதில்லை. இது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்கள் ஆராய்ந்து தொழிலாளர்களை பாதுகாப்பதுடன் தேயிலைச் செடிகளையும் பாதுகாக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்படுகின்றது.

ஆர் நவராஜா
தெல்தோட்டை தினகரன் நிருபர்

# காங்கிரஸ் தேய்ந்து கட்டெறும்பு ஆனது

## அடுத்த தலைவர் யார்?

### பரபரப்பான சூழ்நிலையில் இன்று கூடுகிறது செயற்குழு



காங்கிரஸ் கட்சியில் இன்று நடைபெற உள்ள காரிய கமிட்டி கூட்டத்தில் மிக முக்கியமான முடிவுகள் எடுக்கப்பட வாய்ப்புள்ளது என்று கூறப்படுகிறது. காங்கிரஸ் கட்சியின் தலைவர் யார் என்ற கேள்வி கடந்த ஒரு வருடமாகவே விவாதம் செய்யப்பட்டு வந்தது.

ராகுல் காந்தி காங்கிரஸ் தலைவர் பதவியில் இருந்து விலகிய பின்னர் அதன் தலைமைக்கு பெரிய வெற்றிடம் ஏற்பட்டது. என்ன நடந்தாலும் மீண்டும் காங்கிரஸ் தலைவராக பதவி ஏற்க மாட்டேன் என்று ராகுல் அறிவித்து விட்டார். இந்த நிலையில் தற்போது சோனியா காந்தி இடைக்கால தலைவராக இருக்கிறார். ஆனால் இவரும் கூட வேண்டா வெறுப்பாகவே இடைக்கால தலைவராக இருப்பதாகக் கூறுகிறார்கள்.

இந்த நிலையில்தான் காங்கிரஸ் கட்சிக்குள் சிரேஷ்டர்கள் பலர் கடும் குழப்பத்தில் இருக்கிறார்கள். தற்போது இருக்கும் இடைக்கால தலைவர் சோனியா காந்தி வலிமையான முடிவுகளை எடுப்பதில்லை. ஒரு பேட்டி கூட அவர் கொடுப்பது இல்லை. கட்சியில் ஏதாவது பெரிய பிரச்சினை என்றால் அவர் முடிவு எடுப்பது இல்லை, அனைத்திற்கும் தயக்கம் காட்டுகிறார். சோனியா அவ்வளவு சுறுசுறுப்பாக இப்போது இல்லை என்று காங்கிரஸ் சிரேஷ்ட தலைவர்கள் கூறுகிறார்கள்.

இதனால் காங்கிரஸ் கட்சிக்கு அதிரடியான தலைவர் ஒருவர்தான் தேவை என்று சிரேஷ்ட தலைவர்கள் கூறுவதாகத் தெரிகிறது. சோனியா, ராகுல், பிரியங்கா இல்லாமல் வேறு ஒருவர் தலைமை பொறுப்புக்கு வர வேண்டும். மொத்தமாக காரிய கமிட்டியில் மாற்றத்தை கொண்டு வர வேண்டும். அனைத்து மாநில காங்கிரஸ் கட்சியிலும் புதிய தலைவர்களை, செயலாளர்களை களமிறக்க வேண்டும், என்று சிரேஷ்ட தலைவர்கள் கோரிக்கை வைத்துள்ளனர்.



அதிலும் சோனியா காந்தி, ராகுல் காந்தி என்று மொத்தமாக நேரு குடும்பத்திற்கு எதிராக சிரேஷ்ட தலைவர்கள் கொதித்துப் போய் உள்ளதாக கூறுகிறார்கள். ராகுலும், சோனியாவும் கடந்த ஒன்றரை வருடமாக எதுவும் செய்யவில்லை. மாநிலங்களில் தேர்தலில் வென்றும் கூட ஆட்சியை இழந்து வருகிறோம். ஆனால் இதற்கு இவர்கள் எதுவும் செய்யவில்லை. இதனால் தலைமைக்கு பொறுப்பான தலைவர் ஒருவரை கொண்டு வர வேண்டும் என்று சிரேஷ்ட தலைவர்கள் கூறி வருகிறார்கள் .

இன்று காங்கிரஸ் கட்சி சார்பாக காரிய கமிட்டி கூட்டம் நடக்கிறது. இந்த கூட்டம் முழுக்க முழுக்க சோனியா மற்றும் சிரேஷ்ட தலைவர்கள் என்பதை மட்டுமே மையமாக வைத்து நடக்கும் என்கிறார்கள். சோனியா ஒன்று பதவி விலகி புதிய தலைவருக்கு வழி வகுக்க வேண்டும். அல்லது சோனியாவிற்கு ஆதரவாக முடிவு எடுக்கக் கூடிய அதிகாரம் கொண்ட இரண்டு துணை தலைவர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்பதுதான் இந்த கூட்டத்தின் கோரிக்கை என்கிறார்கள்.

சோனியாவிற்கு எதிரான கூட்டமாகவே இது பார்க்கப்படுகிறது. அதிலும் சோனியாவிற்கு எதிராக 23 மூத்த தலைவர்கள் களமிறங்கி உள்ளனர் என்ற தகவலும் கூட காங்கிரஸ் தலைமை இடையே பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. காங்கிரஸ் இன்றைய தினமே இந்த கூட்டத்தில் முக்கிய முடிவு எடுக்கப்படும் என்று கூறுகிறார்கள். இன்று காங்கிரஸ் தலைவருக்கான தேர்தல் குறித்த அறிவிப்புகள் வெளியாகலாம் என்றும் கூறுகிறார்கள்.

காங்கிரஸ் கட்சியின் தலைவர் சோனியா காந்திக்கு காங்கிரஸ் கட்சியின் 23 மூத்த தலைவர்கள் கடிதம் எழுதி உள்ளனர். காங்கிரஸ் காரிய கமிட்டி கூட்டத்தை நடத்த வேண்டும் என்று இவர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

காங்கிரஸ் கட்சிக்குள் தற்போது மூத்த தலைவர்கள் இடையே கடுமையான மோதலும், கருத்து வேறுபாடும் நிலவி வருகிறது. அதிலும் மாநிலங்களில் உயர் பதவிகளை வகிக்கும் தலைவர்கள் இடையே கடுமையான கருத்து வேறுபாடு நிலவி வருகிறது.

தற்போது தேசிய அளவில் இது எதிரொலிக்க தொடங்கி இருக்கிறது. காங்கிரஸ் கட்சியின் அடுத்த தேசிய தலைவர் யார் என்பது தொடர்பான தீவிரமான விவாதங்கள் எழுந்துள்ளது

காங்கிரஸ் கட்சி சார்பாக கடந்த முறை நடந்த காரிய கமிட்டி கூட்டத்திலேயே இது தொடர்பான விவாதங்கள் எழுந்தது. காங்கிரஸ் மூத்த தலைவர்கள் சிலர், புதிய தலைவரை உடனே தேர்வு செய்ய வேண்டும் என்று அழுத்தம் கொடுத்ததாக கூறப்படுகிறது. அடுத்த வருடம் பல்வேறு மாநில தேர்தல்கள் வருகிறது. இந்த தேர்தல்களை எதிர்கொள்ள புதிய தலைவர்களை நியமிக்க வேண்டும், என்று மூத்த தலைவர்கள் சிலர் கோரிக்கை வைத்து வருகிறார்கள்.

முறையாக பொறுப்பேற்ற திறமையான தலைவர் வேண்டும். இடைக்கால தலைவர் கிடையாது. களத்தில் இறங்கி பணிகளை செய்யும் நபர் ஒருவர்தான் எங்களுக்கு தலைவராக வேண்டும், என்று இவர்கள் கோரிக்கை வைத்துள்ளனர். ஆனால் ராகுல் காந்தி காங்கிரஸ் தலைவராகும் திட்டத்தில் இல்லை. சோனியா காந்தியும் முழு நேர தலைவராக வாய்ப்பு இல்லை என்று கூறுகிறார்கள்.

இதனால் காங்கிரஸ் கட்சிக்கு மன்மோகன் சிங் அல்லது ஏகே ஆண்டனியை தலைவராக தேர்வு செய்ய சில மூத்த உறுப்பினர்கள் முயல்வதாக கூறப்படுகிறது. இன்னும் சில தலைவர்கள் ப. சிதம்பரம், சசி தரூர் ஆகியோர் தலைவராக வேண்டும் என்று கோரிக்கை வைத்து வருகிறார்கள். பிரியங்கா காந்தி, சச்சின் பைலட் தலைவராக வேண்டும் என்றும் சிலர் கோரிக்கை வைத்து வருகிறார்கள்.

இன்னொரு பக்கம் மாநில காங்கிரஸ் கட்சிக்குள் நிறைய குழப்பங்களும், மோதல்களும் நிலவி வருகின்றன. இதிலும் நிறைய மாற்றங்களை செய்ய வேண்டும். மாநில காங்கிரஸ் கட்சிக்கு உள்ளே தேர்தலை நடத்த வேண்டும். நாடு முழுக்க மாநில காங்கிரஸ் கட்சியில் தேர்தலை நடத்த வேண்டும். மாநில காங்கிரஸ் கட்சிக்குள் மாற்றங்களை, சீர் திருத்தங்களை செய்ய வேண்டும் என்று இவர்கள் கோரிக்கை வைத்துள்ளனர்.

இதற்காக காங்கிரஸ் கமிட்டி கூட்டத்தை நடத்த வேண்டும் என்று சோனியா காந்திக்கு காங்கிரஸ் கட்சியின் 23 மூத்த தலைவர்கள் கடிதம் எழுதி உள்ளனர். ஆனால் இந்த தகவலை சில காங்கிரஸ் மூத்த தலைவர்கள் மறுத்து வருகிறார்கள். அப்படிப்பட்ட கூட்டம் எதற்கும் திட்டமிடவில்லை, கடிதங்கள் எதுவும் பரிமாறப்படவில்லை என்று ரன்தீப் சிங் சுர்ஜ்வாலா உள்ளிட்ட மூத்த காங்கிரஸ் தலைவர்கள் மறுத்துள்ளனர்.

## சோனியாவுக்கு எதிராக சிரேஷ்ட தலைவர்கள் 23 பேர் போர்க் கொடி

# குருநாகல் மாவட்ட அபிவிருத்தி: பிரதமர் மஹிந்த ஆலோசனை

**யாபஹுவ, பண்டுவஸ்நுவர மற்றும் குருநாகல் ஆகிய இடங்களை சுற்றுலாத் தலங்களாக அபிவிருத்தி செய்வது தொடர்பான ஆலோசனைகளை சுற்றுலாத்துறை அமைச்சருக்கு முன்வைப்பதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் (2020.08.22) தெரிவித்தார்.**

## மக்கள் எதிர்நோக்கும் குறைபாடுகளை தீர்த்து வைக்கவும் உடனடி பணிப்புரை

குருநாகல், மொரகொல்லாகம, சியம்பலன்கமுவவில் நடைபெற்ற மக்கள் சந்திப்பின் போது கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மஹவ, பொல்பித்திகம கல்வி வலயத்திலுள்ள பாடசாலைகளில் காணப்படும் பௌதிக பிரச்சினைகளை விரைவாகக் கண்டறிந்து அதற்குத் தீர்வை பெற்றுக் கொடுக்குமாறு வடமேல் மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம்.முசம்மிலுக்கு பிரதமர் இதன் போது அறிவுறுத்தினார்.

கும்புக்கடவல வீதி மற்றும் காட்டு யானைகளின் தாக்குதல்கள் காரணமாக பாதிக்கப்பட்ட தலாகல கிராமத்திற்குச் செல்லும் வீதி ஆகியவற்றை விரைவாக அபிவிருத்தி செய்யுமாறு தெரிவித்த பிரதமர், மின்சாரம் இல்லாத பகுதிகளுக்கு மின்சாரத்தை பெற்றுக் கொடுக்கவும், காணிப் பிரச்சினையை தீர்த்து சியம்பலன்கமுவ வைத்தியசாலைக்கு அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்கான ஆலோசனைகளையும் வழங்கினார்.

குறித்த நிகழ்வில் கலந்து கொண்டிருந்த ஹிரியாகல ஹத்பத்துவே தலைமை நீதிமன்ற சங்கநாயக்கர் திஹவ கஸ்ஸன் தளுபொத மற்றும் நாகொல்ல ரஜமஹா விகாரைகளின் தலைமை விகாராதிபதி கனேகொட ரதனஜோதி தேரர் அனுசாசனம் நிகழ்த்தினர்.

ஐக்கிய தேசியக் கட்சி வெளிநாட்டு நலன்களுக்கு ஏற்ப செயல்படும் போது, அதிலிருந்து வெளியேறிய டீ.ஏ.ராஜபக்ஷ மற்றும் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை ஸ்தாபித்தமையை நினைவு கூர்ந்த ரதனஜோதி தேரர், பின்னர் சிறிமாவோ பண்டாரநாயக்க அவர்களின் வேலைத் திட்டங்களுக்கு அவரது பிள்ளைகளின் ஆதரவே கிட்டாத நிலையில், பெலியத்த பகுதியினுடாக பாராளுமன்றத்திற்கு தெரிவான மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் கட்சியை பாதுகாக்க நடவடிக்கை மேற்கொண்டமையையும் நினைவு கூர்ந்தார்.

1988/89 காலப் பகுதியில் அப்போதைய அரசாங்கம் இடதுசாரி அரசியல்வாதிகளை படுகொலை செய்த போது, அதற்கு எதிராக குரல் எழுப்பிய மஹிந்த ராஜபக்ஷ, மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு வீதியில் இறங்கி போராட்டங்களை நடத்துவதற்கு மக்களுக்கு தலைமைத்துவம் வழங்கியிருந்ததாகவும் கூறினார்.

யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருமாறு நாட்டு மக்கள் கோரிய போது அன்றைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது சகோதரரை பாதுகாப்புச் செயலாளராக நியமித்ததன் மூலம் போரின் வெற்றியை உறுதி செய்ய நடவடிக்கை எடுத்தார் என்றும், அவரது தலைமையின் கீழேயே வடக்கு மற்றும் கிழக்கு உட்பட முழு நாடும் அபிவிருத்தியை நோக்கி முன்னேற முடிந்தது என்றும் அவர் நினைவு கூர்ந்தார். சந்திரிகா, ரணில், சம்பிக்க, மங்கள மற்றும் ராஜித ஆகியோர் வெளிநாட்டு சக்திகளுடன் இணைந்து ஸ்ரீ.சு.க செயலாளரை சிங்கப்பூருக்கு அழைத்துச் சென்று பேச்சுவார்த்தை நடத்தி கட்சியிலிருந்து வெளியேற்றி ஐக்கிய தேசியக் கட்சியை வேறாக்கியதாகவும், அன்று தோல்வியடைந்து மெதமுலனைக்கு சென்ற மஹிந்த ராஜபக்ஷவை மீண்டும் நாட்டின் தலைமைக்கு வருமாறு மக்கள் அழைத்ததாகவும் தேரர் குறிப்பிட்டார்.

மக்கள் அத்தகைய வேண்டுகோளை விடுத்துக் கொண்டிருந்த நேரத்தில், ராஜபக்ஷக்களை வீதிகள் தோறும் நடக்க வைக்க வேண்டும் என ராஜித போன்றோர் குறிப்பிட்டதாக நினைவுபடுத்திய ரதனஜோதி தேரர், ஆனால் அதற்கு மக்கள் இடமளிக்கவில்லை என தெரிவித்தார்.

நல்லாட்சியின் காலத்தில் ஹம்பாந்தோட்டை துறைமுகம் விற்கப்பட்டது என்றும் மத்தல விமான நிலையத்தில் நெல்லை களஞ்சியப்படுத்தி குறைமதிப்பிற்கு உட்படுத்தப்பட்டது என்றும் எப்.சி.ஐ.டி. அமைத்து ராஜபக்ஷக்களை அரசியலிலிருந்து வெளியேற்ற சதி தீட்டிக் கொண்டிருந்த வேளையிலேயே ஜனாதிபதி தேர்தல் வந்ததாகவும் அவர் கூறினார்.

இந்த நேரத்தில் நாட்டுக்கு ஒரு நல்ல தலைமைத்துவத்தை வழங்குமாறு மக்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கோரினர். அவர் தனது சகோதரரை அழைத்து நாட்டைப் பொறுப்பேற்குமாறு கூறினார். அதற்கு நாட்டின் 69 இலட்சம் என்ற பெரும்பான்மை மக்கள் தங்கள் விருப்பத்தை வெளியிட்டனர். கடந்த பொதுத் தேர்தலில் 5 இலட்சத்திற்கும் அதிகமான விருப்பு வாக்குகளை பெற்றுக் கொடுத்து மஹிந்த ராஜபக்ஷ அவர்களை இந்த குருநாகல் பிரதேச மக்கள் பிரதமராகத் தேர்ந்தெடுத்தனர். நீங்கள் கோரிய பலத்தை மக்கள் உங்களுக்கு வழங்கியுள்ளனர். தற்போது நாட்டு மக்களின் தேவைகளை நீங்கள் பூர்த்தி செய்ய வேண்டும் என்று ஹிரியாகல ஹத்பத்துவே தலைமை நீதிமன்ற சங்கநாயக்கர் திஹவ கஸ்ஸன் தளுபொத தேரர் மற்றும் நாகொல்ல ரஜமஹா விகாரைகளின் தலைமை விகாராதிபதி கனேகொட ரதனஜோதி தேரர் ஆகியோர் கேட்டுக் கொண்டனர்.

இந்த நிகழ்வில் ஹிரியாகல ஹத்பத்துவ தலைமை நீதிமன்ற சங்கநாயக்கர் திஹவ கஸ்ஸன் தளுபொத மற்றும் நாகொல்ல ரஜமஹா விகாரையின் உபய விகாராதிபதி கனேகொட ரதனஜோதி தேரர், மெதகொட அபயதிஸ்ஸ தேரர் உள்ளிட்ட மஹாசங்கத்தினர், வடமேல் மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம். முசம்மில், நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாந்து, காணி அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன, கால்நடை பண்ணை மேம்பாடு மற்றும் பால் கைத்தொழில் துறை அமைச்சர் டீ.பீ.ஹேரத், பாராளுமன்ற உறுப்பினர் அசங்க நவரத்ன, வட மத்திய மாகாணத்தின் முன்னாள் முதல்வர் எஸ்.எம். ரஞ்சித், பிரதேச அரசியல்வாதிகள், அரச அதிகாரிகள் மற்றும் பிரதேச மக்கள் பலர் கலந்து கொண்டனர்.









**பிரதமர் ஊடக பிரிவு**

# 'தமிழ்க் கூட்டமைப்புக்கு அம்பாறை குத்தகைக்கு கொடுக்கப்படவில்லை'

**தமிழ்க் கூட்டமைப்பினர் பாராளுமன்றம் சென்றாலும் பொம்மையாகவே இருப்பர் என்பது அனுபவ பாடம்' கிழக்குத் தமிழர் கூட்டமைப்புத் தலைவர் தம்பியப்பா கோபாலகிருஷ்ணன் அம்பாறை மாவட்டத் தமிழர்களுக்குப் பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் பறிபோனதற்கு மாவை சேனாதிராசா காரணமாவார். இந்த வரலாற்று மற்றும் அரசியல் விடயங்களையெல்லாம் புரிந்து கொள்ளும் வல்லமையற்றவராக கலையரசன் உள்ளார்'.**



## கிழக்குத் தமிழர் கூட்டமைப்புத் தலைவர் தம்பியப்பா கோபாலகிருஷ்ணன்

இவ்வாறு கிழக்குத் தமிழர் கூட்டமைப்புத் தலைவர் தம்பியப்பா கோபாலகிருஷ்ணன் கருத்து வெளியிட்டார்.

"அம்பாறை மாவட்டத் தமிழர்களின் பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்குச் சீதனம் கொடுக்கப்படவில்லை. குத்தகைக்குக் கொடுக்கப்படவும் இல்லை. கருணா அம்மான் வெற்றி பெற்றிருந்தால் அப்பிரதிநிதித்துவம் காப்பாற்றப்படாமல் போயிருக்குமா? அரசியல் ஞானமின்றி இவ்வாறெல்லாம் பேசக் கூடாது" என்றும் கோபாலகிருஷ்ணன் தெரிவித்தார்.

"அரைகுறையான கருத்தினால் தமிழ் மக்கள் தவறாக வழிநடத்தப்படக்கூடாது. கிழக்குத் தமிழர் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான அகில இலங்கை தமிழர் மகாசபை இந்தத் தேர்தலில் திகாமடுல்ல (அம்பாறை) மாவட்டத்தில் தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் தலைவர் விநாயகமூர்த்தி முரளிதரனை (கருணா அம்மான்) களமிறக்கக் காரணங்கள் பல உள்ளன.

அம்பாறை மாவட்டத் தமிழர்களைப் பொறுத்தவரை அவர்கள் எதிர்நோக்கும் தனித்துவமான பிரச்சினைகளுக்குத் தீர்வினைப் பெற்றுத் தரக் கூடிய பாராளுமன்றப் பிரதிநிதியாகவும், துணிச்சல் மிக்கவராகவும், அதிகாரத்திலுள்ளவர்களுடன் செல்வாக்கு மிக்கவராகவும் ஒருவர் இருக்க வேண்டும் என்று நாம் கருதினோம்.

அதற்குப் பொருத்தமானவர் கருணா அம்மானே. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் எவர் பாராளுமன்றம் சென்றாலும் அவர் ஒரு பொம்மையாகப் பெயருக்கு இருப்பாரே தவிர அவரால் எந்தச் சிறு பிரச்சினைக்கும் தீர்வினைத் தேடித் தர முடியாது என்பது கடந்த கால அனுபவமாகும். ஆகவே சமூக அக்கறையோடும் தூர நோக்குடனும்தான் கருணா அம்மானை அம்பாறையில் அகில இலங்கை தமிழர் மகாசபை களமிறக்கியதே தவிர, தமிழர்களின் வாக்குகளைப் பிரிப்பதற்காகவல்ல.

மேலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கருணா அம்மானுக்கு எதிராக முன்வைத்த 'மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து ஏன் கருணா அம்மான் அம்பாறைக்கு வர வேண்டும்?

கருணா அம்மான் துரோகி' என்கின்ற இரு குற்றச்சாட்டுகளையும் புறந்தள்ளி அவருக்கு அம்பாறை மாவட்டத் தமிழர்களால் 29, 379 வாக்குகள் அளிக்கப்பட்டுள்ளன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு விழுந்த 25, 255 வாக்குகளை விட இது 4,124 வாக்குகள் அதிகமானதாகும். ஆகவே வாக்குகளைப் பிரித்தது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே. அம்பாறை மாவட்டத் தமிழர்களின் பிரதிநிதித்துவம் பறிபோனமைக்கான பொறுப்பைத் தமிழ்த் தேசியக்

கூட்டமைப்பே ஏற்க வேண்டும். அன்றியும் அம்பாறை மாவட்டத் தமிழர்களின் பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்குச் சீதனம் கொடுக்கப்படவில்லை" என்று கோபாலகிருஷ்ணன் மேலும் குறிப்பிட்டார்.

"அன்று யாழ்ப்பாணம் மாவட்டத்தைச் சேர்ந்த மாவை சேனாதிராசா அம்பாறை மாவட்டத்தில் போட்டியிட்ட போது கண்களை மூடிக் கொண்டு கட்சி விசுவாசம் காரணமாக வாய்மூடி மௌனியாய் இருந்தார்கள். இன்று அம்பாறை மாவட்டத்துடன் தொப்புள் கொடி உறவுடைய மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த கருணா அம்மான் அம்பாறை மாவட்டத்தில் தேர்தலில் நின்ற போது கூச்சலிட்டார்கள்.

இவர்கள் பேசுகின்ற போலித் தமிழ்த் தேசியம் இதுதான்.

கடந்த எழுபது வருட காலமாகத் தமிழ்த் தேசியம் என்கின்ற வெற்றுக் கோஷத்தை நம்பி ஆரம்பத்தில் தமிழரசுக் கட்சிக்கும் இடைக்காலத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும்

தற்போது மீண்டும் தமிழரசுக் கட்சிக்கும் (தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு) கண்களை மூடிக் கொண்டு வாக்களித்து வரும் கிழக்கு மாகாணத் தமிழர்கள் இதனையிட்டு சிந்திக்க வேண்டும்".

இவ்வாறு கோபாலகிருஷ்ணன் மேலும் குறிப்பிட்டார்.

**காரைதீவு குறூப் நிருபர்**

# தகரக் கொட்டகைக்குள் ஒரு கல்விக் கூடம்

## கொடுவாமடு பல்கலைக்கழக மாணவியின் தன்னலம் கருதாத சமூகப் பணி

செல்வந்தர்கள் தமது பிள்ளைகளை வசதி வாய்ப்புகளுடன் கற்பித்து வரும் கல்வி யுகத்தில் நாம் வாழ்கிறோம். இந்நிலையில் தகரக் கொட்டகை ஒன்றை அமைத்து தன்னலம் கருதாது கற்பித்து வருகின்றார் மட்டக்களப்பு மாவட்டம், ஏறாவூர் பற்று (செங்கலடி) பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட கொடுவாமடு கிராமத்தைச் சேர்ந்த யுவதி ஒருவர்.

மாணவர்கள் பாடசாலை முடிந்து வந்ததும் பிற்பகல் வேளையில் அவர்களுக்குக் கற்பித்து வருகிறார் இந்த யுவதி.

பின்தங்கிய வறிய கிராமத்தில் பிறந்து வளர்ந்த இந்த மாணவி தற்போது பல்கலைக்கழகத்திற்குத் தேர்வு செய்யப்பட்டு தனது பட்டப் படிப்பை மேற்கொண்டு வருகிறார். தான் ஆரம்பத்தில் கல்வி கற்பதற்காக அனுபவித்த இன்னல்களை தனது கிராமத்தைச் சேர்ந்த ஏனைய பிள்ளைகளும் எதிர்கொள்ளக் கூடாது என நினைத்து இம்மாணவி இந்த சேவையை மேற்கொண்டு வருகின்றார். தனது சொந்த முயற்சியினால் தமது வீட்டுக்கு அருகிலுள்ள காணி ஒன்றில் சிறியதொரு தகரக் கொட்டகை அமைந்து தமது கிராம பிள்ளைகளுக்கு தனது பல்கலைக்கழக கற்றல் நேரங்களை விட ஏனைய நேரங்களில் கற்பித்து வருவதாக தெரிவிக்கின்றார் கொடுவாமடு கிராமத்தைச் சேர்ந்த கிழக்குப் பல்கலைக்கழக மாணவி கோணேஸ்வரன் மிதுசியா.

தனது முயற்சியினால் தற்போதைய கொழுத்தும் வெயிலுக்கு மத்தியில் தகரக் கொட்டகை அமைத்து, அதனுள் மணல் இட்டு, அதற்குள் பாய் விரித்து பிள்ளைகளை வைத்து கற்பித்து வருகின்றார் இவர்.

"இந்த கொட்டகையை சற்றுப் பெரிதாக்கி, பிள்ளைகள் இருக்கக் கூடிய மேசை கதிரைகள் வழங்கினால் இப்பகுதியைச் சேர்ந்த ஏனைய பிள்ளைகளையும் அழைத்து நான் கற்பிப்பேன்" என தமது ஆதங்கத்தைத் தெரிவிக்கின்றார் மிதுசியா."தற்போது எமது சமூகம் மெல்ல மெல்ல கல்வியில் வளர்ச்சியடைந்து கொண்டு வருகின்றது. ஆனால் அவர்களுக்குரிய அடிப்படைக் கல்வியை வழங்க வேண்டியது அவசியமாகும், ஆனாலும் எமது பகுதியில் அதிக பிள்ளைகள் இடைநடுவே பாடசாலைக் கல்வியை விட்டு விடுவார்கள். இனிமேலும் அந்த நிலைமை ஏற்படக்கூடாது என நினைத்து நான் ஆரம்பத்தில் மநிழலில் வைத்து பிள்ளைகளுக்கு கற்பித்தேன். தன்போது எனது சிறு முயற்சியின் காரணமாக சிறிய தகரக் கொட்டகை ஒன்று அமைத்துள்ளேன். ஆனால் அதனுள் கதிரை, மேசை, என்பன இல்லாமலுள்ளன" என அவர் மேலும் தெரிவிக்கின்றார். கொடுவாமடு கிராமத்தில் தன்னலம் கருதாது அப்பகுதி மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உந்துசக்தியளிக்கும் மிதுசியாவின் முயற்சிக்கு பணவசதி படைத்தோர் உதவி செய்ய முன்வர வேண்டும் என அப்பகுதி மக்கள் எதிர்பார்க்கின்றனர்.



**வ.சக்திவேல்...**
(பெரியபோரதீவு தினகரன் நிருபர்)

## முதலீடுகளை வலுப்படுத்த புதிய...

அமைச்சர், வரவு செலவுத் திட்டத்தில் உள்ளூர் உற்பத்தி மற்றும் கைத்தொழில் துறைக்கு முன்னுரிமை வழங்கப்படுமென்றும் கூறினார்.

முதலீடுகளை வலுப்படுத்தக்கூடிய பொறிமுறையொன்றைத் தயாரித்து தொழில் முயற்சியாளர்களை வலுவூட்டுவதற்கான வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படும்.

அந்நியச் செலாவணியை அதிகரிப்பதற்கு உள்ளூர் உற்பத்திகளின் ஏற்றுமதிக்கு அரசாங்கம் முன்னுரிமை வழங்கியுள்ளது என்றும் இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்தார்.

## உருளைக்கிழங்கின்...

பாதுகாக்கும் வகையிலேயே மேற்படி வரி அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டதாகவும்அதற்கிணங்க இறக்குமதி செய்யப்படும் உருளைக்கிழங்கு ஒரு கிலோவுக்கு 55 வீதம் அறவிடப்படும் என்றும் அவர் தெரிவித்தார். தற்போது நாட்டில் உருளைக்கிழங்கு அறுவடை இடம்பெற்று வருகின்றநிலையில் அதற்கு சிறந்த சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுப்பதற்காகவே இறக்குமதி வரியை அதிகரிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்ததாக அவர் மேலும் தெரிவித்தார். (ஸ)

## கொள்ளுப்பிட்டி...

40 வயதான சீன பிரஜை ஒருவர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்நபர் அலரி மாளிகைக்கு அருகிலுள்ள உயரமான விடுதியொன்றின் மேல் மாடியிலிருந்து மேற்படி சந்தேக நபர் ட்ரோனை இயக்கியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். விமானப் படையினருக்கு கிடைத்த தகவலொன்றுக்கமைய சந்தேகநபர் கைது செய்யப்பட்டு மேலதிக விசாரணைகளுக்காக கொள்ளுப்பிட்டி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் கொள்ளுப்பிட்டி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## மேலும் 376 பேர்...

அதிகாலை தாயகம் திரும்பியுள்ளனர்.

இவர்களில் அவுஸ்திரேலியாவில் இருந்து 239 பேர் மத்தல விமான நிலையத்தினூடாக இலங்கை வந்தடைந்ததாக அததெரண விமான நிலைய செய்தியாளர் தெரிவித்தார்.

மேலும், ஐக்கிய அரபு இராச்சியத்தில் இருந்து 35 பேரும், கென்யாவில் இருந்து 83 பேரும் மற்றும் கட்டாரில் இருந்து 19 இலங்கையர்களும் கட்டுநாயக்க விமான நிலையத்தின் ஊடாக இலங்கை வந்தடைந்துள்ளனர்.

இவ்வாறு வருகை தந்த அனைவருக்கும பிசீஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## திடீர் மின்துண்டிப்புக்கு அமைச்சு...

இந்தக் குழு இன்று தனது அறிக்கையை கையளிக்கும் என அமைச்சர் டளஸ் அலஹப்பெரும தெரிவித்துள்ளார்.

இது குறித்து கருத்துத் தெரிவித்துள்ள அமைச்சர் டளஸ் அலஹப்பெரும, இந்த பிரச்சினைக்கு மின்சக்தி அமைச்சு தான் பொறுப்புக்கூற வேண்டும் என்று உறுதியானால் அது தொடர்பில் நடவடிக்கை எடுக்க பின்நிற்க மாட்டேன்.

நான்96 மணித்தியாலங்களே இருந்துள்ளேன். மின்சக்தி அமைச்சே தவறுக்கு காரணம் என்றால், நாளை செவ்வாய்க்கிழமையிலிருந்து மின்சக்தி அமைச்சிற்கு வேறு ஒருவர் அமைச்சராக இருப்பார்.

தவறுக்கு பொறுப்பேற்று பதவி விலகி முன்மாதிரியாக செயற்படுவேன் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

## புதிய எம்.பிகளுக்கு...

இடம்பெறவுள்ளதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்பிக்க தஸநாயக்க தெரிவித்துள்ளார்.

நாளை 25ஆம் திகதியும் நாளைமறுதினம் 26ஆம் திகதியும் இந்த செயலமர்வு இடம்பெறவுள்ளது. பாராளுமன்ற குழு அறை 1இல் இந்த செயலமர்வுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

காலை 9 மணிமுதல் மாலை 6 மணிவரை செயலர்வு நடைபெறும். இதில் அனைத்து எம்.பிகளையும் பங்கேற்றுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

புதிய பாராளுமன்றத்துக்கு தெரிவாகியுள்ள எம்.பிகளுக்கு எதிர்கால பாராளுமன்றச் செயற்பாடுகள் தொடர்பில் விளக்கத்தை பெற்றுக் கொடுப்பதே செயலமர்வின் நோக்கமாகும். செயலமர்வின் பிரதான விருந்தினர்களாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஆகியோர் அழைக்கப்பட்டுள்ளதாகவும் பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்பிக்க தஸநாயக்க கூறியுள்ளார்.

## வாகன விபத்துக்களில்.... (03 ஆம் பக்கத் தொடர்)

கொரண – கலகெதர வீதியில் மில்லேவ பிரதேசத்தில் இடம்பெற்றுள்ள வாகன விபத்தில் 32 வயதுடைய நபரொருவர் உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிள் ஒன்றும் டிப்பர் வாகனமும் நேருக்கு நேர் மோதிக்கொண்ட நிலையிலேயே இந்த விபத்து இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர். விபத்தில் படுகாயங்களுக்குள்ளான நுவரெலியாவைச் சேர்ந்த 32 வயது நபர் கொரண ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட பின் உயிரிழந்துள்ளார். அத்துடன் வெயாங்கொட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நைவல – உடும்கம்பொல வீதியில் இடம்பெற்று வீதி விபத்தில் 78 வயதான நபரொருவர் உயிரிழந்துள்ளார். வீதியில் சென்ற லொறி சைக்கிளில் பயணித்த மேற்படி பயணியை மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாகவும் படுகாயங்களுடன் குறித்த நபர் கம்பஹா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட பின் உயிரிழந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். மேற்படி 78 வயதான நபர் வெம்முள்ள பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ஸ)

## பொறியில் சிக்கி மேலும்...

சிறுத்தையை பார்வையிட்டுள்ளதுடன், இது தொடர்பான விசாரணைகளையும் ஆரம்பித்துள்ளனர். சிறுத்தையை பார்வையிட்டுள்ளதுடன், இது தொடர்பான விசாரணைகளையும் ஆரம்பித்துள்ளனர்.

## மாகாண சபை தேர்தலில்...

சுட்டிக்காட்டினார். அதேபோல் பொதுத்தேர்தலில் போட்டியிட்டு தனித்துவத்தை நிரூபித்துவிட்டோம் எனவும், இனிதான் வெற்றிப் பயணம் ஆரம்பமாகும் எனவும் அனுஷியா மேலும் குறிப்பிட்டார்.

## விக்னேஸ்வரனின்...

கருத்து வெளியிடுகையிலேயே அவர் இதனை கூறினார். "இலங்கையின் பூர்வீக மொழி சிங்களம் அல்ல தமிழ் என விக்னேஸ்வரன் குறிப்பிட்டுள்ளார். அவரின் இந்த உரையால் நாம் குழப்பம் அடையவில்லை என்றும், ஏனெனில் விக்னேஸ்வரனின் பிள்ளைகளுக்கே தமிழ் மொழி தெரியாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

## புதிய சட்டங்கள் மூலம்...

அமைச்சரவை அனுமதியுடன் சிறுவர் துஸ்பிரயோக சம்பவங்கள் தொடர்பில் விசாரிக்க புதிய நீதிமன்றம் ஒன்றை அமைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்றார்.

## உப தலைவராகிறார்...

ராமநாதனுக்கு உப தலைவர் பதவி வழங்கப்படவுள்ளது. அதேபோல மைத்திரிபால சிறிசேனவின் மகளும் மத்திய செயற்குழுவுக்குள் உள்வாங்கப்படுவார் என தகவல் வெளியாகியுள்ளது. நடைபெறவுள்ள மாகாணசபைத் தேர்தலில் வடமத்திய மாகாணத்தில் அவர் போட்டியிடவுள்ளார். இளைஞர் ஒருவருக்கு வாய்ப்பளித்து கட்சியை அடுத்தக்கட்டம் நோக்கி கொண்டுசெல்வதற்காகவே அவர் இம்முடிவை எடுப்பார் என சிங்கள இணையத்தளமொன்றில் செய்தி வெளியாகியுள்ளது. எனினும், இது பற்றி இன்னும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை. உப பிரதமர் பதவி கிடைக்கும் பட்சத்தில் மாத்திரமே அவர் தலைமைப்பதவியை விட்டுக்கொடுப்பார் எனவும் கூறப்படுகின்றது. அத்துடன் இளைஞர் அணி தலைவராக செயற்படும் சாந்த பண்டாரவும் பதவி விலகவுள்ளார்.

## டுபாய்க்கு தப்பி செல்ல முயன்ற...

இவர்களில் ஒருவர் அங்கொட லொக்காவின் உதவியாளராக செயற்பட்டு வந்தவர் என்பது தெரியவந்துள்ளது.

மேலும், கதலுவ லியனகே புத்திக சஞ்சீவ என்ற மற்றுமொரு சந்தேக நபருக்கு எதிராக நீதிமன்றில் வழக்கு இடம்பெற்று வருவதோடு, இவரிடம் இருந்த 29 இலட்சம் ரூபாவும் இதன்போது கைப்பற்றப்பட்டுள்ளது.

அத்தோடு, காப்தீன் மொஹமட் சுபீர் என்ற நபரே அங்கொட லொக்காவின் உதவியாளராவார். இவர் ஹங்வெல்ல பிரதேசத்தில் அரச வங்கியொன்றில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடையவர் என்பது தெரியவந்துள்ளது.

இந்நிலையில், வெல்லே சாரங்கவுடன் கைதான மற்றைய நபர் ரணசிங்க ஆராச்சிகே இஷார லக்மால் என்று அடையாளம் காணப்பட்டுள்ளார். இவர் நீண்ட காலமாக கேரள கஞ்சா கடத்தலில் ஈடுபட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## செப்டம்பர் மாத இறுதிக்குள்...

பயணிகளை ஈர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

## குறைநிரப்புப் பிரேரணை... (03 ஆம் பக்கத் தொடர்)

திட்டமொன்று இவ்வாண்டு கொண்டுவர முடியாதுள்ளதால் இடைக்கால கணக்கறிக்கையொன்றை அரசாங்கம் பாராளுமன்றில் நிறைவேற்றி அடுத்த நான்கு மாதக்காலத்துக்கான அரச செலவினங்களை மேற்கொள்ளவுள்ளது.

அதற்காக அரச செலவினங்களை ஈடுசெய்யும் 949.76 பில்லியன் கணக்கறிக்கையொன்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவால் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பிலான விவாதம் எதிர்வரும் 27, 28ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளது. இதேவேளை, 2021ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்டத்தை எதிர்வரும் நவம்பர் மாதம் பாராளுமன்றில் சமர்ப்பிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## அனைத்து இன... (03 ஆம் பக்கத் தொடர்)

வடமேல் மாகாணத்தில் காணப்படும் நீர் பிரச்சினை, காட்டு யானைகளின் பிரச்சினை மற்றும் பிற அபிவிருத்தி செயற்பாடுகள் குறித்து ஆராந்து, மக்களின் பிரச்சினைகளை அடையாளம் கண்டு அது தொடர்பில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அரச அதிகாரிகளுக்கு அறிவுறுத்துவதாகவும் பிரதமர் கூறினார்.

வடமேல் மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம் முசம்மில், நெடுஞ்சாலை அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, கால்நடை பண்ணை மேம்பாடு மற்றும் பால் கைத்தொழில் துறை அமைச்சர் டீ.பீ.ஹேரத், பாராளுமன்ற உறுப்பினர்கள், பிரதேச அரசியல்வாதிகள், அரச அதிகாரிகள் மற்றும் பிரதேசவாசிகள் பலரும் கலந்துக்கொண்டனர்.

## சமூக, பொருளாதார... (03 ஆம் பக்கத் தொடர்)

விவசாயம், மீன்பிடி, சுற்றுலா, ஏற்றுமதி மேம்பாடு, உள்ளூர் மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் முதலீடு, உள்ளூர் மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு விரைவாக நிலம் ஒதுக்கீடு உள்ளிட்ட பல துறைகளில் நிர்வாக பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டியதன் அவசியம் குறித்து இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

தற்போதைய நிலையில் ஏற்றுமதித் துறையை மேம்படுத்துவதற்காக அடையாளம் காணப்பட்ட ஐந்து பிரிவுகளின் ஊடாக அந்நிய முதலீட்டு வாய்ப்புகளை ஈர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும், அதற்கு மாவட்ட மட்டத்தில் முதலீட்டாளர்களுக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் கட்டமைப்புகளின் அவசியம் குறித்தும் பசில் ராஜபக்ச சுட்டிக்காட்டினார்.

இந்த கலந்துரையாடலில் நிர்வாக சேவைகள் சங்கத்தின் தலைவர் பிரதீப் ரத்நாயக்க மற்றும் சங்கத்தின் அதிகாரிகள் குழுவினர் பங்கேற்றனர்.

## 13 ஆவது திருத்தம்... (03 ஆம் பக்கத் தொடர்)

புதிய அரசாங்கம் 19வது அரசியலமைப்பு திருத்தத்தை இல்லாதொழித்து 20வது அரசியலமைப்பு திருத்தத்தை கொண்டுவர தீர்மானித்துள்ள நிலையில் 13வது அரசியலமைப்பு தொடர்பில் தமிழ் தேசிய கூட்டமைப்பு இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது.

இந்த பேச்சுவார்த்தை இந்திய உயர்ஸ்தானிகராலயத்தில் இடம்பெற்றதுடன் இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பக்லேவும் அதில் கலந்துகொண்டுள்ளார்.

மாகாண சபைகள் சம்பந்தப்பட்ட அரசியலமைப்பு திருத்தமான 13வது அரசியலமைப்பு திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவது தொடர்பிலேயே இந்தப் பேச்சுவார்த்தை இடம்பெற்றதாக தமிழ் தேசிய கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் பாராளுமன்ற உறுப்பினர்களான தர்மலிங்கம் சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன், எம்.ஏ. சுமந்திரன் மற்றும் தமிழரசுக்கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா ஆகியோரும் இந்தப் பேச்சுவார்த்தையில் கலந்துகொண்டனர்.

மேற்படி பேச்சுவார்த்தையையடுத்து இலங்கையிலுள்ள கொழும்பு இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் ருவிட்டர் செய்தியில் அமைதி நல்லிணக்கம் மற்றும் 13வது அரசியலமைப்பு திருத்தம் முழுமையாக அமுல்படுத்த வேண்டுமென்பதில் இந்தியா நீண்டகாலமாக உறுதியான நிலைப்பாட்டில் உள்ளதாக செய்தி வெளியிடப்பட்டிருந்தது.

அதேவேளை, இலங்கையிலுள்ள தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வைப்பெற்றுக்கொடுப்பதற்கு இந்தியா தொடர்ந்தும் தமது ஒத்துழைப்பை வழங்கும் என்றும் இந்திய உயர்ஸ்தானிகர் அதன் மூலம் தெரிவித்துள்ளார். (ஸ)

## சூழலை உருவாக்குவதற்கே... (03 ஆம் பக்கத் தொடர்)

எவ்வாறெனினும் நாட்டின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு நாட்டின் அமைதி மற்றும் அனைத்து இன,மத சமூகங்களும் சுதந்திரமாக வாழக்கூடிய வகையிலேயே புதிய அரசியலமைப்பை கொண்டுவருவது அரசாங்கத்தின் தீர்மானமாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

நாட்டின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டதாகவே அதற்கான அனைத்து செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படும் என்றும் நீதியமைச்சர் தெரிவித்தார்.

19ஆவது அரசியலமைப்பை இல்லாதொழித்து 20 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை கொண்டுவருவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ள நிலையில் நீதியமைச்சர் என்ற வகையில் அது தொடர்பில் கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் மேலும் தெளிவுபடுத்திய அவர், புதிய அரசியலமைப்பு திட்டம் தொடர்பான நடவடிக்கைக்கு கூடுதல் காலம் செல்லும்.அதில் பல முக்கியமான விடயங்கள் உள்ளடக்கப்படவுள்ளன. உதாரணமாக தேர்தல் முறை மாற்றம் தொடர்பில் விடயங்கள் உள்ளீர்க்கப்படும்.

நிதியமைச்சர் என்ற வகையில் அமைச்சரவையின் மூலம் கிடைக்கப்பெறும் ஆலோசனைகளைப் பெற்றுக் கொண்டு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதே எனது பணியாகும்.

அது எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படும் எப்போது திருத்தம் மேற்கொள்ளப்படும் போன்ற விடயங்களை அமைச்சரவையே தீர்மானிக்கும்.

அது தொடர்பில் ஐவர் அடங்கிய அமைச்சரவை உப குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. அந்த உப குழு மற்றும் அமைச்சரவையின் ஆலோசனைகளுக்கமைய நாம் விடயங்களை சட்ட உருவாக்கத்திற்கான பிரிவுக்கு வழங்குவோம்.

அந்த பிரிவின் அதிகாரிகள் அது தொடர்பில் ஆராய்ந்த பின்னர்குறித்த விடயங்கள் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டு அமைச்சரவை மூலம் கலந்துரையாடப்பட்ட பின் அரசாங்கத்தின் கொள்கையாகவே அதனை வெளிக்கொணர்வோம்.

பாராளுமன்ற உறுப்பினர் அல்லது அமைச்சர் ஒருவரின் விருப்புவெறுப்புக்கன்றி சட்டரீதியில் அதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும்.

பேச்சுவார்த்தைகளையடுத்து அது தொடர்பான சட்டமூலம் தயாரிக்கப்பட்டு சட்டமா அதிபரின் கவனத்திற்கு அது சமர்ப்பிக்கப்பட்ட பின் வர்த்தமானி வெளியிடப்படும்.

வர்த்தமானி வெளிவந்த இரண்டு வாரங்களுக்குப் பின் அது பாராளுமன்றத்தின் நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப்படும். அவசியமானால் அக்காலத்தில் மக்கள் உச்ச நீதிமன்றத்திற்குச் சென்று அது தொடர்பில் கருத்துக்களை முன்வைக்கவும் முடியும்.

அதன் பிறகு இரண்டாம் வாசிப்பு இடம்பெற்று சட்ட முறைமைகளுக்கிணங்க வரும் அரசியலமைப்பு நியதிகளுக்கிணங்கவும் அது தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இந்த செயற்பாடுகளுக்காக எந்தளவு காலம் எடுத்துக்கொள்ளப்படும் என எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த நீதியமைச்சர்;

எவ்வளவு காலம் எடுக்கும் என எமக்கு உறுதியாகக் கூற முடியாது எனினும் முதலில் சட்டமூலம் தயாரிக்கப்பட்டு,அதற்கான அமைச்சரவை அனுமதி பெறப்பட்டு, வர்த்தமானியில் வெளியிடப்பட்டு, அது தொடர்பில் கருத்துக்கள் பெற்றுக் கொள்ளப் பட்டு பின்னர் இரண்டாம் வாசிப்பு இடம்பெறும்.

அந்த வகையில் பல்வேறு செயற்பாடுகள் இடம் பெற வேண்டியுள்ள நிலையில் அதற்கான காலத்தை உறுதியாக தெரிவிக்க முடியாது என்றும் அவர் தெரிவித்தார்.

புதிய அரசியலமைப்பில் உள்ளீர்க்கப்படும் விடயங்கள் தொடர்பில் அமைச்சரவையே தீர்மானிக்கும். அது தொடர்பில் எதுவும் என்னால் இப்போது கூற முடியாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

சமூகங்களுக்கு இடையிலான பிளவுகள் இல்லாமல் அனைவரும் இலங்கையர் என்ற ரீதியில் ஒற்றுமையாக வாழ்வதே ஜனாதிபதி நோக்கமாகும்.

ஒரு சிறந்த தலைவர் இருந்தால் அது நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் பெரும் பலமாக அமையும். அதன் மூலமே நாட்டைக் கட்டியெழுப்ப முடியும் அதற்கான செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு இந்த புதிய அரசியலமைப்பு திருத்தம் ஜனாதிபதிக்கு வழிவகுத்துக் கொடுக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதே வேளை நீதி அமைச்சர் ,20 ஆவது திருத்தம் தொடர்பில் ஆராய நிபுணர் குழுவொன்றை நியமிக்க உள்ளதாகவும் அறிய வருகிறது.

## விக்கினேஸ்வரன் எம்.பியின் பேச்சு ஒரு சில...

வீணைக்கு வாக்களித்து மக்கள் வைத்திருக்கின்ற நம்பிக்கைக்கும் அதேபோன்று இவ்வாறான கௌரவிப்பு நிகழ்வுகளை ஏற்பாடு செய்கின்றவர்கள் கொண்டிருக்கின்ற எதிர்பார்ப்புக்களும் வீண் போகாத வகையில் தன்னுடைய வேலைத் திட்டங்கள் அமையும் என்று தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.வி. விக்னேஸ்வரன், தன்னுடைய பாராளுமன்ற கன்னி உரையில் வெளியிட்ட கருத்துக்கள் தொடர்பில் கருத்து தெரிவித்த அமைச்சர்,

அவ்வாறான கருத்துக்கள் சில தமிழ் ஊடகங்களாலும் சமூக ஊடகங்களினாலும் பெரிதாக சிலாகிக்கப்பட்டாலும் எமது மக்கள் எதிர்கொள்ளுகின்ற பிரச்சினைகளுக்கோ அல்லது தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளுக்கோ எந்தவிதமான தீர்வையும் பெற்றுத் தராது எனவும் பாதகங்களையே அதிகரிக்கும் எனவும் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், பலமான மத்திய அரசாங்கம் அமைந்துள்ள நிலையில், அரசாங்கத்துடன் தனக்கு இருக்கும் தேசிய நல்லிணக்கத்தைப் பயன்படுத்தி தமிழ் மக்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகளை தீர்க்க அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்தார்.

குறிப்பாக, தனியார் போக்குவரத்து சங்கங்களின் உரிமையாளர்களினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பில் துறைசார் அமைச்சரினதும் ஜனாதிபதியினதும் கவனத்திற்கு கொண்டு செல்வதன் ஊடாகவும் சம்பந்தப்பட்ட தரப்புக்கள் மற்றும் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்களின் தலைவர்கள் அடங்கிய கலந்துரையாடல்களை ஏற்பாடு செய்து பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ள முடியுமெனவும் அமைச்சர் தெரிவித்தார்.

## இந்தியாவிலிருந்து நாடு திரும்பிய...

கூறியுள்ளார்.

உயிரிழந்த பெண்ணின் இறுதிக் கிரியைகள் நேற்று பிற்பகல் தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் இடம்பெற்றன.

இது தொடர்பில் அறிக்கையொன்றை வௌியிட்டுள்ள இராணுவம், குறித்த பெண் மாவத்தகமையை சேர்ந்தவர் எனவும் 20 ஆம் திகதி இந்தியாவில் இருந்து இலங்கை வந்த இவர், இரணவில தனிமைப்படுத்தல் நிலையத்தில் தனிமைப்படுத்தப்பட்டதாகவும் தெரிவித்துள்ளது. இவருக்கு கொரோனா தொற்றியது உறுதியான நிலையில் கடந்த 22 ஆம் திகதி தொற்று நோய் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

6 மாதங்களுக்கு முன்னர் புற்றுநோய்க்காக சிகிச்சை பெறுவதற்கு இவர் இந்திய சென்றுள்ளதோடு நீரிழிவுக்கும் சிகிச்சை பெற்று வந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவரின் இறுதிக்கிரியைகள் கொடிகாவத்தை பொது மயானத்தில் இடம்பெற்றது.அவரின் கணவர் தனியார் ஹோட்டலொன்றில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள நிலையில் மனைவியின் இறுதிக்கிரியையில் பங்கேற்க அவருக்கு அனுமதி வழங்கப்பட்டதாகவும் இராணுவம் தெரிவித்தது.

இதன்படி நாட்டில் கொரோனா மரணங்களின் எண்ணிக்கை 12 ஆக அதிகரித்துள்ளது.

இஸ்லாமிய முறைப்படி இறந்த பெண்ணுக்கு ஜனாஸா தொழுகை நடத்த அனுமதி வழங்கப்பட்டதாகவும் குடும்ப உறவினர்கள் சிலரும் அவரின் கணவரும் இதில் கலந்து கொண்டதாகவும் இறந்தவரின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.பின்னர் சடலம் தகனம் செய்யப்பட்டுள்ளது. இறந்தவரின் சாம்பல் உறவினர்களிடம் கையளிக்கப்பட்ட பின்னர் அது மையவாடியொன்றில் புதைக்கப்பட்டதாகவும் அறிய வருகிறது.

கடந்த ஜூன் முதலாம் திகதி நாட்டில் முதலாவது கொரோனா மரணம் பதிவானது தெரிந்ததே.

இதே வேளை உயிரிழந்த பெண்ணின் சடலத்தை புதைப்பது தொடர்பில் தலையிடுமாறு அவரது உறவினர்கள், அமைச்சர்களான அலி சப்ரி ஜோன்ஸ்டன் பெர்ணாந்து மற்றும் முஸ்லிம் எம்.பிகளுடன் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.இது பற்றி அவர்கள்சுகாதார தரப்பினருடன் பேசியதாக அறிய வருகிறது. ஆனால் அந்த முயற்சி பலனளிக்கவில்லை என இறந்தவரின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.(பா)

## தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள்...

காலங்களில் தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்றத்தில் தெரிவித்து வந்தது. ஆனால் தற்போது அவ்வாறு தெரிவிக்க முடியாது.

பொதுத் தேர்தலில் தமிழ் மக்கள் தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு மாத்திரம் அதிகாரத்தை வழங்காமல் வேறு கட்சிகளின் தலைவர்களை தெரிவு செய்திருக்கின்றனர். குறிப்பாக சி.வி.விக்னேஸ்வரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், மட்டக்களப்பில் பிள்ளையான். அதேபோன்று ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியில் இருந்து அங்கஜன் ராமநாதன் இருக்கின்றார்.

அதன் பிரகாரம் தமிழ் மக்கள் பொறுப்புக்களை பிரித்து வழங்கி இருக்கின்றனர்.

அதனால் தமிழ் மக்களின் இந்த மாற்றத்தை நாங்கள் பயன்படுத்திக்கொண்டு அரசாங்கத்தின் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை வடக்குக்கும் கொண்டு செல்வோம். அபிவிருத்தி திட்டங்கள் தெற்குக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டதொன்றல்ல. குறிப்பாக எனது கல்வி அமைச்சின் பாடசாலை அபிவிருத்தி திட்டங்களை வடக்கு பிரதேசத்துக்கும் கொண்டுசெல்வோம். வடக்கும் எமது நாட்டின் ஒரு தொகுதி. அதனால் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை தெற்கில் போன்று வடக்கு பிரதேசங்களிலும் மேற்கொள்வோம்.

அதனால் அனைவருடனும் இணைந்து செயற்படவே நாங்கள் எதிர்பார்க்கின்றோம். அதற்காக அனைவரதும் ஒத்துழைப்பை எதிர்பார்க்கின்றோம் என்றார்.

சுயாதீன ஆணைக்குழுகள் மற்றும் அதற்கு உறுப்பினர்களை நியமிக்கும் அரசியலமைப்பு பேரவையில் அங்கம் வகிப்பவர்கள் அரசியல்வாதிகளைவிட அரசியல் செய்பவர்களாகவுள்ளதுடன், அவர்கள் இந்நாட்டுக்கு எதிரான சக்திகளின் கைப்பாவைகளாகவும் செயற்படுவதாகவும் கல்வி அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

69 இலட்சம் வாக்குகளைப் பெற்று ஜனாதிபதியாகியுள்ளவரையும் காட்டில் உயரிய இடத்தில் அமர்ந்து தீர்மானங்களை எடுக்கும் அதிகாரம் அரசியலமைப்பு பேரவைக்கும் சுயாதீன ஆணைக்குழுக்களின் உறுப்பினர்களும் 19ஆவது திருத்தச்சட்டத்தின் ஊடாக பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது.

இதனை மாற்றியமைப்பதற்கான ஆணையையே கடந்த பொதுத் தேர்தலில் மக்கள் வஙழக்கியுள்ளனர் எனவும் அவர் கூறினார்.

தாம் வாக்களித்து வெற்றிபெற வைத்த ஜனாதிபதியின் ஆட்சியில் மக்கள் திருப்தியில்லாவிட்டால் அடுத்த தேர்தலில் அவரை தோல்வியடைய செய்யும் பலம் மக்களிடம் உள்ளது.

ஆனால், ஜனாதிபதியையும் காட்டில் உயரத்தில் அமர்ந்துக் கொண்டு தீர்மானங்களை எடுக்கும் அரசியலமைப்புப் பேரவை மற்றும் சுயாதீன ஆணைக்குழுக்களின் தலைவர்களை நீக்குவதற்கான அதிகாரம் மக்களிடம் இல்லை.

ஆட்சி மாறினாலும், பாராளுமன்றம் மாறினாலும், ஜனாதிபதி மாறினாலும் நாட்டுக்கு எதிரான சக்திகளுடன் கைகோர்த்து செயற்படும் இவர்கள் மாறுவதில்லை.

இது மக்களை ஏமாற்றும் அல்லது முட்டாள்களாக்கும் பொய்களாகும். 19ஆவது திருத்தச்சட்டம் நாட்டுக்கு சாபக்கேடு என்பதுடன் நாட்டை அராஜக நிலைக்கு தள்ளியள்ளது.

19ஆவது திருத்தச்சட்டத்தால் நாட்டின் பாதுகாப்புக்கு பொறுப்புக்கூறம் நபர் ஒருவர் இல்லை. இதனால் மக்கள் தமது உயிரை தியாகம் செய்ய வேண்டியே காணப்படுகிறது.

ஜனாதிபதிக்கு பாதுகாப்பு அமைச்சைக் கூட வகிக்க முடியாத வகையில் தடைகள் இதில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

19ஆவது திருத்தச்சட்டத்தில் முதலில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் என்பதுடன், நாட்டுக்குப் பொறுத்தமான அரசியலமைப் பொன்றுபின்னர்கொண்டுவரப்படும்.

## அரசாங்க அறிவித்தல்

**தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தால் கணிக்கப்படும் தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண் (அடிப்படை: 2013=100)**

தொகைமதிப்பு புள்ளி விபரத் திணைக்களத்தால் கணிக்கப்பட்ட 2020 ஜுலை மாதத்திற்கான தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் **137.3 (நூற்றி முப்பத்து ஏழு தசம் மூன்று)** என பொது அறிவித்தலுக்காக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**கலாநிதி ஐ.ஆர். பண்டார**
தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரப் பணிப்பாளர் நாயகம்

**தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
த.பெ.இல.: 121,
பத்தரமுல்ல.**
21.08.2020

**Repeat Your Ad For Better Offers**

# பலாங்கொடை நகர சபை

## கேள்விப் பத்திரங்கள் கோரல்

2020 ஒக்டோபர் 01ம் திகதி முதல் 2021 செப்டம்பர் 30ம் திகதி வரையான ஒரு வருட காலத்திற்கு பலாங்கொடை நகரத்தை சுத்திகரிப்பதற்காக பலாங்கொடை நகர சபையின் தலைவர் சமிக்க ஜயமினி விமலசேன ஆகிய என்னால் 2020 செப்டம்பர் 15ம் திகதி மு.ப. 10.00 மணி வரை கேள்விப் பத்திரங்கள் ஏற்கப்படும். மேலதிக விபரங்களை வாரத்தின் வேலை நாட்களில் வேலை நேரங்களில் அலுவலக தொலைபேசி இல. 045-4930830ஐ அழைத்து அல்ல info@balangoda.uc.gov.lk இடம் பெற்றுக்கொள்ளலாம்.

02. 2020 செப்டம்பர் 14ம் திகதி பி.ப. 3.00 வரை கேள்விப் பத்திரங்கள் பலாங்கொடை நகர சபை அலுவலகத்தினால் விநியோகிக்கப்படுவதுடன் 2020 செப்டெம்பர் 15ம் திகதி மு.ப. 10.30 இற்கு கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். இவ் வேளையில் கேள்வி விண்ணப்பதாரருக்கு அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

| கேள்விப் பத்திரங்கள் கோரப்படும் சேவையின் தன்மை | மீளளிக்கப்படும் கேள்விப் பிணை வைப்புத் தொகை | விண்ணப்பப் படிவக் கட்டணம் |
|---|---|---|
| 2020ம் ஆண்டிற்குள் அனுமதிக்கப்பட்ட வேலை திட்டங்களின் படி நகரின் வீதிகளை கூட்டுதல் மற்றும் சேகரிக்கப்படும் குப்பைகள், வீடுகளிலிருந்து அகற்றப்படும் குப்பைகள், பெங்கியவத்த திண்மக் கழிவு நிலையம் வரை போக்குவரத்து சந்தையை சுத்திகரித்தல் மற்றும் குப்பைகளை வேறுபடுத்தி சேகரித்தல், பஸ் நிலையத்தை ஒரு நாளைக்கு இரு முறை சுத்திகரித்தல் மற்றும் குப்பைகளை அகற்றுதல் மாதத்திற்கு ஒரு முறை குப்பைகளை அகற்றுதல் மாதத்திற்கு ஒரு முறை கார்பட் வீதிகளில் மணல் அகற்றுதல், புல் அகற்றுதல், இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை பஸ் நிலையத்தைக் கழுவுதல் (நகர சபையினால் வழங்கப்படும் வாகனங்கள் மற்றும் சாரதிகளைப் பயன்படுத்தி) | ரூ. 5,000.00 | ரூ. 1,000.00 |

**சமிக்க ஜயமினி விமலசேன
தலைவர்,
பலாங்கொட நகர சபை**

**2020 ஆகஸ்ட் 20ம் திகதி
பலாங்கொடை நகர சபையில்**

## ජාතික සම්පත

உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு இலக்கம் 1048 — திகதி 2020.08.22

ஆங்கில எழுத்து: **B**

வெற்றி இலக்கங்கள்: **0 8 6 2 2 4**

| பரிசு | இலக்கங்கள் | தொகை | வெற்றியாளர் |
|---|---|---|---|
| 01 பரிசு | 0 8 6 2 2 4 | ரூ. 2,000,000.00 | 1 |
| 02 பரிசு | 8 6 2 2 4 | ரூ. 100,000.00 | 2 |
| 03 பரிசு | 6 2 2 4 | ரூ. 10,000.00 | 31 |
| 04 பரிசு | 2 2 4 | ரூ. 1,000.00 | 321 |
| 05 பரிசு | 2 4 | ரூ. 50.00 | 3,096 |
| 06 பரிசு | 4 | ரூ. 20.00 | 29,425 |
| 07 பரிசு | 0 8 6 2 2 | ரூ. 10,000.00 | 2 |
| 08 பரிசு | 0 8 6 2 | ரூ. 1,000.00 | 28 |
| 09 பரிசு | 0 8 6 | ரூ. 100.00 | 287 |
| 10 பரிசு | 0 8 | ரூ. 50.00 | 3,049 |
| 11 பரிசு | B | ரூ. 20.00 | 13,496 |
| 12 பரிசு | | ரூ. 200.00 | 126 |

ரூ. 4,098,570.00

அடுத்த புதன்கிழமைக்கான சுப்பர் பரிசு: ரூ. 11,887,246.50

## நீரோகா

சீட்டிழுப்பு இலக்கம் 696 — திகதி 2020/08/21 — உத்தியோகபூர்வ முடிவுகள்

லக்கினம்: விருச்சிகம்

வெற்றி இலக்கங்கள்: 18 39 69 72

| | பரிசு கட்டமைப்பு | பரிசு தொகை | வெற்றியாளர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1ம் பரிசு | 4 இலக்கங்களும் பொருந்துமாயின் | ரூ. 1,000,000/- | - |
| 2ம் பரிசு | 3 இலக்கங்களுடன் லக்கினம் பொருந்துமாயின் | ரூ. 10,000/- | 06 |
| 3ம் பரிசு | 3 இலக்கங்களும் பொருந்துமாயின் | ரூ. 2,000/- | 70 |
| 4ம் பரிசு | 2 இலக்கங்களுடன் லக்கினம் பொருந்துமாயின் | ரூ. 200/- | 305 |
| 5ம் பரிசு | 2 இலக்கங்கள் பொருந்துமாயின் | ரூ. 100/- | 3,422 |
| 6ம் பரிசு | 1 இலக்கத்துடன் லக்கினம் பொருந்துமாயின் | ரூ. 60/- | 4,618 |
| 7ம் பரிசு | 1 இலக்கம் பொருந்துமாயின் | ரூ. 20/- | 49,639 |
| 8ம் பரிசு | லக்கினம் மட்டும் பொருந்துமாயின் | ரூ. 20/- | 18,204 |

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசு தொகை: ரூ. 2,237,140.00

அடுத்த சுப்பர் பரிசு: ரூ. 17,000,779.50

தேசிய லொத்தர் சபை

## 21.08.2020 மற்றும் 22.08.2020 - தேசிய லொத்தர் சபை உருவாக்கிய மொத்த வெற்றியாளர்கள் எண்ணிக்கை 1,437,851

**பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த பரிசுத்தொகை 60,018,070.00**

ரூ. 2,000,000.00 பரிசுகள் 03 ரூ. 1,000,000.00 பரிசுகள் 03 ரூ. 100,000.00 பரிசுகள் 57

www.nlb.lk

## மஹஜன சம்பத

சீட்டிழுப்பு இலக்கம் : 4222 உத்தியோகபூர்வ முடிவுகள் — திகதி: 22-08-2020

வெற்றி எழுத்து: **O** — வெற்றி இலக்கங்கள்: **4 9 5 5 0 3**

பரிசு அமைப்பு - வலமிருந்து இடமாக

| இலக்கங்கள் | தொகை | வெற்றியாளர் |
|---|---|---|
| 4 9 5 5 0 3 | 2,000,000/- | 01 |
| 9 5 5 0 3 | 100,000/- | 11 |
| 5 5 0 3 | 10,000/- | 105 |
| 5 0 3 | 1,000/- | 1,005 |
| 0 3 | 100/- | 9,979 |
| 3 | 20/- | 99,069 |

பரிசு அமைப்பு - இடமிருந்து வலமாக

| இலக்கங்கள் | தொகை | வெற்றியாளர் |
|---|---|---|
| 4 9 5 5 0 | 10,000/- | 12 |
| 4 9 5 5 | 1,000/- | 97 |
| 4 9 5 | 100/- | 982 |
| 4 9 | 50/- | 9,889 |
| O | 20/- | 39,650 |

ரூ. 9,736,930.00

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ. 24,790,264.00

தேசிய லொத்தர் சபை — www.nlb.lk

## மஹஜன சம்பத

சீட்டிழுப்பு இலக்கம் : 4221 உத்தியோகபூர்வ முடிவுகள் — திகதி: 21-08-2020

வெற்றி எழுத்து: **B** — வெற்றி இலக்கங்கள்: **3 3 9 6 7 8**

பரிசு அமைப்பு - வலமிருந்து இடமாக

| இலக்கங்கள் | தொகை | வெற்றியாளர் |
|---|---|---|
| 3 3 9 6 7 8 | 2,000,000/- | 01 |
| 3 9 6 7 8 | 100,000/- | 12 |
| 9 6 7 8 | 10,000/- | 107 |
| 6 7 8 | 1,000/- | 1,071 |
| 7 8 | 100/- | 10,810 |
| 8 | 20/- | 107,053 |

பரிசு அமைப்பு - இடமிருந்து வலமாக

| இலக்கங்கள் | தொகை | வெற்றியாளர் |
|---|---|---|
| 3 3 9 6 7 | 10,000/- | 13 |
| 3 3 9 6 | 1,000/- | 98 |
| 3 3 9 | 100/- | 1,089 |
| 3 3 | 50/- | 10,715 |
| B | 20/- | 42,692 |

ரூ. 10,289,550.00

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ. 24,210,370.00

தேசிய லொத்தர் சபை — www.nlb.lk

## Mega Power

சீட்டிழுப்பு இலக்கம்: 588 — உத்தியோகபூர்வ முடிவுகள் — திகதி: 21/08/2020

ஆங்கில எழுத்து: I — சுப்பர் இலக்கம்: 16 — வெற்றி இலக்கங்கள்: 13 32 57 75

| | பரிசுக் கட்டமைப்பு | பரிசுத் தொகை ரூ. | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000,000.00 | - |
| 2 ஆம் பரிசு | 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 100,000.00 | 05 |
| 3 ஆம் பரிசு | இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000.00 | 162 |
| 4 ஆம் பரிசு | 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 500.00 | 363 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 100.00 | 8,997 |
| 6 ஆம் பரிசு | 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 40.00 | 5,874 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் பொருந்துமாயின் | 20.00 | 145,490 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 20.00 | 26,597 |

அடுத்த மெகா சுப்பர் பரிசு: ரூ. 230,051,154.35

ரூ. 11,154,789.20 — ரூ. 10,277,600.40

ரூ. 5,419,900.00

## Mega Power

சீட்டிழுப்பு இலக்கம்: 589 — உத்தியோகபூர்வ முடிவுகள் — திகதி: 22/08/2020

ஆங்கில எழுத்து: Z — சுப்பர் இலக்கம்: 20 — வெற்றி இலக்கங்கள்: 14 15 24 49

| | பரிசுக் கட்டமைப்பு | பரிசுத் தொகை ரூ. | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000,000.00 | 01 |
| 2 ஆம் பரிசு | 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 100,000.00 | 08 |
| 3 ஆம் பரிசு | இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000.00 | 143 |
| 4 ஆம் பரிசு | 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 500.00 | 319 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 100.00 | 8,093 |
| 6 ஆம் பரிசு | 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 40.00 | 5,326 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் பொருந்துமாயின் | 20.00 | 134,470 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 20.00 | 24,453 |

அடுத்த மெகா சுப்பர் பரிசு: ரூ. 230,173,953.95

ரூ. 11,277,588.80 — ரூ. 10,400,400.00

ரூ. 6,303,300.00

## கொவிசெத — உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 2517 — சீட்டிழுப்பு திகதி 22.08.2020

ஆங்கில எழுத்து: **E** — வெற்றி இலக்கங்கள்: **24 35 51 72**

| | பரிசு கட்டமைப்பு | பரிசுத்தொகை | வெற்றியாளரர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000,000.00 | 01 |
| 2 பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 100,000.00 | 06 |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 2,000.00 | 183 |
| 4 பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000.00 | 404 |
| 5 பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 100.00 | 10024 |
| 6 பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் சரியாயின் | ரூ. 40.00 | 6524 |
| 7 பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூ. 20.00 | 164836 |
| 8 பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூ. 20.00 | 30073 |

இந்த சீட்டிழுப்பில் உருவாகிய வெற்றயாளர்களின் எண்ணிக்கை: 212,051

இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்தத்தொகை: ரூ. 7,531,540.00

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ. 61,544,944.00

வெற்றி பெறும் சீட்டுகள் சீட்டிழுக்கப்பட்ட திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சமோ அதற்கு கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரி சட்டத்திட்டங்களுக்கு உட்பட்டது. பரிசை பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

ජාතික ලොතරැයි මණ්ඩලය தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD — இல 32 தேசமான்ய N. W. J. முதலிகே மாவத்தை கொழும்பு 01 — தொலைபேசி : 0114 607 000, 0112 324 324 — Fax: 0114 663 416 Web: www.nlb.lk

## கொவிசெத — உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 2516 — சீட்டிழுப்பு திகதி 21.08.2020

ஆங்கில எழுத்து: **L** — வெற்றி இலக்கங்கள்: **09 19 32 77**

| | பரிசு கட்டமைப்பு | பரிசுத்தொகை | வெற்றியாளரர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000,000.00 | 01 |
| 2 பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 100,000.00 | 09 |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 2,000.00 | 184 |
| 4 பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000.00 | 450 |
| 5 பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 100.00 | 10899 |
| 6 பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் சரியாயின் | ரூ. 40.00 | 7180 |
| 7 பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூ. 20.00 | 178792 |
| 8 பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூ. 20.00 | 32790 |

இந்த சீட்டிழுப்பில் உருவாகிய வெற்றயாளர்களின் எண்ணிக்கை: 230,305

இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்தத்தொகை: ரூ. 8,326,740.00

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ. 61,237,352.80

வெற்றி பெறும் சீட்டுகள் சீட்டிழுக்கப்பட்ட திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சமோ அதற்கு கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரி சட்டத்திட்டங்களுக்கு உட்பட்டது. பரிசை பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

ජාතික ලොතරැයි මණ්ඩලය தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD — இல 32 தேசமான்ய N. W. J. முதலிகே மாவத்தை கொழும்பு 01 — தொலைபேசி : 0114 607 000, 0112 324 324 — Fax: 0114 663 416 Web: www.nlb.lk

## சுப்பர் வாசனா — உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு திகதி 22/ 08 / 2020 — சீட்டிழுப்பு இலக்கம் 1528

சுப்பர் இலக்கம்: 07 — வெற்றி இலக்கங்கள்: 14 39 59 60

| | | | |
|---|---|---|---|
| 1 பரிசு | 4 இலக்கங்களும் பொருந்துமாயின் | ரூ. 500,000.00 | 01 |
| 2 பரிசு | சுப்பர் இலக்கத்துடன் 3 இலக்கங்கள் பொருந்துமாயின் | ரூ. 15,000.00 | 11 |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் பொருந்துமாயின் | ரூ. 1,000.00 | 115 |
| 4 பரிசு | சுப்பர் இலக்கத்துடன் 2 இலக்கங்கள் பொருந்துமாயின் | ரூ. 200.00 | 347 |
| 5 பரிசு | 2 இலக்கங்கள் பொருந்துமாயின் | ரூ. 100.00 | 5034 |
| 6 பரிசு | சுப்பர் இலக்கத்துடன் 1 இலக்கம் பொருந்துமாயின் | ரூ. 60.00 | 4497 |
| 7 பரிசு | 1 இலக்கம் பொருந்துமாயின் | ரூ. 20.00 | 62762 |
| 8 பரிசு | சுப்பர் இலக்கம் மாததிரம் பொருந்துமாயின் | ரூ. 20.00 | 15761 |

இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்த தொகை: ரூ. 3,193,080.00

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்பு திகதியில் இருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சம் அல்லது அதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ. 20,701,199.08

ජාතික ලොතරැයි මණ්ඩලය தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD — இல. 32, தேசமான்ய N. W. J. முதலிகே மாவத்தை, கொழும்பு 01. Phone : 0114 607 000, 0112 324 324 Fax : 0114 663 416 Web : www.nlb.lk

## தன நிதானய — உத்தியோகபூர்வ முடிவுகள்

திகதி - 2020/08/21 — சீட்டிழுப்பு இலக்கம் - 305

ஆங்கில எழுத்து: N — வெற்றி இலக்கங்கள்: 42 53 62 65

| | கட்டமைப்பு | பரிசுகள் | வெற்றியாளர்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 1,000,000.00 | - |
| 2 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 100,000.00 | 04 |
| 3 ஆம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 3,000.00 | 63 |
| 4 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 1,000.00 | 158 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 100.00 | 3,940 |
| 6 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் சரியாயின் | ரூபா 60.00 | 2,552 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூபா 20.00 | 66,910 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூபா 20.00 | 12,450 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூபா. 2,881,320.00
பரிசுகளை வென்ற வெற்றியாளர்களின் எண்ணிக்கை. 86,077

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசுத்தொகை: 115,127,985.44

ජාතික ලොතරැයි මණ්ඩලය தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD

## அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாணிப்புக் கூட்டுத்தாபனம்

**(அரச, கிராமிய வீடமைப்பு, நிர்மாணிப்பு, கட்டிடப் பொருட்கள் மற்றும் கைத்தொழில் ஊக்குவிப்பு அமைச்சு)**

# விலைமனு அறிவித்தல்

பின்வரும் உருப்படிகளை வழங்குவதற்காக கூட்டுத்தாபன பெறுகைக் குழுத் தலைவரால் விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன.

01. விலைமனு எண் : SDCC/SO/05/15.2SW/2020
15.2 mm Strand Wires - 240 மெற்றிக்தொன்

02. விலைமனு எண் : SDCC/SO/06/12.9SW/2020
12.9 mm Strand Wires - 40 மெற்றிக்தொன்

03. விலைமனு எண் : SDCC/SO/07/5HTS/2020
5.0 mm HTS Wires - 100 மெற்றிக்தொன்

ஒவ்வொரு விலைமனு தொகுதியொன்றிற்குமான மாதிரி மீளளிக்கப்படாத விலைமனுக் கட்டணமான 1,000/- + வெசேவ செலுத்தப்படுவதன் மூலம், வழங்கல் முகாமையாளரின் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்படும் படிவங்களிலேயே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

தேவையேற்படின், விலைமனுக்கோரும் ஆவணங்களை, வழங்கல் முகாமையாளரின் அலுவலகத்தில் சாதாரண வேலை நேரங்களில் இலவசமாக பரீட்சித்துப் பார்க்கலாம்.

விலைமனுக்கள், இரத்மலானை, போருப்பன வீதி, இல. 7, அரச, அபிவிருத்தி மற்றும் நிர்மாணிப்புத்துறை கூட்டுத்தாபனம், கூட்டுத்தாபன பெறுகைக் குழுத் தலைவருக்கு முகவரியிடப்பட்டு, தபாலுறையொன்றினுள் சேர்க்கப்பட்டு, முத்திரைபொறிக்கப்பட்டு பதிவுத் தபாலில் அனுப்பப்படவோ அல்லது வழங்கல் முகாமையாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டிக்குச் சேர்க்கப்படவோ வேண்டும்.

விலைமனு மூடப்படுவது, 2020.09.10 அன்று 14.00 மணிக்காகும்.

விலைமனு ஆவணங்கள், 2020.09.09 அன்று நண்பகல் 12.00 மணி வரை வழங்கப்படும்.

விலைமனுக்களைக் கொண்டிருக்கும் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் "ஏற்புடையதாக 15.2 mm/ 12.9mm STRAND WIRES & 5MM H.T.S WIRES இன் வழங்கல் தொடர்பான விலைமனு" என எழுதப்படல் வேண்டும்.

வழங்கல் முகாமையாளரிடமிருந்து எந்தவொரு மேலதிக விபரங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

தொலைபேசி :- 2607566/ 2632146
பெக்ஸ் :- 2638013

**தலைவர்,**
**கூட்டுத்தாபன பெறுகைக் குழு,**
**அரச, அபிவிருத்தி மற்றும் நிர்மாணிப்புத் துறை கூட்டுத்தாபனம்.**

**இல. 7, போருப்பன வீதி,**
**இரத்மலானை.**

'உட்கட்டமைப்பு நிர்மாணிப்புகளின் முன்னோடிகள்'

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## மாகாண கல்வி திணைக்களம் - வட மத்திய மாகாணம் தொழில்நுட்பவியல் கல்வி அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டம் நிதியிடல் OPEC சர்வதேச அபிவிருத்திக்கான நிதியம் மற்றும் இலங்கை அரசாங்கம் ''இசுருபாய'', பத்தரமுல்ல கல்வி அமைச்சின் கீழானது.

1. மூன்று மாடி தொழில்நுட்பவியல் பீட கட்டிடத்தை நிருமாணிப்பதற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை வட மத்திய மாகாண, மாகாண கல்வி பணிப்பாளரின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் இப்போது அழைக்கின்றார்.

| அம்ச இலக்கம் | ஒப்பந்த இலக்கம் | பாடசாலைப் பெயர் |
|---|---|---|
| 01. | TEDP/NCP/GMV/2020 | ஏ/ கலென்பிந்துனுவெவ மத்திய மகா வித்தியாலயம் |
| 02. | TEDP/NCP/DNS/2020 | பி/ திவுலங்கடவெல தேசிய பாடசாலை |
| 03. | TEDP/NCP/SJC/2020 | அ/ புனித சூசையப்பர் கல்லூரி |

2. விலைமனுக்கோரல் நடைமுறையானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும். மாகாண திறைசேரி 201613 (ii) என்ற இலக்கமுடைய சுற்றறிக்கையில் திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ளவாறு பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA தர முன்னுரிமை பிரயோகப்படுத்தப்படும்.
3. ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான தகைமைக்காக, வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதவராகவும் ICTAD இன் (தற்போது CIDA) சி-4 மற்றும் சி-5 இன் தர கட்டிட நிர்மாணத்தில் பதிவு பெற்றிருத்தலும் வேண்டும்.
4. ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான தகைமைத் தேவைப்படுத்தல்கள் விலைமனுக்கோரல் ஆவணத்தின் 4 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளன.
5. மொத்த நிருமாண காலப்பகுதியானது 280 நாட்காட்டி நாட்களாகும்.
6. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலைப் பெற்று வேலை நாட்களில் 2020.09.14 ஆம் திகதி வரையும் அலுவலக நேரங்களில் விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்கலாம். (தொலைபேசி: 025-2222432, தொலைநகல்: 025-2222432)
7. 2020.08.24 ஆம் திகதியிலிருந்து 2020.09.14 ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக 5,000 ரூபாவைச் செலுத்திய பின்னர், வட மத்திய மாகாணம், அநுராதபுரம், மாகாண கல்வி திணைக்களம், மாகாண கல்வி பணிப்பாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.
8. விலைமனுக்கள் 2021.01.11 ஆம் திகதி வரையும் விலைமனுக்கள் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
9. 2021.02.09 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலுள்ளதும் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டதும் இலங்கை செயற்படும் புகழ்வாய்ந்த வர்த்தக வங்கியொன்றிலிருந்து பெறப்பட்டதுமானதும் ஐந்து இலட்சத்து ஐம்பதினாயிரம் இலங்கை ரூபா பெறுமதியானதுமானதும். (550,000 இ.ரூபா) வட மத்திய மாகாணம், அநுராதபுரம், வட மத்திய மாகாணம், மாகாண கல்வி பணிப்பாளரின் பெயரில் வழங்கப்பட்டதுமானதுமான விலைமனுப்பிணையொன்றுடன் அனைத்து விலைமனுக்களும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுப்பிணையானது ''ஒரு விண்ணப்பத்திலேயே'' ரொக்கப் பணமாக மாற்றுவதற்கான நிபந்தனையற்றதும் விலைமனுக்கோரல் ஆவணங்களில் வழங்கப்பட்டுள்ள உருமாதிரிக்கு அமைவாகவும் இருத்தல் வேண்டும்.
10. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் தலைவர், பெறுகைக் குழு என தெளிவாக குறிப்பிடப்பட்டு இரு பிரதிகளில் அநுராதபுரம், வட மத்திய மாகாணம், மாகாண கல்வி திணைக்களம், மாகாண கல்வி பணிப்பாளர் என குறிப்பிடப்பட்டு மாகாண கல்வி பணிப்பாளரின் அலுவலகத்தில் ஒப்படைக்கப்படல் வேண்டும்.
11. விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித்திகதியானது 2020.09.15 ஆம் திகதியன்று மு.ப. 11 மணி என்பதுடன் அனைத்து விலைமனுக்களும் அவைகளை மூடிய பின்னர் விரைவாகவே திறக்கப்படும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
12. விலைமனுக்களை திறக்கும் வேளையில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.
13. 2020.09.10 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு மாகாண பணிப்பாளரின் அலுவலகத்தில் விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று நடைபெறும்.
14. பெறுகை குழுவின் ஏகமனதான சுயவிருப்பத்திலேயே ஒப்பந்தக்காரர் தெரிவு செய்யப்படுவார்.

**மாகாண கல்வி பணிப்பாளர்,**
**பெறுகைக் குழுவின் தலைவர்,**
**மாகாண கல்வித் திணைக்களம்,**
**வட மத்திய மாகாணம்,**
**அநுராதபுரம்.**

## பகிரங்க ஏல விற்பனை

## பொது அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 59(2) பிரிவின் பிரகாரம் இத்தால் அறிவித்தல் விடுக்கப்படுவதாவது கெண்டர் இக்விட்டீஸ் லிமிட்டடின் (கம்பனி பதிவிலக்கம் PB160 ஐக் கொண்டது.) குறிக்கப்பட்ட மூலதனத்தின் உத்தேச குறைப்பு ரூபா இருபத்தியொரு கோடி எண்பத்தைந்து இலட்சம் (ரூ 218,500,000/-) இலிருந்து ரூபா ஏழு கோடி எண்பத்தைந்து இலட்சம் (ரூ. 78,500,000/-) வரை என்பதாகும்.

**சபை கட்டளைப் பிரகாரம்,**
**கோப்பரேட் சேர்விசஸ் (பிறைவட்) லிமிட்டட், செயலாளர்கள்.**

## முகவரி மாற்றம்

2020 மார்ச் 1ம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் 55/1, பகலவத்த வீதி, பலவத்த, பத்தரமுல்ல இல் இயங்கி வந்த CENTRE FOR PEACE BUILDING & RECONCILIATION நிறுவனமானது இடமாற்றப்பட்டது.

**புதிய விபரங்கள்**
**Centre for Peace Building and Reconciliation**
**சமாதானத்திற்கும் நல்விணக்கத்திற்குமான மத்திய நிலையம்.**
**இல. 56/20, குமாரகேவத்த, பலவத்த, பத்தரமுல்ல.**
**தொலைபேசி இலக்கம் : 011-2078014**
**இணையத்தளம் :** youthforloveandlife.org

## இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு

# திறைசேரி உண்டியல்கள் வழங்கல்

**2020 ஓகத்து 26ஆம் திகதி ஏல விற்பனையினூடாக 40,000 மில்லியன் ரூபாவுக்கான திறைசேரி உண்டியல்கள் வழங்கப்படும்.**

திறைசேரி உண்டியல் வழங்கல்களின் விபரங்கள் பின்வருமாறு:

| முதிர்வுக் காலம் | 91 நாட்கள் | 182 நாட்கள் | 364 நாட்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ISIN* | LKA09120K277 | LKA18221B263 | LKA36421H272 | - |
| முன்வைக்கப்பட்ட தொகை (ரூ. மில்.) | 5,000 | 15,000 | 20,000 | 40,000 |
| ஏற்றுக்கொள்ளலுக்கான உயர்ந்த பட்ச விளைவு வீதம் ** | 4.59 | 4.71 | 4.90 | |

ஏல விற்பனைத் திகதி : 2020 ஓகத்து 26
தீர்ப்பனவுத் திகதி : 2020 ஓகத்து 28
வழங்கப்படும் திகதி : 2020 ஓகத்து 28
விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் : 2020 ஓகத்து 26, புதன்கிழமை மு.ப. 11.00
விலைக்குறிப்பீட்டின் ஆகக்குறைந்த தொகை : ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ. 5,000,000/-) அதிலிருந்து ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ. 1,000,000/-) பெருக்கங்களிலிருந்து

அரசாங்க பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்களிடமிருந்து விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு வசதியூடாக மட்டுமே விலைக்குறிப்பீடுகள் அனுப்பப்பட வேண்டும்.

சந்தை நிலைமைகளுக்கமைய இலங்கை மத்திய வங்கி ஏலங்களில் முதிர்வுகளுக்கிடையிலான தொகைகளை மீள் ஒதுக்குச் செய்வதன் மூலம் ஒவ்வொரு முதிர்வுக்கும் முன்வைக்கப்பட்ட தொகைகளிலும் பார்க்க உயர்ந்த அல்லது குறைந்த தொகையினை, முன்வைக்கப்படுகின்ற மொத்த தொகையினை விஞ்சாது ஏற்றுக்கொள்ளக்கூடும்.

**கீழ்க்காணும் முதனிலை வணிகர்களிடமிருந்தும் எந்தவொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்தும் திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்யுமாறு பொதுமக்கள் அழைக்கப்படுகின்றனர்.**

| | |
|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடட் | 2206297 |
| இலங்கை வங்கி | 2541938 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் லிமிடட் | 2317777 |
| இலங்கை கொமர்ஷல் வங்கி பிஎல்சி | 2332319 |
| ப்பெஸ்ட் கெப்பிட்டல் ரெஸரீஸ் பிஎல்சி | 2639883 |
| என்எஸ்பீ பண்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடட் | 2425010 |
| மக்கள் வங்கி | 2206783 |
| சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| வெல்த்றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடட் | 2675096 |

* பன்னாட்டு பிணையங்கள் அடையாள இலக்கம்
** குறிப்பிடப்பட்டுள்ள வீதங்கள் கொள்கைத் தீர்மானங்களுக்கேற்ப சீராக்கங்களுக்கு உட்பட்டனவாக இருக்குமென்பதுடன் அதற்கிணங்க அவை இலங்கை மத்திய வங்கியின் வெப்தள விளம்பரத்தில் வெளியிடப்படும்

**எம்.இசட்.எம். ஆசிம்**
**பொதுப்படுகடனின் கண்காணிப்பாளர்/பதிவாளர்**

***வழங்கும் அலுவலகம்:***
**பொதுப்படுகடன் திணைக்களம்,**
**இலங்கை மத்திய வங்கி,**
**30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு-1.**
**தொலைபேசி:** +94112477011, **தொலைநகல்:** +94112477687
**வெப்தளம்:** www.cbsl.gov.lk

## ஹோமாகம பிரதேச சபை

# திறந்த விலைமனுக் கோரல்

ஹோமாகம பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் ஹோமாகம வலயத்தில் வரிக்கட்டணங்கள் கிட்டத்தட்ட 25000 அலகுகளுக்கான புதிய மதிப்பீட்டுடன் சம்பந்தப்பட்ட தரவுகள் E Local Government (Elg) வலையமைப்பிற்கு உட்படுத்துவதற்கான விலைமனுக்கள் கோரல்.

**நிபந்தனைகள்**

01. 2020.10.30ம் திகதிக்கு முன் சகல தரவுகளையும் வரிக்கட்டண வலையமைப்பிற்கு உட்படுத்தி மதிப்பீட்டு அறிவித்தல்களை அச்சிடுவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.
02. சகல தரவுகளையும் வரிக்கட்டண வலையமைப்பிற்கு உட்படுத்தியதன் பின்னரே கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும்.
03. தற்போது Elg வரிக்கட்டண வலையமைப்பை நடத்திச் செல்லும் Cicra Solutions (Pvt) Ltd நிறுவனத்துடன் தொடர்புகளை மேற்கொண்டு இத் தரவுகளை Elg வலையமைப்பிற்கு உட்படுத்துதல் வேண்டும்.

மேற்படி நிபந்தனைகளின் கீழ் உங்களால் தயாரிக்கப்படும் விண்ணப்பங்கள் 2020.09.08ம் திகதி பி.ப. 2.00 இற்கு முன் தலைவர், பிரதேச சபை, ஹோமாகம என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது கொண்டு வந்து ஒப்படைத்தல் வேண்டும். கேள்விகள் திறக்கப்படல் 2020.09.08ம் திகதி பி.ப. 2.05 இற்கு இடம்பெறும்.

**தலைவர்,**
**பிரதேச சபை**
**ஹோமாகம.**

# பெறுகை அறிவித்தல்

## சிலாபம் பிரதேச சபை

01. சிலாபம் பிரதேச சபைக்குச் சொந்தமான இறைச்சிக்கடைகள், மாதம்பை பொது மலசலகூடம், மாதம்பை பஸ் நிலையத்தை 2021.01.01 முதல் 2021.12.31 வரையான ஒரு வருடத்திற்கு குத்தகைக்கு வழங்குவதற்காக, 2020.08.24 முதல் 2020.09.14 பி.ப. 3.00 வரை பெறுகை மாதிரிப் பத்திரங்கள் என்னால் விநியோகிக்கப்படுவதாக இத்தால் அறிவித்துக் கொள்கிறேன்.
02. 2020.08.24 முதல் கேள்விப் பிணை மற்றும் படிவக் கட்டணங்களைச் செலுத்திய பின்பு சிலாபம் பிரதேச சபையின் தலைமையகத்தில் பெறுகை மாதிரிப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். (கேள்விப் பிணை பெறுகை விண்ணப்பப் பத்திரங்கள் திறக்கப்பட்ட பின்பு திருப்பிச் செலுத்தப்படும்)
03. பூர்த்தி செய்து பொறியிடப்பட்ட பெறுகை விண்ணப்பப்படிவங்கள் 2020.09.15 மு.ப. 10.30 வரை ஏற்றுக்கொள்ளப்படுவதுடன், மு.ப. 10.30 இற்குப் பின்னர் கிடைக்கும் சகல விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.
04. பெறுகை விண்ணப்பங்கள் திறத்தல் 2020.09.15 மு.ப. 11.00 இற்கு சிலாபம் பிரதேச சபையில் இடம்பெறும்.
05. பெறுகை நிபந்தனைகள் மற்றும் மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் நேரில் அல்லது தொ.பே. இல. 032-2247675 / 032-4934223 மூலம் விசாரித்துப் பெற்றுக்கொள்ளலாம்.
06. விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளும் போது விண்ணப்பதாரிகள் ஆளடையாளத்தை உறுதி செய்வதற்காக ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தினால் விநியோகிக்கப்படும் அடையாள அட்டை அல்லது ஏற்றுக்கொள்ளக்கூடிய அடையாள அட்டை மற்றும் வதிவிடத்தை உறுதி செய்வதற்காக கிராம அதிகாரி சான்றிதழை கட்டாயமாகச் சமர்ப்பித்தல் வேண்டும்.
07. சகல பெறுகைகள் பற்றிய இறுதித் தீர்மானம் எடுத்தல் சிலாபம் பிரதேச சபைக்கு உரியது.

**டபிள்யூ. சரத் டி. சில்வா**
**தலைவர்**
**சிலாபம் பிரதேச சபை**

**2020.08.21ம் திகதி**
**சிலாபம் பிரதேச சபையில்**

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

## சிறு விளம்பரம்

### மோட்டார் வாகனங்கள்

**113**
**சுசூகி கார்கள்** விற்பனைக்கு

SG CBF-8148 Suzuki wagon R, 2015, Car, கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே. 0714542958, 0714515236 047015

**119**



**பஸ்கள், லொறிகள்** விற்பனைக்கு

WP LJ-0612 Ashok Leyland comet tipper, 2011, கூடிய விலைக் கோரிக்கைக்கு வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே. 0714542958, 0714515236 047011

Repeat Your ad For Better Offers

# கேள்விகளுக்கான அழைப்பு

**சுகாதார அமைச்சு**

## மாகாண பொது வைத்தியசாலை – பதுளை

பதுளை மாகாண பொது வைத்தியசாலை பிராந்திய பெறுகைக் குழுவின் தலைவரினால் கீழ்க் காணப்படும் வழங்கல்களைப் பெற்றுக்கொள்வதற்காக தகுதி வாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | கேள்வி இல. | வழங்கல் | எண்ணிக்கை | மீளளிக்கப்படாத கேள்வி ஆவணக் கட்டணம் | மீளளிக்கப் படும் கேள்விப் பிணை முறி |
|---|---|---|---|---|---|
| | Hospital Equipment | | | | |
| 01 | PGHB/ FC/27/20 | Emergency Drugs Cart | 50 | 1150.00 | 50,000.00 |
| 02 | PGHB/ FC/28/20 | Three function Hospital Bed | 40 | 1600.00 | 80,000.00 |
| 03 | PGHB/ FC/29/20 | Five function Hospital Bed | 40 | 3500.00 | 200,000.00 |
| 04 | PGHB/ FC/30/20 | Labor Room Bed | 08 | 1150.00 | 24,000.00 |
| 05 | PGHB/ FC/31/20 | Pediatric Bed | 20 | 1150.00 | 24,000.00 |
| 06 | PGHB/ FC/32/20 | Bed Side Locker | 150 | 1450.00 | 75,000.00 |
| 07 | PGHB/ FC/33/20 | Over Bed Table | 50 | 1000.00 | 15,000.00 |
| 08 | PGHB/ FC/34/20 | Dressing Trolley | 16 | 1000.00 | 10,000.00 |
| 09 | PGHB/ FC/35/20 | Theater Side Trolley | 24 | 1000.00 | 13,000.00 |
| 10 | PGHB/ FC/36/20 | Assistant Trolley | 20 | 1000.00 | 13,000.00 |
| 11 | PGHB/ FC/37/20 | Patient Transfer Trolley (Advance) | 30 | 1000.00 | 30,000.00 |
| 12 | PGHB/ FC/38/20 | Patient Transfer Pat slide | 04 | 1000.00 | 12,000.00 |

02. தேசிய போட்டி கேள்வி முறை (NCB) அடிப்படையில் கேள்விகள் கோரப்படும்.
03. இது சம்பந்தமான மேலதிக விபரங்களை வாரத்தின் வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் கணக்காளரைத் தொடர்புகொள்வதன் மூலம் (நீடிப்பு 1103) அல்லது பின்வரும் வைத்தியசாலையின் இணைய தளத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
04. தகைமையுடைய கேள்விதாரர்கள் ஒரு கேள்விக்காக மேற்குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணத்தை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 09.00 மணி முதல் பி.ப. 03.00 மணி வரையும் மற்றும் சனிக்கிழமை நாட்களில் மு.ப. 09.00 மணி முதல் மு.ப. 11.30 மணி வரையும் வைத்தியசாலையின் நிதிப் பிரிவில் செலுத்தி 2020-08-26ஆம் திகதி முதல் 2020-09-16ஆம் திகதி வரை கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
05. கேள்விப் படிவத்தைப் பெற்றுக்கொள்வதற்கான வேண்டுகோள் கடிதத்துடன் ஒவ்வொரு உபகரணத்தின் பொருட்டும் வெவ்வேறாக செல்லுபடியாகும் **NMRA (CDDA)** பதிவுச் சான்றிதழின் பிரதி (ஏற்புடைய உருப்படிகளுக்கு மட்டும்) மற்றும் கம்பனிப் பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றையும் கட்டாயம் சமர்ப்பித்தல் வேண்டும்.
06. பூரணப்படுத்தி முத்திரை பொறிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்களை 2020-09-17ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் பதுளை மாகாண பொது வைத்தியசாலைக்கு பதிவுத் தபாலில் அனுப்பியோ அல்லது நேரில் வந்து கையளிக்கவோ முடியும். தாமதமாகக் கிடைக்கும் கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும். அன்றைய தினமே மு.ப. 10.30 மணிக்கு கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். அவ்வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரம் பெற்ற பிரதிநிதியொருவர் கலந்து கொள்ளலாம்.
07. இது சம்பந்தமான இறுதித் தீர்மானம் எடுக்கும் உரிமை பதுளை மாகாண பொது வைத்தியசாலை பிரதேச பெறுகைக் குழுவுக்குரியது.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**மாகாண பொது வைத்தியசாலை, பதுளை.**
**தொலைபேசி இல. 055-2222261, தொலைநகல்: 055-2231205**
**மின்னஞ்சல்: tenderbranchpghb@gmail.com, இணையதளம்: www.badullapgh.org**
**2020-09-24**

## காந்தியின் மூக்குக்கண்ணாடி 340,000 டொலர்களுக்கு ஏலம்



இந்தியாவின் தேசத் தந்தை எனப் போற்றப்படும் மகாத்மா காந்தி அணிந்த தங்கமுலாம் பூசப்பட்ட மூக்குக்கண்ணாடி 340,000 டொலருக்கு ஏலம் போயுள்ளது.

அந்தக் கண்ணாடியை மகாத்மா காந்தி தமது உறவினருக்கு அளித்ததாக, குறிப்பு ஒன்றுடன் நான்கு வாரங்களுக்கு முன்பு ஒருவர் பிரிட்டனில் உள்ள ஈஸ்ட் பிரிஸ்டோல் ஏலக் கடையின் கடிதப் பெட்டியில் விட்டுச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது. இந்தத் தகவலை ஏல நிறுவனம் தனது இன்ஸ்டகிராம் பதிவில் குறிப்பிட்டது.

1920 அல்லது 1930களில் தென்னாப்பிரிக்காவில் உள்ள பிரிட்டிஷ் பெட்ரோலியம் நிறுவனத்தில் பணிபுரிந்த தம் உறவினருக்கு அந்தக் கண்ணாடியை மகாத்மா காந்தி வழங்கியதாக அந்த நபர் குறிப்பிட்டிருந்தார்.

அந்தக் கண்ணாடி சுமார் 15,000 பௌண்ட் விலைக்கு ஏலம் போகக் கூடும் என்ற எதிர்பார்ப்புகளை விஞ்சி பலமடங்கு அதிக விலைக்கு ஏலம் போனது குறிப்பிடத்தக்கது.

“இந்தக் கண்ணாடி சரியில்லை என்றால் எறிந்துவிடுங்கள்” என்று கண்ணாடியை வழங்கிய நபர் குறிப்பிட்டதாக ஏல நிறுவனத்தைச் சேர்ந்த அண்ட்ரூ ஸ்டோவ் குறிப்பிட்டார்.

## உலகின் வயதான ஆண் காலமானார்



உலகில் மிக வயதான ஆண் என்று நம்பப்படும் தென்னாபிரிக்காவைச் சேர்ந்த பிரெடி பிளோம் 116 ஆவது வயதில் காலமானார்.

அடையாள ஆவணத்தில் 1904 ஆம் ஆண்டு மே மாதம் கேப் டவுனில் பிளோம் பிறந்ததாக தெரிந்தபோதும், உலக சாதனை புத்தகமான கின்னஸ் அதனை உறுதி செய்யவில்லை.

அவர்தமது பதின்ம வயதில் இருக்கும்போது 1918இல் ஸ்பானிஷ் காய்ச்சல் தொற்றினால் முழு குடும்பத்தையும் இழந்துள்ளார். இரண்டு உலகப் போர்கள் மற்றும் இனப்பாகுபாட்டில் இருந்து உயிர் தப்பியுள்ளார்.

தமது நீண்ட கால வாழ்வுக்கு எந்த குறிப்பிடத்தக்க இரகசியமும் இல்லை என்று அவர் 2018 ஆம் ஆண்டு பி.பி.சி தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியின்போது குறிப்பிட்டிருந்தார். அவர் மதுபானம் அருந்துபவராகவும் புகைப்பிடிக்கும் பழக்கத்தை கொண்டவராகவும் இருந்துள்ளார்.

தமது வாழ்வின் பெரும்பகுதியை ஒரு தொழிலாளராக கழித்த பிளோம் 80 வயதுகளிலேயே ஓய்வு பெற்றார்.

அவர் இயற்கை காரணத்தால் கடந்த சனிக்கிழமை கேப் டவுனில் உயிரிழந்ததாக அவரது குடும்பத்தினர் குறிப்பிட்டுள்ளனர்.

## டிரம்ப்பின் தடை உத்தரவை எதிர்த்து டிக் டொக் வழக்கு

டிக் டொக் செயலியைத் தடை செய்ய வழிவகுக்கும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப்பின் உத்தரவை எதிர்த்து நீதிமன்றத்தில்




அதன் உரிமை நிறுவனமான பைட்டான்ஸ் வழக்குத் தொடுக்கவுள்ளது.

தேசியப் பாதுகாப்பிற்கு டிக் டொக் செயலி மிரட்டலாய் உள்ளதாக அமெரிக்கா குறைகூறி வருகிறது.

சீனாவின் டிக் டொக் செயலியின் உரிமையாளரான பைட்டான்ஸ் நிறுவனத்துடனான வர்த்தகப் பரிமாற்றங்களைத் தடைசெய்யும் செயலாக்க உத்தரவில் ஜனாதிபதி டிரம்ப் இம்மாதம் 6ஆம் திகதி கையெழுத்திட்டார்.

45 நாட்களுக்குள் அமெரிக்கர்கள் பைட்டான்ஸ் நிறுவனத்துடனான வர்த்தகப் பரிமாற்றங்களை முடித்துக் கொள்ளவேண்டும் என்று அந்த உத்தரவில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்நிலையில் இந்த வாரத்தில் டிக் டொக் சட்ட நடவடிக்கையை ஆரம்பிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதேபோன்று சீனாவின் டென்சென்ட் நிறுவனத்திற்கு சொந்தமான வீசாட் செயலியும் டிரம்பின் தடைக்கு எதிராக கடந்த 21ஆம் திகதி தனியாக ஒரு வழக்கை தாக்கல் செய்துள்ளது.

## தடுப்பு மருந்தை சோதிக்க ஒப்புதல்



கொவிட்–19 உத்தேசத் தடுப்பு மருந்தை மனிதர்களிடம் சோதிப்பதற்கு சீனா ஒப்புதல் வழங்கியுள்ளது.

பூச்சிகளின் உயிரணுக்களில் உள்ள புரதத்தைக்கொண்டு அந்தத் தடுப்புமருந்துகளைத் தயாரிக்கவிருப்பதாகத் தென் மேற்கு நகரமான செங்டுவின் உள்ளூர் அரசு தெரிவித்துள்ளது.

குறைந்த செலவில் தடுப்பு மருந்துகளைத் தயாரிக்க சீனா முயன்று வருகிறது. சீனாவில் பூச்சிகளின் உயிரணுப் புரதத்தைப் பயன்படுத்தித் தடுப்பு மருந்துகளை தயாரிப்பது இதுவே முதல் முறை.

அது பெரிய அளவில் தடுப்பு மருந்துகளைத் தயாரிக்க வகை செய்யும் என்று செங்டு நகர அரசு வெளியிட்ட அறிக்கை குறிப்பிட்டது.

# உலகெங்கும் கொரோனா தொற்று உயிரிழப்பு 800,000ஐ தொட்டது

உலகெங்கும் கொரோனா வைரஸ் தொற்றினால் உயிரிழந்தோர் எண்ணிக்கை கடந்த சனிக்கிழமை 800,000ஐ தொட்டது. அமெரிக்கா, பிரேசில் மற்றும் இந்தியாவில் உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இதன்படி சராசரியாக ஒவ்வொரு 24 மணி நேரத்திற்கும் கொவிட்–19 தொற்றினால் சுமார் 5,900 பேர் உயிரிழப்பதாக ரோய்ட்டர்ஸ் புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன. ஒரு மணி நேரத்திற்கு 246 பேர் அல்லது 15 விநாடிகளுக்கு ஒருவர் உயிரிழக்கின்றனர்.

இந்த உயிரிழப்பு எண்ணிக்கை நிலையாக இருப்பதோடு 700,000 இல் இருந்து 800,000ஐ தொட 17 நாட்கள் எடுத்துக் கொண்டுள்ளது. அதுவே 600,000 இல் இருந்து 700,000ஐ தொடவும் இதே அளவு காலம் எடுத்துக்கொண்டுள்ளது.

உலகில் அதிகபட்சமாக அமெரிக்காவில் நேற்று உயிரிழப்பு எண்ணிக்கை 170,000ஐ எட்டியது. அமெரிக்காவில் கடந்த ஜூலையில் நோய்த் தொற்று சம்பவங்கள் உச்சத்தை தொட்டபோதும் தற்போதும் அங்கு வாரத்திற்கு 360,000க்கும் அதிகமான புதிய நோய்த் தொற்று சம்பவங்கள் பதிவாகின்றன.



நாட்டின் சில பகுதிகளில் நோய்த் தொற்று சுமார் இருபது வீதமாக அதிகரித்திருந்தபோதும் பல பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் திறக்கப்பட்டுள்ளன.

உலகில் இரண்டாவது அதிக மக்கள் தொகை கொண்ட நாடான இந்தியாவில் கொவிட்–19 தொற்றினால் முதல் உயிரிழப்பு பதிவாகி ஐந்து மாதங்களின் பின் கடந்த திங்கட்கிழமை அந்த எண்ணிக்கை 50,000ஐ தொட்டது.

உலகில் இரண்டாவது மோசமாக பாதிக்கப்பட்ட நாடான பிரேசிலில் உயிரிழப்பு 100,000ஐ தாண்டியுள்ளது.

அங்கு நோய்த் தொற்று இன்னும் உச்சத்தைத் தொடாத நிலையில் பெரும்பாலான நகரங்கள் மீண்டும் திறக்கப்பட்டு கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளன.

## பங்களாதேஷில் பெரும் வெள்ளம்



பங்களாதேஷின் பெரும்பகுதி வெள்ளத்தில் மூழ்கியுள்ளது. மில்லியன் கணக்கானோர், பாதுகாப்புக்காகத் தங்களுடைய வீடுகளைவிட்டு வலுக்கட்டாயமாக வெளியேற வேண்டி ஏற்பட்டுள்ளது.

2 மாதங்களுக்கு முன் ஆரம்பமான பருவமழையால், தொடர்ந்து நாட்டின் மூன்றில் ஒரு பகுதி வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளது. 160க்கும் அதிகமானோர் வெள்ளத்தால் உயிரிழந்துள்ளனர்.

பங்களாதேஷில் ஜூன் முதல் ஒக்டோபர் மாதம் வரை பருவமழை பொழியும் காலமாகும். நாட்டின் 80 வீதமான மழை இந்தக் காலகட்டத்தில்தான் பொழியும்.

கொரோனா வைரஸ் பரவலை பங்காளதேஷ் சமாளிக்கப் போராடிவரும் நிலையில் வெள்ளம் அந்நாட்டைப் புரட்டிப் போட்டுள்ளது.

## 12 வயதுக்கு மேற்பட்ட சிறுவர்கள் முகக்கவசம் அணிவது கட்டாயம்

கொரோனா வைரஸ் தொற்றுக்கு எதிராக பிள்ளைகள் முகக்கவசம் அணிவதற்கான வழிகாட்டலை உலக சுகாதார அமைப்பு வெளியிட்டுள்ளது.

இதன்படி தமது நாடு மற்றும் பிரதேசத்தில் பெரியவர்களுக்காக பரிந்துரைக்கப்பட்ட நடைமுறைகளுக்கு அமைய 12 வயதுக்கு மேற்பட்டவர்கள் முகக்கவசம் அணிவது அவசியம் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.



சிறுவர்களிடையே கொவிட்–19 தொற்று பரவல் பற்றி புரிதல் குறைவாகவே இருப்பதாக உலக சுகாதார அமைப்பு ஒப்புக்கொண்டபோதும், பெரியவர்கள் போன்று பதின்ம வயதினருக்கும் நோய் தொற்றுவது ஆதாரங்களை மேற்கோள் காட்டி உறுதி செய்யப்பட்டுள்ளது.

வைரஸ் பரவல் அதிகமாக இருந்தால் 6 வயதிலிருந்து 11 வயதுக்கு உட்பட்ட பிள்ளைகள் முகக்கவசங்கள் அணியலாம். 5 அல்லது அதற்கும் குறைவான வயதுடைய பிள்ளைகள் முகக்கவசங்கள் அணிவது கட்டாயம் இல்லை என்று கூறப்பட்டுள்ளது.

## தென் கொரியாவில் கொரோனா வைரஸ் தொற்று புதிய உச்சம்

தென் கொரியாவில் கடந்த மார்ச் மாதத்திற்குப் பின் நேற்று அதிக கொரோனா வைரஸ் தொற்று சம்பவங்கள் பதிவானதை அடுத்து அங்கு தேசிய அளவில் சமூக இடைவெளி கட்டுப்பாடுகள் கடுமையாக்கப்பட்டுள்ளன.

நேற்று புதிதாக 397 நோய்த் தொற்று சம்பவங்கள் பதிவாகி உள்ளன. இதில் 51 மில்லியன் மக்கள் தொகை கொண்ட தென் கொரியாவின் பாதி எண்ணிக்கையினர் வாழும் சோல் பிராந்தியத்திலேயே அதிகம் பேர் உள்ளனர்.

புதிய நோய்த் தொற்று எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்தால் பாடசாலைகள் மற்றும் வர்த்தகங்கள் உட்பட கடுமையான சமூக இடைவெளி பேணப்படும் என நிர்வாகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.



“நாம் தேசிய அளவில் நோய்த் தொற்றுக்கு முகம்பொடுத்திருப்பதால் நிலைமை மோசமானதாகவும் தீவிரமாகவும் உள்ளது” என்று நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்புக்கான கொரிய மத்திய நிலையத்தின் தலைவர் ஜுங் இயுன் கியெங் தெரிவித்துள்ளார்.

## பெலாரஸ் எல்லையில் படை குவிப்பு: நேட்டோ நிராகரிப்பு

பெலாரஸ் நாட்டு எல்லையில் வெளிநாட்டு துருப்புகள் குவிக்கப்படுவதாக அந்நாட்டு ஜனாதிபதி அலெக்சாண்டர் லுகசென்கோ கூறியதை நேட்டோ அமைப்பு அடிப்படை அற்றது என நிராகரித்துள்ளது.

இராணுவ சீருடையுடன் தொலைக்காட்சியில் தோன்றிய பெலாரஸ் ஜனாதிபதி தமது படையினரை உஷார் நிலையில் வைத்திருப்பதாக குறிப்பிட்டார்.

இரண்டு வாரங்களுக்கு முன்னர் இடம்பெற்ற தேர்தல் முடிவை எதிர்த்து கடந்த சனிக்கிழமையும் தலைநகர் மின்ஸ்கில் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்ற நிலையிலேயே இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

லுகசென்கோவை பதவி விலகும்படி ஆர்ப்பாட்டக்காரர்கள் கோரி வருகின்றனர்.

எனினும் 26 ஆண்டுகளாக பெலாரஸ் ஜனாதிபதியாக இருக்கும் லுகசென்கோ, நேட்டோ பெலாரஸில் ஊடுருவி, புதிய ஜனாதிபதி



ஒருவரை பதவியில் அமர்த்த முயல்வதாக குற்றம்சாட்டியுள்ளார்.


போலந்து மற்றும் லிதுவேனிய துருப்புகள் தயார் நிலையில் இருப்பதாகவும் அதனால் தமது படையினரை நாட்டின் தெற்கு எல்லைக்கு அனுப்பியதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

“பெலாரஸ் அல்லது எந்த நாட்டுக்கும் அச்சுறுத்தல் விடுக்கவில்லை” என்று நேட்டோ குறிப்பிட்டுள்ளது. பிராந்தியத்தில் இராணுவக் குவிப்பும் செய்யவில்லை என்றும் அது குறிப்பிட்டுள்ளது.

## சுவிட்சர்லாந்தில் சொக்லேட் மழை

சுவிட்சர்லாந்து நகர் ஒன்றில் உள்ள சொக்லேட் தொழிற்சாலையில் ஏற்பட்ட கோளாறினால் அந்த நகரில் அபூர்வமாக சொக்லேட் மழை பொழிந்துள்ளது.

சூரிச் மற்றும் பேசல் நகருக்கு இடையே இருக்கும் ஒல்டென் சிறு நகரில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.




லின்த் அன்ட் ஸ்ப்ருங்லி நிறுவனத்தின் அந்தத் தொழிற்சாலையின் காற்றோட்ட கட்டமைப்பில் கோளாறு ஏற்பட்டிருப்பதை அந்த நிறுவனம் உறுதி செய்துள்ளது.

இதனால் காற்றோட்ட கட்டமைப்பு வழி, கொக்கோ தூள் தொழிற்சாலைக்கு வெளியே சென்றது. ஊரில் பலத்த காற்று வீசிக்கொண்டிருந்ததால், கொக்கோ தூள் ஊர் முழுவதும் பனியாகப் பொழிந்தது. எங்கு பார்த்தாலும் பழுப்பு நிறத்தில் படர்ந்து காணப்பட்டது.

எனினும் இந்தத் தூளினால் இயற்கைக்கும் மனிதர்களுக்கும் ஆபத்து இல்லை என்று அந்த நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

## அமெரிக்காவின் பிரபல கொலையாளிக்கு சிறை



அமெரிக்காவின் பிரபல தொடர் கொலையாளி ஒருவரான ஜோசப் டி ஏஞ்சலோவுக்கு ஆயுள் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

1970 மற்றும் 80களில் நடந்த பல்வேறு கொலை மற்றும் கற்பழிப்பு வழக்குகள் தொடர்பாக அடையாளம் தெரியாத நபரை பொலிசார் தேடி வந்த நிலையில், மரபணு சோதனை மூலம் 2018 ஆம் ஆண்டு சாக்ரமென்டோ கவுண்டியில் டி ஏஞ்சலோ கைதுசெய்யப்பட்டார்.

13 கொலைகள் மற்றும் 13 கற்பழிப்பு தொடர்பான குற்றச்சாட்டுகளை 74 வயதான டி ஏஞ்சலோ கடந்த ஜூன் மாதம் ஒப்புக்கொண்டநிலையில், கலிபோர்னியாவை பல ஆண்டுகளாக வேட்டையாடிய ராட்சசன் என்று வழக்கறிஞர்கள் விமர்சித்தனர். இதையடுத்து, டி ஏஞ்சலோ கருணைக்கு தகுதியற்றவர் என்று கூறி ஆயுள் தண்டனை விதித்து நீதிபதி உத்தரவிட்டார்.

# மட்டக்களப்பில் வெள்ள அபாயத்தை குறைக்க திட்ட முன்மொழிவு ஆராய்வு

## உலக வங்கியின் நிதிஒதுக்கீட்டில் நடைமுறைப்படுத்த திட்டம்

**மட்டக்களப்பு சுழற்சி, புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்கள்**

மட்டக்களப்பில் மழைகாலங்களில் ஏற்படும் வெள்ள அபாயத்தினை குறைப்பதற்கு முந்தானை ஆற்றினை மையப்படுத்திய புதிய திட்டம் உலக வங்கியின் நிதிஒதுக்கீட்டில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இது தொடர்பாக தெளிவுபடுத்தும் விசேட செயலமர்வு மத்திய நீர்ப்பாசனத் திணைக்கள பணிப்பாளர் நாயகம் கே. டீ.என். ஸ்ரீவர்தன தலைமையில் நேற்றுமுன்தினம் (22) மட்டக்களப்பு ஈஸ்ட் லெகூன் ஹோட்டலில் இடம்பெற்றது.



மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்கள் மழைகாலங்களில் பாதிக்கப்படுவதை குறைப்பதற்கான செயற்றிட்டங்களை அறிமுகம் செய்து, சம்மந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகளை தெளிவுபடுத்தும் முகமாகவே இச்செயலமர்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கடந்த காலங்களில் நாட்டில் ஏற்பட்ட வெள்ள அபாயங்களினால் மட்டக்களப்பு மாவட்டமே மிகவும் மோசமாக பாதிக்கப்படும் மாவட்டமாக இனங்காணப்பட்டுள்ளது. வெள்ள நீர் வடிந்தோடக்கூடிய மட்டக்களப்பு முகத்துவாரம், வாழைச்சேனை முகத்துவாரம் மற்றும் கல்லாறு போன்ற பகுதிகளும் இத்திட்டத்தினூடாக அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் பொதுமக்களின் குடியிருப்பு, சொத்துக்கள், போன்றவற்றின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படுகின்றது. மட்டக்களப்பு வாவியின் நீர் மட்டம் பெருகுவதைக் கட்டுப்படுத்தல், கல்லாறு நீர் வெளியேறும் பகுதியினை அபிவிருத்தி செய்தல், மட்டக்களப்பு முகத்துவாரப் பகுதியினை அபிவிருத்தி செய்தல், ஓட்டமாவடி பாலத்திற்கருகில் கால்வாய் மற்றும் புகையிரதக் கடவை அமைத்தல் போன்ற பல தலைப்புகளின் கீழ் ஆலோசனைகள் முன்மொழியப்பட்டுள்ளன.

இவ்விசேட கலந்துரையாடலில் காலநிலை பின்னடைவு முன்னேற்றத் திட்ட பணிப்பாளர் பொறியியலாளர் டீ.எஸ்.சீ. எலகந்த, மத்திய நீர்ப்பாசன திணைக்கள மேலதிக செயலாளர் பொறியியலாளர், மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சுதர்சினி ஸ்ரீகாந், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் சசிகலா புண்ணியமூர்த்தி, காணிப்பிரிவு மேலதிக அரசாங்க அதிபர் நவரூபரஞ்சினி முகுந்தன், நீர்ப்பாசன திணைக்களம், நீர் வளங்கள் வடிகாலமைப்பு சபை, வீதி அபிவிருத்தி அதிகார சபை, விவசாய விரிவாக்கல் திணைக்களம், கமநல சேவைகள் திணைக்களம் போன்றவற்றின் உயர் அதிகாரகள் என பலரும் கலந்து கொண்டனர்.

# அட்டாளைச்சேனையில் இரத்ததான நிகழ்வு



**ஒலுவில் கிழக்கு, பாலமுனை தினகரன் நிருபர்கள்**

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் ஏற்பாட்டில் அட்டாளைச்சேனை அல் நஜா விளையாட்டுக் கழகம் மற்றும் அல் நஜா சமூகசேவை அமைப்பு இணைந்து நடாத்திய இரத்தான நிகழ்வு நேற்று (23) அல் நஜா விளையாட்டுக் கழகத்தின் அட்டாளைச்சேனை காரியாலயத்தில் இடம்பெற்றது.

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் இரத்த வங்கியில் கடமையாற்றும் டொக்டர் எம்.ஏ.எம். அஜ்ஹரின் வழிநடத்தலின் இந்நிகழ்வு நடைபெற்றது.

அ ட்டாளைச்சேனை பிரதேச வைத்தியசாலையின் பொறுப்பதிகாரி டொக்டர் எஸ்.எம்.முனாஸ்தீன், முன்னாள் பிரதேச சபையின் உறுப்பினர் எஸ்.எல்.முனாஸ், அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் இரத்த வங்கியில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது ஊடகவியலாளர்கள், விளையாட்டுக் கழக வீரர்கள், பொது அமைப்புகளின் உறுப்பினர்கள், சமூக சேவை தொண்டு நிறுவனங்களின் உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டு இரத்ததானம் செய்தமை குறிப்பிடத்தக்கது.

# துப்பாக்கி வைத்திருந்த இருவருக்கு விளக்கமறியல்

**அக்கரைப்பற்று மேற்கு தினகரன் நிருபர்**

சட்டவிரோதமாக மூன்று துப்பாக்கிகளை தன்வசம் வைத்திருந்த இருவரை நாளை (25) வரை விளக்கமறியலில் வைக்குமாறு அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் கே.சமீம் உத்தரவிட்டார்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது.

அட்டாளைச்சேனை அஷ்ரப் நகர் பிரதேசத்தில் சட்டவிரோதமாக சிலர் துப்பாக்கி வைத்திருப்பதாக கல்முனை விஷேட அதிரடி படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து, விஷேட அதிரடி படையினர் நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை (22) நடத்திய சுற்றிவளைப்பின் போது இருவரிடம் இருந்து அனுமதி பத்திரம் இல்லாத ஒரு சொட்கண் துப்பாக்கியையும் இரு உள்ளூரில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியையும் அதற்கு பயன்படுத்தப்படும் 35 தோட்டாக்களையும் விஷேட அதிரடி படையினர் கைப்பற்றியதுடன் இருவரையும் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட இருவரையும் அக்கரைப்பற்று பொலிசாரிடம் ஒப்படைத்தனர்.

# கட்டாக்காலி நாய்களின் பெருக்கத்தை கட்டுப்படுத்துமாறு மக்கள் கோரிக்கை

**பள்ளிக்குடியிருப்பு தினகரன் நிருபர்**

இறக்காமம் பிரதேசத்தில் அதிகரித்து வரும் கட்டாக்காலி நாய்களின் பெருக்கத்தை கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இறக்காமம் மற்றும் வரிப்பத்தான்சேனை பிரதேசங்களில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை என்றுமில்லாதவாறு அதிகரித்து வருகின்றன. இதனால், சிறுவர்கள்,வயோதிபர்கள் வீதியில் பயணிக்க முடியாதவாறு பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருவதுடன் ,வீதி விபத்துக்குகளும் ஏற்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

உயரமான மதில் சுவர்களில் கூட சாதாரணமாக நடமாடித் திரியும் இத்தெரு நாய்களினால் வீட்டு முற்றத்தில் விளையாடும் குழந்தைகள் அச்சநிலைக்குள்ளாகி இரவுவேளைகளில் உறங்குவதற்கு சிரமப்படுவதுடன் , மாணவர்கள் பாடசாலை செல்வதற்கு அஞ்சுவதாகவும் பெற்றோர் கவலை தெரிவிக்கின்றனர்.

அத்துடன் வீட்டு வெளியில் உடைகளைக்கூட காயவைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நீண்டகாலமாக கட்டாக்காலி நாய்களின் பெருக்கத்தை கட்டுப்படுத்துவதற்கு இறக்காமம் பிரதேச சபையும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளத்தவறியமையேஇந்நிலைமைக்கு காரணமென அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனவே விரைவில் கட்டாக்காலி நாய்களின் பெருக்கத்தை கட்டுப்படுத்துவது தொடர்பில் பிரதேச சபை நிருவாகம் உரிய கவனம் செலுத்தவேண்டுமென பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# சிறுபான்மையினருக்கு பாதிப்பு ஏற்படாதவாறு 20வது திருத்தம் இடம்பெற வேண்டும்

## பாராளுமன்ற உறுப்பினர் தௌபீக்

**திருமலை மாவட்ட விசேட நிருபர்**



அரசாங்கம் தற்போது 20 வது சீர்திருத்தத்தை அமுல்படுத்த உள்ளது.

சிறுபான்மை இனங்களுக்கு பாதிப்பையும் ஏற்படுத்தாதவாறு இதனை நடைமுறைப்படுத்த வேண்டும் என திருகோணமலை மாவட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக் தெரிவித்தார்.

கிண்ணியாவில் உள்ள முஸ்லிம் காங்கிரஸ் மாவட்டக் காரியாலயத்தில் நேற்றுமுன்தினம் (22) இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில் கூறியதாவது:

19 வது சீர் திருத்தத்தில் காணப்படுகின்ற நன்மையான விடயங்களை மீண்டும் இணைத்துக் கொள்ள வேண்டும் என்பதே எமது விருப்பமாகும் எனவும் அவர் தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்டத்தின் அபிவிருத்தி பற்றி கலந்துரையாடலின்போது எதிர்வரும் காலத்தில் அமைப்புகளை உருவாக்கி இம்மாவட்டத்தின் அபிவிருத்திகளை மக்களுடன் ஒன்று சேர்ந்து பங்களிப்பு செய்ய உள்ளதாகவும் தெரிவித்தார் .

பட்டதாரிகள் வேலைவாய்ப்புக்காக பாதிக்கப்பட்டுள்ள EPF, வெளிநாட்டு பல்கலைக்கழகங்கள் என காரணங்கள் காட்டப்பட்டு உள்ளதாகவும், ஈபிஎப் பெற்றவர்கள் சிலர் நிராகரிக்கப்பட்டுள்ளது என்பது ஏற்றுக்கொள்ள முடியாது.

மேலும் சிலர் வெளிநாடுகளிலும் சிலர் உள்நாட்டில் இருந்து வெளிநாட்டு பல்கலைக்கழகங்களில் முடித்து உள்ளதாகவும் அதனை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு அங்கீகரிக்கப்பட்ட போதும் நிராகரிக்கப்பட்டுள்ளது .

இதன் காரணமாக பலர் தங்களது தொழிலை இழந்துள்ள நிலை காணப்படுகிறது. இவ்வாறு தங்களது பெயர்கள் நிராகரிப்பு பட்டியலில் இடம் பெற்றுள்ளது ஏற்றுக்கொள்ள முடியாது.

இவர்கள் பல சிரமத்தின் மத்தியிலேயே பட்டங்களை முடித்துள்ளார்கள். இவர்களுக்கான அரசாங்கம் மிக விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். இந் நிகழ்வில் அரசியல் செயற்பாட்டாளர்கள் பலரும் இதில் கலந்து கொண்டனர்.

# தனவந்தரால் நிதி ஒதுக்கீடு



**வாழைச்சேனை விசேட நிருபர்**

மட்டக்களப்பு வடக்கு வாகரை பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட 4ம் கட்டை பிரதேசத்தில் வாழும் மக்களின் நன்மை கருதி குடிநீர் பிரச்சினைக்கு தீர்வை பெற்றுக்கொடுக்கும் முகமாக பிரான்ஸில் வாழும் தனவந்தர் ஒருவர் கிணறு ஒன்றை அமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்.

இப் பிரதேசத்தில் வாழும் மக்களின் குடிநீர் பிரச்சினையை தீர்க்கும் நோக்கில் இக் குடிநீர்க் கிணறு அமைக்கப்பட்டுள்ளதாக வாகரை அன்பாலய அமைப்பின் உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

தனவந்தரின் நிதி உதவி மூலமாக கிடைக்கப்பெற்ற கிணறு அண்மையில் மக்கள் பாவனைக்காக கையளிக்கப்பட்டது.

# மருதமுனை கடற்கரை வீதி காபட் வீதியாக புனரமைப்பு

**பெரியநீலாவணை விசேட நிருபர்**

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் ஒரு இலட்சம் கிலோமீற்றர் காபட் வீதிகளை அபிவிருத்தி செய்யும் விசேட வேலைத்திட்டத்திற்கு அமைய மருதமுனை கடற்கரை வீதி காபட் வீதியாக அபிவிருத்தி செய்வதற்கான ஆரம்பப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

பாண்டிருப்பு தொடக்கம் பெரியநீலாவணை வரைக்குமான வீதியாக இந்த கடற்கரை வீதி புனரமைப்பு செய்யப்படவுள்ளது.

வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் மாகாண மேலதிக பணிப்பாளர் பொறியியலாளர் ஐ.எல்.அமீனுல் பாரி கனரக இயந்திரத்தை ஓட்டி ஆரம்பப் பணிகளை ஆரம்பித்து வைத்தார்.

2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தினால் முற்றாக அழிந்து போன மருதமுனை கடற்கரை வீதி, கடந்த 16 வருடங்களாக குண்டும் குழியுமாகவே காணப்பட்டது.





மருதமுனை கடற்கரை பிராந்தியத்தில் நாளாந்தம் பல நூற்றுக் கணக்கான மக்கள் இந்தக் கடற்கரை காற்றை சுவாசிக்க வந்து செல்கின்றனர். எனினும் மழை காலங்களில் வீதியூடாக பயணிப்பது பெரும் சவாலாகும். கிறவல் புழுதியோடு பயணித்த மக்களுக்கு தற்போது காபட் வீதி புனரமைப்புச் செய்து கிடைக்கவுள்ளது என்ற செய்தி பெரும் மகிழ்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஆரம்ப நிகழ்வில் மருதமுனை அனைத்து பள்ளிவாசல்களின் தலைவைர் அஸ்செய்க் எம்.ஐ.குசைனுத்தீன் உட்பட உலமாக்கள், கல்விமான்கள், ஊர் நலன் விரும்பிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# சட்டவிரோத மணல் அகழ்வு; 13 பேர் கைது

**கல்குடா தினகரன் நிருபர்**

வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் வெவ்வேறு இடங்களில் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட பதினொரு சந்தேக நபர்களும், மூன்று உழவு இயந்திரங்களும் சனிக்கிழமை மாலை கைப்பற்றப்பட்டுள்ளதாக வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தனஞ்ஜய பெரமுன தெரிவித்தார்.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்வில் ஈடுபட்டு வருவதாக வாழைச்சேனை விசேட அதிரடிப் படையினருக்கு கிடைத்த தகவலையடுத்து குறித்த பகுதியில் சுற்றிவளைப்பினை மேற்கொண்டனர்.

இதன்போது பதினொரு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன், மூன்று உழவு இயந்திரங்களும் கைப்பற்றப்பட்டுள்ளது. குறித்த சந்தேக நபர்கள் மற்றும் உழவு இயந்திரங்கள் என்பன வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் விசேட அதிரடிப்படையினரால் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.





அம்பாறை மாவட்டத்தில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவில் போட்டியிட்டு வெற்றி பெற்று பாராளுமன்றத்துக்கு தெரிவான டொக்டர் திலக் ராஜபக்சவை வரவேற்கும் நிகழ்வு அம்பாறையில் நடை பெற்றது. இந்நிகழ்வில் பொதுஜன பெரமுன ஆதரவுக் கட்சியான உலமா கட்சித் தலைவர் முபாறக் அப்துல் மஜீத் மௌலவி கலந்து சிறப்பித்ததுடன், டொக்டர் திலக் ராஜபக்சவை பொன்னாடை போர்த்தி கௌரவித்த போது.

# பெரியநீலாவணையில் தெரிவுசெய்யப்பட்ட விவசாயிகளுக்கு உபகரணங்கள்

**பெரியநீலாவணை விசேட நிருபர்**

'சௌபாக்கியா' தேசிய உணவு உற்பத்தி வேலைத்திட்டத்தின் கீழ் விவசாய திணைக்களத்தின் விவசாய விரிவாக்கல் பிரிவின் ஊடாக பெரியநீலாவணை கிராமத்தில் சிறந்த விவசாய நடைமுறை அலகின் கீழ் தெரிவு செய்யப்பட்ட விவசாய பண்ணையாளர்களுக்கு உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (22) பெரியநீலாவணை கமநல சேவை மத்திய நிலையத்தில் நடைபெற்றது.

பெரியநீலாவணை விவசாய விரிவாக்கல் மத்திய நிலையத்தின் பொறுப்பதிகாரி ஏ.எல்.எம்.சமீம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், அம்பாறை மாவட்ட விவசாய திணைக்களத்தின் பிரதி விவசாயப் பணிப்பாளர் எம்.எப்.ஏ.சனீர், உதவிப் பணிப்பாளர் ஜெகத் வணசிங்க, விவசாய வியாபார ஆலோசகர் எம்.எம்.ஜெமீல் உட்பட அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

தேசிய உணவுத் தேவையை பூர்த்தி செய்வதில் விவசாயிகளின் பங்களிப்பு மற்றும் சிறுபோகத்தில் செய்கை பண்ணக்கூடிய மிளகாய், சோயா, பாசிப்பயறு, குரக்கன், நிலக்கடலை, சோளம், உழுந்து போன்ற பயிரினங்களை உற்பத்தி செய்வதன் அவசியம் பற்றியும் அதிகாரிகள் விளக்கமளித்தனர். சிறு வீட்டுத் தோட்ட உற்பத்தியாளர்களுக்கு தேவையான பயிர் கன்றுகளும் இலவசமாக விநியோகிக்கப்பட்டன.

# உர விநியோகம்

**கோப்பாய் நிருபர்**

யாழ்.தென்மராட்சி பிரதேச செயலகத்துக்குட்பட்ட கைதடி நாவற்குழி விவசாய அமைப்புக்கு உட்பட்ட விவசாயிகளுக்கு மானிய உர விநியோகத்துக்கான டோக்கன் வழங்கப்படவுள்ளது. இன்று திங்கட்கிழமை கைதடி நாவற்குழி ஸ்ரீ முருகன் சனசமூக நிலையத்தில் வைத்து வழங்கப்படவுள்ளது.

விவசாயிகள் ஏக்கர் வரி மற்றும் சந்தா செலுத்திய பற்றுச்சீட்டு போன்றவற்றை எடுத்து வருமாறு அமைப்பின் தலைவர் ஐ.சத்தியசீலன் அறிவித்துள்ளார்.

# சுகவனிதையர் சிகிச்சைப் பிரிவு மீண்டும் ஆரம்பம்

**கோப்பாய் நிருபர்**

யாழ். வரணி பிரதேச மருத்துவமனையில் 35 வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்கான சுகவனிதையர் சிகிச்சைப் பிரிவு மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வரணி மருத்துவமனையில் மருத்துவர் ப.அச்சுதன் பொறுப்பதிகாரியாக பொறுப்பேற்ற பின்னர் சுகவனிதையர் சிகிச்சை ஆரம்பிக்கப்பட்டது. இதில் தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த 35 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கொரோனா தொற்று காரணமாக நிறுத்தப்பட்ட இந்த சிகிச்சைப் பிரிவு சனிக்கிழமையில் இருந்து மீண்டும் நடத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# வெடி குண்டு மீட்பு



**பரந்தன் குறூப்நிருபர்**

கிளிநொச்சி பளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கோவில்வயல் பகுதியில் வெடிக்காத ஆர்.பீ.ஜீ குண்டு மீட்கப்பட்டுள்ளது. குறித்த பகுதியில் தனியாருக்கு சொந்தமான காணியில் பொதுமகன் ஒருவர் சனிக்கிழமை துப்பரவு பணியில் ஈடுபட்ட போது குறித்த குண்டு ஒன்று அடையாளம் காணப்பட்டு பொலிசாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து பளை பொலஸாருக்கும் இராணுவத்தினருக்கும் தகவல் வழங்கப்பட்டுள்ளதுடன் நீதிமன்ற அனுமதியை பெற்று வெடிபொருள் செயலிழக்க செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது.

# ஹெரோயினுடன் இளைஞர்கள் கைது

**யாழ்ப்பாணம் குறூப் நிருபர்**

ஹெரோயின் வைத்திருந்த குற்றச்சாட்டில் 6 இளைஞர்கள் யாழ்ப்பாணம் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணம் பொம்மைவெளி பகுதியைச் சேர்ந்த இளைஞர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

60 மில்லி கிராம் ஹெரோயின் வைத்திருந்த குற்றச்சாட்டில் நேற்று மதியம் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்களிடம் பொலிசார் விசாரணைகளை முன்னெடுத்து வருவதுடன், ஐவரையும் யாழ்ப்பாணம் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

## மன்னாரில் மீட்கப்பட்ட பெண்ணின் சடலம்

# இளம் பெண்ணை சகோதரிகள் இணைந்து திட்டமிட்டு கொலை

### குடும்ப சண்டையே காரணம்; ஒருவர் தலைமறைவு

**மன்னார் குறூப் நிருபர்**

மன்னார் உப்பளத்தில் சடலமாக மீட்கப்பட்ட இளம் பெண்ணின் மரணம் தொடர்பில் அவரது சகோதரி உள்ளிட்ட இரண்டு பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும் ஒருவர் சம்பவம் தொடர்பில் தேடப்பட்டு வருவதுடன் குடும்பத்தில் ஏற்பட்ட முரண்பாடே அப் பெண் கொலை செய்யப்படுவதற்கு காரணம் என மன்னார் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

மன்னார் உப்பளம் பகுதியில் கடந்த 13ஆம் திகதி பெண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டது. பெண்ணின் கழுத்து நெரிக்கப்பட்டு ஏற்பட்ட மூச்சுத் திணறலே மரணம் சம்பவிக்க காரணம் என்பது பிரதேச பரிசோதனையில் தெரியவந்துள்ளது. இதனைத் தொடர்ந்து கொலை என்பது உறுதியாகிய நிலையில் சம்பவம் தொடர்பாக மன்னார் பொலிசார் புலன்விசாரணைகளை ஆரம்பித்திருந்தனர்.

இந்நிலையில் மன்னார் நகரில் உள்ள உணவகம் ஒன்றின் சி.சி.ரி.வி கமரா பதிவை வைத்து நெடுந்தீவைச் சேர்ந்த பெண்கள் இருவர் கைது செய்யப்பட்டனர். இதன்படி கொலை செய்யப்பட்ட பெண் நெடுந்தீவை சேர்ந்த 21 வயதான டொறிக்கா ஜூயி என்பது தெரியவந்துள்ளது.

இக் கொலையின் பிரதான சந்தேக நபரான செட்டிக்குளத்தில் வசிக்கும் நபரொருவர் தலைமறைவாகியுள்ள நிலையில் அவரை கைது செய்ய பொலிசார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

கொலைக்கான பின்னணி

சடலமாக மீட்கப்பட்ட பெண்ணின் அடையாளங்களைக் கொண்டு அவர் தொடர்பில் பொலிசார் விசாரணைகளை முன்னெடுத்தனர். அதன் போது கொலை செய்யப்பட்ட இளம் பெண், இரு பெண்கள் மற்றும் ஆண் ஒருவரும் மன்னாரில் உள்ள உணவகம் ஒன்றில் உணவு உட்கொண்ட காட்சி பதிவாகியிருந்தது.



ஆரம்பத்தில் அப் பெண்கள் நாவற்குழி என்று தெரிவிக்கப்பட்டது. ஆனால் அங்கு அவர்கள் இல்லை. தொடர்ச்சியாக முன்னெடுத்த விசாரணைகளில் கொலை செய்யப்பட்ட பெண் நெடுந்தீவைச் சேர்ந்தவர் என்று தெரிவிக்கப்பட்டது.

அதனடிப்படையில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் கொல்லப்பட்ட இளம் பெண்ணின் சகோதரி (வயது 30), அவரது பெரியதாயின் மகனின் மனைவி ஆகிய இருவரும் நெடுந்தீவில் வைத்து நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர்.

சகோதரியின் கணவருக்கும் கொலை செய்யப்பட்ட இளம் பெண்ணுக்கும் இடையே தொடர்பு உள்ளதாக அவரது சகோதரி சந்தேகம் கொண்டுள்ளார். இச் சந்தேகத்தால் சகோதரிகள் இடையே முரண்பாடு நீடித்துள்ளது. இளம் பெண்ணின் தந்தை காலமாகிய நிலையில் தாயார் வெளிநாட்டில் உள்ளார்.

அவரது தாயின் சகோதரன் செட்டிக்குளத்தில் உள்ளார். அவர் வெளிநாட்டு முகவர் நிலையத்துடன் தொடர்புடையவர். அதனால் கொலை செய்யப்பட்ட இளம் பெண்ணை வெளிநாட்டுக்கு அனுப்புவதாகக் கூறியுள்ளார்.

அதற்காக கொழும்பில் சில ஆவணங்கள் கையளிக்க வேண்டும் என்று தெரிவித்து சகோதரிகள் இருவரையும் அவர்களது பெரிய தாயின் மகனின் மனைவியையும் அழைத்துக் கொண்டு மன்னார் பயணித்துள்ளார்.

அங்கு நகரில் நடமாடிவிட்டு உப்பளத்தில் எவரும் இல்லை என அறிந்து இளம் பெண்ணை மூவரும் அங்கு அழைத்துச் சென்றுள்ளனர். அங்கு மாமன் கழுத்தை நெரிக்க மற்றைய இரு பெண்களும் கால்களையும் கைகளையும் பிடித்து வைத்திருந்துள்ளனர்.

உயிர் பிரிந்ததும் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர் என்பது விசாரணைகளின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

# வவுனியா மாட்டிறைச்சி கடையில் மோசடி

### வாடிக்கையாளர்கள் கவலை

**கோவில்குளம் குறூப் நிருபர்**

வவுனியாவில் இயங்கி வரும் மாட்டிறைச்சி கடையில் நூதன முறையில் மோசடி இடம்பெற்று வருவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

வவுனியா சந்தை உள்வட்ட வீதியில் இயங்கிவரும் மாட்டிறைச்சிக் கடையில் விற்கப்படும் மாட்டிறைச்சியானது நிறை குறைவானதாகவும், தரங்குறைந்ததாகவும் இருப்பதாக அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

குறித்த மாட்டிறைச்சி கடையை நடத்தி வருபர் ஒரு கிலோ தனியிறைச்சி 800 ரூபாவுக்கும், எலும்புடன் கூடிய இறைச்சி ஒரு கிலோ 750 ரூபாவுக்கும், விற்பனை செய்துவரும் நிலையில் தனியிறைச்சி கேட்பவர்களுக்கு எலும்பு, கொழுப்பு என பல கழிவுப் பொருட்களை இறைச்சியுடன் கலந்து விற்பனை செய்து வருவதாக வாடிக்கையாளர்கள் கூறுகின்றனர்.

வவுனியா நகரசபையில் மாட்டிறைச்சி தொடர்பாக விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ள போதிலும் குறித்த கடையை நடத்துபவர் விலை நிர்ணயத்தை கருத்தில் கொள்ளாது அதிக விலைக்கு மாட்டிறைச்சியை விற்று வருவதாகவும் மாட்டிறைச்சி கடை விவகாரத்தில் அரசியல்வாதி ஒருவர் சம்பந்தப்பட்டுள்ளதால் வவுனியா நகரசபை நடவடிக்கை எடுக்க தயங்குவதாகவும், நகரசபை உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

வவுனியா நகசபை எல்லைக்குட்பட்ட பகுதியில் நான்கு மாட்டிறைச்சிக்கடைகளும் ஒரே நபரினால் பல ஆண்டுகளாக தொடர்ச்சியாக ஏலம் எடுக்கப்பட்டுள்ளதாகவும், ஏனைய மூன்று கடைகளும் மூடப்பட்டுள்ள நிலையில் வவுனியா சந்தை உள்வட்ட வீதியில் இயங்கிவரும் மாட்டிறைச்சிக்கடையில் அதிக மக்கள் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

# இரும்பு கம்பியால் தாக்கப்பட்ட பெண் ஆறு மாதங்களின் பின்னர் உயிரிழப்பு

**த.சுபேசன்**

சாவகச்சேரி மீசாலைப் பகுதியில் இரும்புக் கம்பித் தாக்குதலுக்கு இலக்கான 52வயதான பெண் ஒருவர் தொடர்ந்து ஆறு மாத காலம் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை உயிரிழந்துள்ளார். குறித்த தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய ஒருவரை சாவகச்சேரி பொலிசார் சனிக்கிழமை கைது செய்திருப்பதாகத் தெரிவித்துள்ளனர். கடந்த இரண்டாம் மாதம் மீசாலை பகுதியில் வாகனம் ஒன்றினை இரும்புக் கம்பியால் தாக்கும் போது அதனை மறிக்க குறுக்கே சென்ற பெண் ஒருவருக்கு தலையில் காயம் ஏற்பட்ட நிலையில் தொடர்ந்து ஆறு மாத காலமாக அவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்துள்ளார்.

கொலைக் குற்றவாளியான மீசாலைப் பகுதியைச் சேர்ந்த சந்தேகநபர் குறித்த பெண்மணிக்கு காயம் ஏற்படுத்திய குற்றச்சாட்டில் ஏற்கனவே 14 விளக்கமறியல் அனுபவித்த நிலையில் தற்போது மீண்டும் கைதாகி இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# தரமற்ற மூலப்பொருட்களால் வீதியின் தரம் பாதிப்பு

### சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர்கள் தெரிவிப்பு

**த.சுபேசன்**

வீதிப் புனரமைக்கு ஒப்பந்தக்காரர்களால் பயன்படுத்தப்படும் தரமற்ற மூலப்பொருட்களால் வீதியின் தரம் பாதிக்கப்படுவதாக சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் மேலும் கூறுகையில்,

வீதிப் புனரமைப்பின் போது ஒப்பந்தக்காரர்களால் தரமற்ற கல் பயன்படுத்தப்படுகிறது. இதனால் வீதிப் புனரமைப்பின் பின்னர் வீதி விரைவாக சேதமடைந்து விடுகிறது. வீதி அமைப்பிற்கு பயன்படுத்தப்படும் மூலப்பொருட்களின் தரத்தினை தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் பார்வையிட்டு தரத்தினை உறுதிப்படுத்திய பின்னரே வீதி அபிவிருத்தி வேலைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

அத்துடன் வட்டார உறுப்பினர்களுக்கும் இது தொடர்பாக தெரியப்படுத்த வேண்டும். சபை உத்தியோகத்தர் மற்றும் வட்டார உறுப்பினர் வீதி அபிவிருத்தி வேலை இடம்பெறும் இடத்தில் இருந்தால் பல குறைபாடுகளை நிவர்த்தி செய்ய முடியும்.

தற்போது சபை உறுப்பினர்களின் வரவுசெலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்பட்ட சில வீதிகள் தரமற்ற மூலப்பொருட்களின் பயன்பாடு காரணமாக வீதியால் பயணிக்கும் வாகனங்களின் சக்கரங்களுடன் அள்ளுண்டு போகும் நிலை காணப்படுகின்றது என்றனர்.

# கிணற்றில் வீழ்ந்த காட்டு யானை

**மாங்குளம் குறூப் நிருபர்**



முல்லைத்தீவு பனிக்கன்குளம் கிராமத்துள் நூழைந்த காட்டு யானை கிராமவாசி ஒருவரின் கிணற்றில் வீழ்ந்துள்ளது. இச் சம்பவம் நேற்று அதிகாலை 2 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

கிணற்றில் விழுந்த யானையை வெளியேற்றுவதற்காக உரிய அதிகாரிகளுக்கு மக்களால் தகவல் வழங்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து நேற்று மாலையளவில் குறித்த யானை கிணற்றிலிருந்து மீட்கப்பட்டுள்ளது.

குறித்த கிராமத்தில் தொடர்ச்சியாக காட்டு யானையின் அச்சுறுத்தலின் மத்தியில் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். யானை வேலிகளை அமைக்குமாறு மக்கள் கோரிவருகின்ற நிலையில் குறித்த யானையானது தொடர்ச்சியாக குறித்த பகுதி மக்களுக்கு மிகுந்த அச்சுறுத்தலாக இருக்கின்றது.

கடந்த சில நாட்களாக குறித்த பகுதியில் காணப்படும் தரம் 5 உட்பட்ட மாணவர்கள் கல்வி பயிலும் பனிக்கன்குளம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை வளாகத்திற்குள் யானைகள் நடமாடி திரிவதனால் மாணவர்கள் அச்சத்தின் மத்தியில் பாடசாலைக்கு சென்று வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# வலி. தெற்கு பிரதேச சபை உறுப்பினரிடம் பொலிசார் மன்னிப்பு தெரிவிப்பு

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட நாளன்று அதிகாலை இடம்பெற்ற கலவர சம்பவத்தில் பொலிசாரின் தாக்குதலுக்கு உள்ளான வலி.தெற்கு பிரதேச சபை உறுப்பினர் தவராசா துவாரகனிடம் யாழ்.பொலிசார் மன்னிப்புக் கோரியுள்ளனர்.

தேர்தல் நடவடிக்கைகளில் பாதிப்பு ஏற்படக் கூடாது என்ற நோக்குடன் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கையில் துவாரகன் உள்ளிட்ட சிலர் தாக்கப்பட்டதற்கு வருத்தம் தெரிவித்த யாழ்ப்பாணம் தலைமையகப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் பிரசாத் பெனாண்டோ, அதன்போது பாதிக்கப்பட்டவர்களிடம் ஊடகங்கள் ஊடாக மன்னிப்புக் கோருவதாக அறிவித்தார்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் கடந்த 4, 5, 6 மற்றும் 7ஆம் திகதிகளில் பொதுத் தேர்தல் மத்திய நிலையம் இயங்கியது. இதில் 7ஆம் திகதி வெள்ளிக்கிழமை அதிகாலை யாழ்ப்பாணம் மாவட்ட இறுதி முடிவு அறிவிக்கப்படும் என்று கட்சிகளின் வேட்பாளர்கள், உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்கள் காத்திருந்தனர்.

அதிகாலை 1 மணியளவில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் எம்.ஏ.சுமந்திரன் அங்கு வருகை தந்ததையடுத்து குழப்பநிலை ஏற்பட்டது. அங்கு கூடியிருந்த சிறிலங்கா சுதந்திரக் கட்சி, இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் ஆதரவாளர்கள், சுமந்திரனுக்கு எதிராக சத்தம் எழுப்பியவாறு இருந்தனர். அதனால் அங்கு குழப்பநிலை ஏற்பட்டது.

இதன்போது சிலர் மீது கண்மூடித்தனமான தாக்குதலை பொலிசார் மேற்கொண்டனர். பொலிசாரின் தாக்குதலில் பாதிக்கப்பட்டதாக ஶ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் வலி.தெற்கு பிரதேச சபை உறுப்பினர் தவராசா துவாரகன், தனக்கு பொலிசாரால் சித்திரவதை செய்யப்பட்டதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணம் பிராந்திய அலுவலகத்தில் முறைப்பாடு செய்தார்.

மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தி மருத்துவ அறிக்கையை சமர்ப்பிக்குமாறு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை சட்ட மருத்துவ நிபுணரிடம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணம் பிராந்திய அலுவலகம் கோரியிருந்தது.

தாக்குதல் நடத்தப்பட்டதனை உறுதிப்படுத்தி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை சட்ட மருத்துவ அதிகாரி மருத்துவ அறிக்கையை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு வழங்கியிருந்தார்.

தன் மீது பொலிசார் சித்திரவதை செய்தனர் என்று ஜனாதிபதி செயலகம், பொலிஸ் தலைமையகம் உள்ளிட்ட இடங்களில் முறைப்பாடு செய்ததுடன், உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமை மனுவைத் தாக்கல் செய்வதற்கான ஆவணங்களையும் கொழும்பில் உள்ள மூத்த சட்டத்தரணியிடம் சமர்ப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

# யாழில் அலுவலக செய்தியாளர் மீது தாக்குதல்

**யாழ்.விசேட நிருபர்**

யாழ்ப்பாணம் பிராந்திய பத்திரிகையொன்றின் அலுவலக செய்தியாளர் இனந்தெரியாதோரால் தாக்கப்பட்டுள்ளார். இச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

பிராந்திய பத்திரிகையான வலம்புரியின் அலுவலகச் செய்தியாளர் விஜயநாதன் ஜனார்த்தன் என்பவரே இவ்வாறு தாக்கப்பட்டுள்ளார்.

பணி முடிந்து வலம்புரி அலுவலகத்தில் இருந்து ஜனார்த்தன் மோட்டார் சைக்கிளில் தனது சொந்த இடமான ஊரெழுவுக்குப் புறப்பட்ட வேளை யாழ்ப்பாணம் பிறவுண் வீதி, இரண்டாம் ஒழுங்கையால் மோட்டார் சைக்கிளில் முகத்தைக் கறுப்புத் துணியால் கட்டியவாறு வந்த இருவர் அவரை இடைமறித்து கொட்டன், கம்பிகளால் தாக்கியதுடன் அவரது மோட்டார் சைக்கிளையும் அடித்து நொருக்கினர்.

சம்பவத்தை அறிந்து அயல் வீடுகளில் இருந்தவர்கள் திரண்டபோது, தாக்குதல் நடத்தியவர்கள் மோட்டார் சைக்கிளில் தப்பி ஓடியுள்ளனர். இது தொடர்பில் பொலிஸில் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்படவுள்ளது.





சாட்டி கடற்கரை பிரதேசத்தை தூய்மைப்படுத்தும் செயற்திட்டம் நேற்று முன்னெடுக்கப்பட்டது. கொழும்பு மற்றும் யாழ் Round Table அமைப்புகள் இணைந்து ஏற்பாடு செய்திருந்த இந் நிகழ்வில் யாழ்ப்பாண றோட்டறி கழகத்தினரும் இணைந்து செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது.'

படங்கள் ஐ.சிவசாந்தன்

# ருத்ராஷத்தின் வரலாறு

7



(கடந்தவாரத் தொடர்)

முன்னொரு காலத்தில் நாரத முனிவருக்கு ஒரு பழம் கிடைத்தது. அப்பழத்தை அவர் மகாவிஷ்ணுவிடம் காண்பித்து, இது என்ன பழம் இப்பழத்தை இது வரை நான் பார்த்ததில்லையே என்று கேட்டார். அதற்கு மகாவிஷ்ணு நாரதா பூர்வ காலத்தில் திரிபுராசுரன் என்ற அரக்கன் இருந்தான். அவன் சர்வ வல்லமை படைத்தவனாகவும், பிரம்மனிடம் வரம் பெற்றவனாகவும் இருந்தான். அந்த கர்வத்தினால் சர்வ தேவர்களையும் துன்புறுத்தினான். அப்பொழுது தேவர்கள் அனைவரும் என்னிடம் வந்து அந்த அரக்கனை அழிக்குமாறு வேண்டினார்கள். நான் அனைவரையும் அழைத்துக் கொண்டு சிவபெருமானிடம் முறையிட்டோம்.

அப்பொழுது சிவபெருமான் தேவர்கள் அனைவரின் சக்தியையும் ஒரேசக்தியாக மாற்றி ஒரு வல்லமை படைத்த ஆயுதம் ஒன்றை உண்டாக்கினார். அந்த ஆயுதத்தின் பெயர் அகோரம் ஆகும். தேவர்களை காக்க திரிபுராசுரனை அழிக்க கண்களை மூடாமல் பல ஆயிரம் வருடம் அகோர அஸ்தர நிர்மாணத்திற்காக சிவபெருமான் சிந்தனையில் ஆழ்ந்தார் அப்போது மூன்று கண்களையும் அவர் மூடும்போது பல ஆண்டுகள் மூடாமல் இருந்து மூடுவதால் மூன்று கண்களில் இருந்தும் கண்ணீர் சிந்தியது. அந்த கண்ணீர் பூமியில் விழுந்து ருத்ராஷமரமாக உண்டானது. அந்த ருத்ராஷ மரத்தில் இருந்து விழுந்த பழம் தான் இது, என்று மகாவிஷ்ணு நாரதரிடம் கூறினார்.

ருத்ராஷத்தின் விவரம்

ருத்ராஷ மரம் இலையோ கார்பஸ் வகையைச் சேர்ந்தது. ஆசியா கண்டத்தின் கிழக்கு, மேற்கு பகுதிகளிலும் மலேஷியா, ஆஸ்திரேலியா, பசுபிக் தீவு மற்றும் உலகின் பல பகுதிகளில் இம்மரம் காணப்படுகிறது. நேபாளம், பீகார், பெங்கால், அஸ்ஸாம், மத்திய பிரதேசம், பம்பாய் போன்ற இடங்களிலும் காணப்படுகிறது. நேபாளம் ருத்ராஷத்திற்கு உலக புகழ் பெற்றது.

இந்த மரம் 60 அடி நீள உயரம் வளரும் இதன் பூ வெண்ணிறத்தில் இருக்கும். இலையை விட சிறிய அளவில் இருக்கும். இலையின் கீழ் பகுதியில் உள்ள காம்புகளில் பூ வளரும் பழத்தின் நிறம் சிகப்பும் நீளமும் கலந்திருக்கும் இந்த பழத்தில் உள்ள கொட்டைகளில் அதிகமாக ஐந்து முகமாக இருக்கும் இந்த பழம் ஒரு இன்ச்யை விட பெரியதாகவும் சிறியதாகவும் இருக்கும். சிறியதாக இருக்கிற ருத்ராஷத்திற்கு சக்தி குறைவு. ருத்ராஷ மரம் தை மாதம் பூ பூக்கும். வருட முழவதும் பூ பூக்கும் என்று கூற முடியாது. சில ஆண்டுகள் வரை பூ பூக்காமலும் இருக்கலாம். ஒரு முகம் ருத்ராஷம், இரண்டு முக ருத்ராஷம் இவை இரண்டும் கிடைப்பது மிக மிகக் குறைவு. எல்லா ருத்ராஷத்திற்கும் முகம் பல எண்ணிக்கையில் இருக்கும். 1 முகத்திலிருந்து 31 முகம் வரை கிடைக்கும். ஆனால் கிடைப்பது ரொம்ப குறைவு. நமக்கு கிடைப்பது 1 முகத்தில் இருந்து 14 முகம் வரைதான்.

"5 முகம் ருத்ராஷம் தான் இப்போது பரவளாக அதிக அளவில் கிடைக்கின்ளது. இதன் விலை மிகவும் குறைவு".

ருத்ராஷம் போல் இரண்டுவகை இருக்கின்றது. ஒன்று பத்ராஷம் மற்றொன்று ரவுத்ராஷம். இந்த இரண்டும் பார்ப்பதற்கு ருத்ராஷம் போல் இருக்கும். பலர் இந்த இரண்டையும் ருத்ராஷம் என்று எண்ணிக்கொண்டு தவறுதலாக அணிந்துக் கொள்கிறார்கள். ஓவ்வொறு ருத்ராஷமும் வேறுபடும். 21 ஒரு முகத்திற்கு இந்திர மாலை என்று பெயர். ஒவ்வொறு மாலைக்கும் தனித்தனி மந்திரம் இருக்கிறது.

மந்திரம் சொல்லாமல் இருந்தால் கூட ருத்ராஷத்தை சுத்தி செய்ய வேண்டும். முதலில் சந்தன நீரில் கழுவி, பிறகு நல்ல தண்ணீரில் கழுவ வேண்டும். அதன் பிறகு ஜெபம் செய்யலாம்.

ருத்ராஷம் என்று எப்படி தெரிந்து கொள்வதுஇது ருத்ராஷம் உருண்டை வடிவம் கொண்டது. சிவனின் கண்ணில் இருந்து வந்தது. பிரம்ம படைப்பு. இதன் விலை குறைவு. சந்தேகப்பட வேண்டாம். இது சோப்புக்காய் அளவில் கிடைக்கும்.

பத்ராஷம் நீண்டு தட்டையான உருண்டை வடிவம் கொண்டது. இது விஸ்வாமித்ர படைப்பு. ஒரு முகத்தில் இருந்து எட்டு முகம் வரை கிடைக்கும். இரட்டை வாழைப்பழம் போல இரண்டு பத்ராஷம்



இணைந்து இருந்தால் அதற்கு கௌரி சங்கர் என்று பெயர். மூன்றாக இணைந்து இருந்தால் பிரம்ம விஷ்ணு மகேஸ்வரன் என்று பெயர். இதேபோல் ருத்ராஷம் கூட இருக்கும்.

உண்மையான ருத்ராஷம் அணிந்தால் மனது அமைதியாக இருக்கும். பாகவதம், சிவப்புராணம் ஆகிய இவை இரண்டிலும் ருத்ராஷத்தைப் பற்றி சிறப்பாக கூறப்பட்டுள்ளது. ருத்ராஷம் அணிவதால் பாவங்கள் நீங்குவது மட்டும் இல்லாமல் மருந்துளால் குணம் ஆகாத வியாதியைக் கூட ருத்ராஷம் அணிந்தால் குணம் ஆகும்.

இமயமலையில் ருத்ராஷம் பரவலாகக் காணப்படுகிறது. 108 கொட்டை கொண்ட ருத்ராஷ மாலை அணிந்தால் அஸ்வமேத யாக பலன் கிடைக்கும். அல்லது 54 கொட்டை கொண்ட ருத்ராஷமாலை அணியலாம். இந்த மாலையின் நடுவில் மேடு என்றப் பெயரில் பெரிய ருத்ராஷம் இருக்க வேண்டும். ஜெபம் செய்யும் போது இந்த மேரு என்ற இடம் வந்தவுடன் பின் பக்கம் திருப்பி ஜெபம் பண்ண வேண்டும். ருத்ராஷ மாலையில் ஜெபம் செய்தால் நினைத்த காரியம் விரைவில் நிறைவேரும்.

ஜெபம் செய்யும்போது: காலையில் ஜெபமாலை நாபிக்கு சமமாக இருக்க வேண்டும் நடுபகல் மார்புக்கு சமமாக இருக்க வேண்டும். மாலையில் நாசிக்கு நேராக இருக்க வேண்டும்.

எல்லா ஜீவன்களிலும்உயர்ந்த ஜீவன் மனிதன்கிரகத்தில் ரவிநதிகளில் கங்கைமுனிவர்களில் கஸ்யபுடுதேவர்களில் சிவன் தேவிகளில் கௌரிஆகியோர்கள் உயர்ந்தவர்கள். சர்வதானம் செய்தால் கிடைக்கும் பலனை விட ருத்ராஷமாலை அணிந்தால் அதிகமாக பலன் கிடைக்கும் காசியில் உயர்ந்த ருத்ராஷம் கிடைக்கும். அந்த ருத்ராஷத்தை சுத்தி செய்ய வேண்டும்.

பிரம்ம புராணத்தில் புளசிய பிரம்மன் யாகம் செய்தபோது வெளிவந்தது தான் சத்ராட்சம் கிடைப்பது மிக மிக அரிது. குடும்ப அமைதிக்கும் மன சாந்திக்கும் இது மிகவும் உகந்தது. காலப்போக்கில் இது அழிந்துவிட்டது ஏதாவது காட்டில் அல்லது யாராவது மகானிடம் இருக்கலாம்.

ஒரு நாள் ஜமதக்கினி மகரிஷியின் வயலில் ஒரு பசு மேய்ந்து கொண்டிருந்தது. அவர் ஒரு நெற்கதிர் எடுத்து விரட்டினார். அந்தப்பசு இறந்துவிட்டது. இதனால் பாவம் செய்து விட்டோம் என்று கருதி அவர் சுகமகரிஷியிடம் சென்று தன் துன்பத்தை கூறினார். உடனே அவர், ஜமதக்கினி நீ காசிக்கு சென்றால் 1ஒரு முகம் ருத்ராஷம் கிடைக்கும். அதை நீ அணிந்துக் கொண்டால் உன்னுடைய கோஹத்திய தோஷம் நீங்கும் என்று கூறினார். ஒவ்வொரு முகத்திற்கும் ஒவ்வொரு தேவதை அதிபதியாக இருப்பார்கள். அவரவர் அந்தந்த பாவங்களை அழித்து விடுவார்கள். இந்த ருத்ராஷம் குடும்பத்தில் உள்ளவர்களின் பாவத்தை அழிக்கும் என்று சொன்னாராம்.

ஒரு முகம் கொண்ட ருத்திராட்சம் பிரம்மஹத்திய தோஷம் அழிக்கும். இது சிவனின் மற்றொரு உருவம் என்று கருதப்படுகிறது. சிவனைப் பூஜை செய்த பலன் கிடைக்கும்.

இரண்டு முக ருத்ராஷம் அர்த்த நாரிஸ்வர சொரூபம். அனைத்து பாவங்களையும் அழிக்கும். இதை அணிந்தால் சிவனையும், சக்தியையும், பூஜை செய்த பலன் கிடைக்கும்.

மூன்று முகம் ருத்ராஷத்திற்கு அக்னி தேவன் அதிபதி. இந்த ருத்ராஷம் ஸ்ரீ ஹத்தியா தோஷத்தை நீக்கும். (ஒரு பெண்ணை கொன்றால் வரும் பாவம்). மும்மூர்த்திகளையும் பூஜை செய்த பலன் கிடைக்கும் மூன்று முக ருத்ராஷம் மணமானப் பெண்கள் அவர்களின் தாலிக் கொடியில் அணிந்தால் பூவும், பொட்டும் நிலைத்து மகிழ்ச்சியை அளிக்கும்.

நான்கு முகம் ருத்ராஷத்திற்கு அதிபதி பிரம்மன். ஞாபசக்தியை பெருக்கும் சர்வ ஹத்தியா தோஷம் நீங்கும்.

ஐந்து முகம் ருத்ராஷத்திற்கு அதிபதி காலாக்கினி ருத்திரன். இது அனைத்து பாவங்களையும் அழிக்கும். மனதிற்கு சாந்தி தரும். இரத்த அழுத்தத்தை நீக்கும். அஜீரணத்தைப் போக்கும் மார்பு வலியை நீக்கும். தூக்கம் இல்லாமல் துன்பப்படுபவர்கள் ஒரு ருத்ராஷக்கொட்டை எடுத்து அதை பால்விட்டு இழைத்து அந்த சாந்தை எடுத்து கண்ணின் இமையின் மீது தடவினால் நல்ல உறக்கம் வரும். விஷ பூச்சிகள் தீண்டினால் உடனே ஒரு ருத்ராஷக் கொட்டை எடுத்து எலுமிச்சைப் பழச்சாரில் குழைத்து அந்த சாந்தை எடுத்து தீண்டிய இடத்தில் தடவினால் வலி குறைந்து குணமாகும். காய்ச்சிய நீர் அல்லது காய்ச்சியை பாலில் இரண்டு ருத்ராஷக் கொட்டைப் போட்டு உடன் எடுத்து விட வேண்டும். அப்பழ எடுத்த நீர் அல்லது பாலை காலையில் வெறும் வயிற்றில் சாப்பிட்டால் 1 அருகில் நெருங்காது. 32 கொட்டை கொண்ட மாலையையாவது அணிந்தால் விரோதி கூட மரியாதை செலுத்துவான்.

ஆறு முகம் ருத்ராஷத்திற்கு அதிபதி கார்த்திகேயன் பனிரெண்டு ருத்ராஷ கொட்டை கையில் (மணிக்கட்டில்) அணிந்தால் மனதில் நினைத்த காரியங்கள் நிறைவேறும். ஹிஸ்டீரியா போன்ற வியாதிகளை வராமல் காக்கும். மாணவர்கள் அணிந்தால் ஞாபசக்தி பெருகும் கண்திருஷ்டியைப் போக்கும்.

ஏழு முகம் ருத்ராஷத்திற்கு இதற்கு அணங்கம் என்று பெயர். இதற்கு அதிபதி காமதேவன். ஜாதகம் சரி இல்லாதவர்கள் இதை அணியலாம். இதை அணிந்தால் அகால மரணம் வருவதைத் தடுக்கும்.

எட்டு முகம் ருத்ராஷத்திற்கு அதிபதி விக்னேஷ்வரன். பஞ்ச மகா பாதகத்தை அழிக்கும். மன தைரியம் உண்டாக்கும். கணேஷனை பூஜை செய்த பலன் கிடைக்கும். காய்ச்சியப் பாலில் இதைப்போட்டு எடுத்துவிட்டு அந்தப் பாலை தினமும் காலையில் வெறும் வயிற்றில் அருந்தினால் பக்கவாதம் மூன்று மாதங்களில் குணமாகும்.

ஒன்பது முக ருத்ராஷத்திற்கு அதிபதி பைரவன். இதற்குள் ஒன்பது சக்தி இருக்கிறது. ஒரு கொட்டை அணிவ தாக இருந்தால் வலது கையில் அணியலாம். துர்கை பூஜை செய்பவர்களும் இதை அணியலாம். மனிதன் கிரக சாந்திக்காக நவரத்தினங்களை மோதிரமாக அணிகின்றான். நவரத்தின மாலை அணிகின்றான். நவகிரக பூஜையும் செய்கிறான். இவையாவும்; ஒரு ஒன்பது முக ருத்ராஷக் கொட்டை அணிந்தால் கிடைக்கும்.

பத்துமுக ருத்ராஷத்திற்கு ஜனார்த்தனம் என்று பெயர். இதற்கு அதிபதி ஸ்ரீ மகா விஷ்ணு அனைத்து கஷ்டத்தையும் அழிக்கும் சக்தி இதற்கு உண்டு. பாம்பு மற்றும் விஷபூச்சிகளில் இருந்து நம்மை காக்கும் சக்தி இதற்கு உண்டு. காய்ச்சியப் பாலில் இந்த ருத்ராஷக் கொட்டையைப் போட்டு எடுத்துவிட்டு அந்தப் பாலை குழந்தைகளுக்கு கொடுத்தால் கக்குவான் வராமல் தடுக்கும். ஒரு முக ருத்ராஷம் எப்படி சிவ சொரூபமோ, அதேபோல் தஸமுகி ருத்ராஷம் சம்பூர்ண விஷ்ணு சொரூபம். இது மிகமிக குறைவாக கிடைக்கிறது.

பதினொன்று முக ருத்ராஷம் ஏகாதஸ ருத்ர சொரூபம். இதை அணிந்தால் அசுவமேத யாகப்பலன் கிடைக்கும். முனிவர்களின் பத்தினிகள் கூட இதை அணிந்து கொண்டார்களாம். இதைப் பெண்கள் அணிவதால் இரக்கக்குணம் உண்டாகும்.

பனிரெண்டு முகம் ருத்ராஷம் ஆதித்தியம் ஆகும். இதற்கு அதிபதி சூரிய பகவான். இதை காதில் அணிந்தால் சூரியனின் கருணை நமக்கு கிடைக்கும்.பதிமூன்று முக ருத்ராஷத்திற்கு அதிபதிகள் கார்த்திகேயன், காமதேவன், இதை அணிந்தால் மனதில் நினைத்த காரியங்கள் நிறைவேறும்.

பதினான்கு முக ருத்ராஷம் பரமசிவனுக்கு நிகரானது.பதினைந்து முக ருத்ராஷம் கடவுளின் மேல் பக்தியை உண்டாக்கும் சக்தி இதற்கு உள்ளது.பதினாறு முக ருத்ராஷம் தந்திரம் செய்பவர்களுக்கு இந்த ருத்ராஷம் பயன் தரும்.பதினேழு முக ருத்ராஷத்திற்கு அதிபதி விஸ்வகர்மா. இதை அணிந்தால் சகல வசதி கிடைக்கும். பதினெட்டு முக ருத்ராஷத்திற்கு அதிபதி பூதேவி. பத்தொன்பது முக ருத்ராஷம் அணிந்தால், ஞானம் பெருகும். சாந்திக் கிடைக்கும்.இருபது முக ருத்ராஷத்திற்கு அதிபதிகள் பிரம்ம தேவன். சரஸ்வதி இதை அணிந்தால் ஞானம் பெருகும். மனதிற்கு சாந்தி தரும்.


இருபத்தி ஒன்று முக ருத்ராஷத்திற்கு அதிபதி குபேரன். சொத்து சுகம் கிடைக்கும். எல்லா பாவத்தையும் அழிக்கும் சக்தி இதற்கு உண்டு.

ருத்திராஷம் கொட்டையின் உட்பகுதியில் வெற்றிடம் உள்ளது. இதனால் புதிய ருத்திராஷம் தண்ணிரில் மிதக்கும். பயன்படுத்த பயன்படுத்த ருத்திராஷத்திற்கு எடை கூடும். இதனால் ருத்திராஷம் நிரில் முழ்கும்.

(தொடரும்)

தொகுப்பு:
கலாநிதி சிவஸ்ரீ கு.வை. க. வைத்தீஸ்வர குருக்கள்

## அறநெறி அறிவுநொடி



கே. ஈஸ்வரலிங்கம்
தமிழர் நற்பணி மன்றத் தலைவர்

**16847) தானம், தர்மம் இரண்டும் ஒன்றா?**
இல்லை

**16848) தானத்திலும் தர்மத்திலும் சிறந்து விளங்கியவன் யார்?**
கர்ணன்

**) தன்னிடம் யாசகம் கேட்டு வருபவர்களுக்கு அவர்கள் விரும்பியது எதுவாயினும் மகிழ்ச்சியோடு அளித்தவன் யார்?** கர்ணன்

**16849) புண்ணியக் கணக்கில் சேர்வது தானமா, தர்மமா?**
தானமல்ல...தர்மம் மட்டுமே

**16850) இந்துமதம் பெரும்பாலும் வலியுறுத்துவது எதனை செய்யும்படி?**
தானமும் தர்மமும் செய்ய வேண்டும் என்பது தான்.

**16851) தானத்துக்கும் தர்மத்துக்கும் உள்ள வேறுபாடு என்ன?**
இறைப்பணியில் மூழ்கி இறைவனையே நினைத்துக் கொண்டிருக்கும் பக்தர்கள் சாஸ்திரப்படி பிறந்தநாளில், திருமணநாளில், முன்னோர்கள் இறந்த திதியில் இயன்ற அளவு அன்னதானங்களை செய்கிறார்கள். தானங்களில் எத்தனையோ வகைகள் உண்டு. தர்மம் என்று எடுத்துகொண்டால் ஒன்றுதான். தானத்துக்கும் தர்மத்துக்கும் உள்ள வேறுபாடு இதுதான்

**16852) கேட்பவர்களுக்கு செய்யும் உதவியானது எதில் சேரும்?**
தானத்தில் தான் சேரும்..

**16853) அது புண்ணியத்தைக் கொண்டு வருமா?** வராது.

**16854) தருமம்: கொடை வள்ளல் என்று அழைக்கப்பட்டவன் யார்?** கர்ணன்

**16855) தர்ம கணக்கில் சேர்வது எது?**
உதவி என்று சொல்லும் முன்பே குறிப்பறிந்து அவர்கள் கேளாத நிலையில் அவர்களுக்கு வேண்டியதை மனமுவந்து செய்தல். இப்படி செய்யும் உதவிகளே தர்ம கணக்கில் வந்து சேரும்.

**16856) இந்த தர்மம் எதைத் தரவல்லது?**
புண்ணியத்தை

**16857) இத்தகைய புண்ணியத்தை அதிகம் சம்பாதித்தவன் யார்?**
கர்ணன்.

**16858) கர்ணனிடம் வந்து புண்ணியத்தைக் கேட்டு பெற்றுகொண்டவர் யார்?**
கிருஷ்ண பரமாத்மா

**16859) இவர் எப்படி வந்து புண்ணியத்தைக் கேட்டுக்கொண்டார்?**
வயோதிக பிராமணனாய் வேடமிட்டு வந்து

**16860) கேட்டு பெற்றதால் கர்ணன் தர்மத்தால் பெற்ற புண்ணியம் அனைத்தும் எதில் சேர்ந்து விட்டது?**
தானக்கணக்கில்

**16861)தர்மம் எப்படிப்பட்டது?**
இருக்கும் இடங்களுக்கேற்ப மாறுபடும்.

**16862) ஒரு போர்வீரரின் தர்மம் எது?**
அவர் இருக்கும் நாட்டைக் காப்பது.

**16863) மனிதன் இல்லறத்தில் ஈடுபடும் போது மனைவி, பிள்ளைகள், பெற்றோர்களை கவனிக்காமல் கடவுளுக்கு தொண்டு செய்வது தர்மக்கணக்கில் சேருமா?**
சேராது.

**16864) தர்மம் என்பது எது?**
கடமையைச் சரியாக செய்வது ஆகும்.

**16865) எதனை தர்மம் என்று சாஸ்திரம் சொல்கிறது?.**
இறைவனை நினைத்து 1000 பேருக்கு அன்னதானம் செய்துவிட்டு தானம் தர்மம் செய்தேன் என்று சொல்வதை விட வறுமையால் வாடி பசி என்னும் கொடுமையைச் சொல்வதற்கு முன்பும், கல்வியைத் தொடரமுடியவில்லை என்று சொல்லாமல் இருக்கும் குழந்தைகளுக்கு கல்வி என கேட்கும் முன்பும் நீங்கள் செய்வதே தர்மம் என்று சாஸ்திரம் சொல்கிறது.

**16866 தர்மம் என்னும் புண்ணியக்கணக்கைப் பெற என்ன செய்யவேண்டும்?**
கேளாமலேயே உரியவருக்கு உரிய நேரத்தில் செய்துவிடுவது.
இதுதான் தர்மம்... இதுதான் புண்ணியம்..

## பாசுபதேசுவரர் ஆலய கும்பாபிஷேகம்

அம்பாரை மாவட்டத்தில் உள்ள பழம்பெரும் ஆலயங்களில் ஒன்றான அக்கரைப்பற்று பனங்காடு அருள்நிறை மாதுமை உடனுறை ஸ்ரீ பாசுபதேசுவரர் தேவஸ்தான புனராவர்த்தன நவகுண்ட பஷ அஷ்டபந்தன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் இம்மாதம் 28ஆம் திகதி காலை 6 மணிக்கு நடைபெறவுள்ளது.

24ஆம் திகதி அதிகாலை கருமாரம்ப கிரியைகளோடு ஆரம்பமாகும் கும்பாபிசேக பெருவிழாவின் எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வானது 25ஆம் திகதி நண்பகல் 11.55 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

ஆலய தலைவர் மா.இரகுநாதன் தலைமையில் இடம்பெறும் கும்பாபிசேக கிரியைகள் யாவும் கும்பாபிசேக பிரதிஸ்டா பிரதம சிவாச்சாரியார் சிவஸ்ரீ பாலகுகேஸ்வர சிவாச்சாரியாரின் தலைமையில் ஆலய பிரதமகுரு வித்தயாசாகரர் சிவஸ்ரீ புண்ணிய கிருஸ்ணகுதாரக்குருக்கள் மற்றும் ஈசான சிவாச்சாரியார் கிரியாதிலகம் சிவஸ்ரீ அ.மூர்த்தீஸ்வரக்குருக்கள் ஆகியோரின் வழிகாட்டலில் நடைபெறவுள்ளது.

ஈழ வளதிருநாட்டின் கிழக்கே மீன்பாடும் தேனாடாம் மட்டு நகருக்குத் தெற்கே அம்பாரை மாவட்டத்தில் அக்கரைப்பற்று நகரிலிருந்து இருமைல்களுக்கு அப்பால் சாகாமம் வீதியில் பனங்காடு என்னும் பெயரில் அழகிய கிராமம் அமைந்துள்ளது. இக்கிராமத்தை சுற்றி வற்றாத ஜீவநதியாக தில்லைநதி வளைந்து பாய்கின்றது. செந்நெல் விளையும் செழிப்பு மிகு வயல் நிலங்கள் நிறைந்து விளங்குகின்றன. கடல், ஆறு, குளம் ஆகிய மூன்று நீர் நிலைகளும் முறையுற அமைந்து மேலும் இக்கிராமத்தை அழகூட்டுகின்றன. இத்தகைய இயற்கை எழில்கள் நிறைந்த இக்கிராமத்தில் கிழக்கே முதலும் முடிவும் இல்லா முழுமுதற் பெருமான் ஸ்ரீ பாசுபதேசுவரர் என்ற நாமத்தோடு அன்னை ஸ்ரீ மாதுமை அம்பாள் சகிதம் வீற்றிருந்து அருள் பாலித்தருளுகின்றார்.

இந்து மதம் மூன்று பெரும் பிரிவுகளைக் கொண்டது. அவற்றுள் ஒன்றே சைவசமயம். சிவ பெருமானை முழுமுதற் கடவுளாக கொண்டு வழிபடுகின்ற

சமயமே சைவ சமயம். சைவம் சிவத்தோடு சம்மந்தமானது. அந்த வகையில் அம்பாரை மாவட்டத்தில் உள்ள ஒரே ஒரு பழம்பெரும் சிவ வழிபாட்டுத் தலம் பனங்காடு ஸ்ரீ பாசுhதேசுவரர் திருத்தலமேயாகும். இத்திருத்தலத்தின் தொன்மையையும் சிறப்பும் பற்றி கர்ண பரம்பரைக் கதைகள் ஏராளம் உள. இருந்தபோதிலும் சில நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட காலமிருந்து வரலாற்றை சுருக்கமாக பார்ப்போம்.

**தில்லை நதி செழித்தோடி கிழக்கினிலே பாய**
**சிறிது கண்தூரமதில் சிந்து அலை வீச**
**மல்லலம் பறவைகளும் வந்து தினம் போகும்**
**வான்குருவி கூடு கட்டி மகிழ்ந்து கதைபேசும்**
**இல்லையென்று இரப் போர்க்கு இனிப் போது மென்ன**
**ஏராளமாக நெல் எடுத்தளிக்கும் ஊராம்**
**தொல்லை வினை தீர்க்கு மெங்கள் சோம சுந்தரேசர்**
**சுகமளிக்க வந்த திருப் பனங்காட்டுரே!**

பனங்காடு கிராமம் மிகப்பழமையானது. இற்றைக்கு பலநூறு ஆண்டுகளுக்கு முன்னர் இங்கு ஐயனார் ஆலயம் அமைக்கப்பட்டு வழிபாடியற்றப் பட்டுள்ளது. தற்போது ஆலயத்திற்கு அருகில் உள்ள நெற்காணிகள் ஐயனார் வெளி எனவும், அருகில் உள்ள குளம் ஐயனார் குளம் எனவும் இன்றும் அழைக்கப்படுவதும் ஐயனார் வழிபாடுகள் நடைபெறுவதும் இதற்கு சான்று பகர்கின்றன. இவ்வழிபாடே காலப் போக்கில் சிவவழிபாடாக மாற்றம் பெற்றது என கூறுகின்றனர்.

இற்றைக்கு சுமார் நூறாண்டுகளுக்கு முன்னர் முப்பெரும் சித்தர்கள் இலங்கைக்கு விஜயம் செய்தனர். அவர்களில் ஒருவரே காரைதீவில் சமாதியடைந்த சித்தானைக்குட்டி சித்தர். அவர் ஐயனார் வழிபாட்டின் நிமித்தம் இங்கு வந்தபோது விரலால் கோடிட்டு காட்டி இவ்விடத்தில் சிவத்தலம் அமையும் காலப் போக்கில் அது தென்கைலாயமாய் திகழும் என்று கூறியுள்ளார். இவரது கூற்றை செவிமடுத்த பெரியவர்கள் சிற்பாசாரியை அழைத்து நிலையம் எடுத்தபோது சித்தானைக்குட்டி சுவாமி திருவடிகளால் காட்டிய இடமும் சிற்பாசாரி காட்டிய இடமும் ஒன்றாய் இருப்பதைக் கண்டு அதிசயித்தனர்.

பல ஆண்டுகள் கழிந்த பின்னர் இக்கிராமத்தில் வாழ்கின்ற ஆறு குடிமக்களும் தங்களுக்குள்ளே குடிக்கு ஒருவரைத்தெரிவு செய்து ஆறு பேர் கொண்ட வண்ணக்குமார் சபை அமைப்பினை ஏற்படுத்தி வழிபட்டு வருகின்றனர். வருடத்திற்கு ஒருமுறை ஆறு குடிகளும் ஒரு திருவிழாவும் அனைவரும் சேர்ந்து ஒரு திருவிழாவுமாக ஏழு திருவிழாவினை செய்து வருகின்றனர்.

வாச்சிக்குடா விஷேட நிருபர்...

# மஹாவலி வலய குடியேற்றவாசிகளுக்கு விரைவில் காணியுறுதிகள்



மஹாவலி வலயத்தினூடாக நாட்டின் தேசிய பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கு பங்களிப்பு வழங்குவதே, தனது நோக்கமென மஹாவலி வலயத்தை அண்டிய எல்லைகள் மற்றும் குடியேற்றவாசிகள் பொது அடிப்படை வசதிகள் இராஜாங்க அமைச்சர் சிறிபால கம்லத் தெரிவித்தார். மஹாவலி வலயத்திலுள்ள ஒவ்வொரு அங்குல காணிகளிலும் உணவுற்பத்தி உள்ளிட்ட பல திட்டங்கள், செயற்படுத்தப்படும்.இவற்றின் பலன்களை அங்கு வாழும் மக்களுக்கு கிடைக்கச் செய்வதில் கவனம் செலுத்தப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். அமைச்சில் பணிபுரிவோர் மற்றும் லங்கா மஹாவலி அதிகார சபை அதிகாரிகளை அண்மையில் சந்தித்து கருத்து தெரிவித்தபோதே ராஜாங்க அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார். இங்கு கருத்து தெரிவித்த அவர் மஹாவலி வலயத்தில் உள்ள காணிகளை முதலீட்டுக்காக வழங்கும்போது, இத்திட்டங்கள் மக்களுக்கு எவ்வாறு நன்மை பயக்கின்றன என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும். தேசிய பொருளாதாரத்திற்கு நன்மையளிக்கும் பட்சத்தில்தான் மஹாவலிக் காணிகள் முதலீட்டுக்காக வழங்கப்படும். மேலும் மஹாவலி வலயத்திலுள்ள மக்களின் காணிப்பிரச்சினைக்கும் விரைவில் தீர்வு காணப்படும். இத்தீர்வுகள் நாட்டின் பொருளாதாரத்துக்கும் பலம் சேர்க்கும். எனவே இவ்வாறான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான உரிய தரவுகளடங்கிய அறிக்கையை அதிகாரிகள் தயாரிக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## கடலில் மிதந்த இந்திய படகு கரை சேர்ப்பு

( புத்தளம் தினகரன் விசேட நிருபர் )

வென்னப்புவ கடவத்த கடற்கரைபிரதேசத்திலிருந்து 1 1/2 கிலோ மீட்டர் தூரத்தில் மிதந்து கொண்டிருந்த மீன்பிடி படகொன்றை பிரதேசவாசிகள் கடற்கரைக்கு இழுத்து வந்துள்ளனர்.

25 அடி நீளமான இப்படகு இந்திய மீனவர்களினால் உபயோகிக்கப்படுத்தப்பட்டதென்று, வென்னப்பு மீனவர்கள் குறிப்பிட்டனர். சுமார் 03 மாதங்களாக இந்த படகு கடலில் மிதந்திருந்திக்கலாமெனவும் அவர்கள் சுட்டிக் காட்டினர். சில காலங்களுக்கு முன்பும் இவ்வாறானதொரு படகை பிரதேசவாசிகள் கடலிலிருந்து கரைக்கு கொண்டு வந்தனர். கடலில் இவ்வாறான அநாதவராகக் கைவிடப்படுவதன் பின்னணிகள் பற்றி ஆராய வேண்டும் என பிரதேச மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

## போதை மாத்திரைகளை விநியோகித்தவர் கைது

களுத்துறை சுழற்சி நிருபர்

களுத்துறை, அழுத்கமை, மத்துகமை மற்றும் கட்டுக்குருந்தைப் பகுதிகளில் போதையூட்டும் அபாயகர வில்லைகளை விநியோகித்து வந்த ஒருவரைப் பொலிஸார் கைது செய்தனர்.

பயாகலை, கட்டுக்குருந்தலந்த பகுதியில் வசிக்கும் 22 வயதுடைய மருந்து விற்பனையாளரையே, பொலிஸார் கைது செய்துள்ளனர். களுத்துறை பொலிஸ் வலய குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாருக்கு, கிடைத்த தகவலையடுத்து கட்டுக்குருந்தைப் பகுதியில் நடாத்தப்பட்ட வீதிச்சோதனையிலே,போதைப் பொருளுடன் இவர் கைதானார்.இடுப்பில் சூசகமாக மறைத்து வைத்திருந்த 2 கிராம் ஹெரோயின் போதைப் பொருளும் இவரிடமிருந்து மீட்கப்பட்டது. கைது செய்யப்பட்டவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.





பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினராக நியமனம் பெற்றுள்ள அரச ஹஜ் கமிட்டியின் தலைவர் மர்ஜான் பளீலை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (22) பேருவளை மாளிகாச்சேனை நபவிய்யா மண்டபத்தில் காதிரியதுந் நபவிய்யா தரீக்காவின் ஆன்மீகத் தலைவர் சங்கைக்குரிய செய்குநாயகம் அஷ்ஷெய்க் அஹமத் பின் முஹம்மத் ஆலிமின் வழிகாட்டலின் கீழ் நபவிய்யா ஊடகமையம் மற்றும் நுன்கல்வி நிலையம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் நடைபெற்றது. பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல், நபவிய்யா தரீக்காவின் முரீதீன்களால் பைத் பாராயணத்துடன் அழைத்து வரப்படுவதையும் செய்குநாயகம் சார்பில் முஹம்மத் ஸஜாத் மஹ்ஸூம் பாராளுமன்ற உறுப்பினரை விழா மண்டபத்திற்கு முன்னாள் வரவேற்பதையும் படங்களில் காணலாம். அருகில் பேருவளை நகர பிதா மஸாஹிம் மொஹமட் உட்பட முக்கிய பிரமுகர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்; பேருவளை விசேட நிருபர்)





கொரோனா வைரஸ் தொற்று நோய் நீங்கி, நாட்டுக்கு நல்ல நேரம் பிறத்தல்,பொது மக்களுக்கு நல்ல காலம் பிறத்தல்,புத்தளத்தில் உரிய காலத்துக்கு மழை கிடைத்தல் என்பவற்றை வேண்டி, புத்தளம் நகரில் பால் பிரசாத பூஜை இடம் பெற்றது. புத்தளம் ஸ்ரீ முத்துமாரி அம்மான் கோவிலின் வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு, இந்த பூஜை இடம் பெற்றது. புத்தளம் ஐய்யனார் கோவிலிலிருந்து ஸ்ரீ முத்துமாறிரி அம்மான் கோவில் வரை,இந்த பால் பிரசாத பூஜை நடைபவனி இடம் பெற்றது
( புத்தளம் தினகரன் விசேட நிருபர் )



பாராளுமன்றத் தேர்தலில் தனது வெற்றிக்காக வாக்களித்த மக்களுக்கு நன்றி தெரிவிப்பதற்காக, பாராளுமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.இஷ்ஹாக் ரஹ்மான் அண்மையில் ஹொரவப்பொத்தானை யான் ஓயா கிராமத்திற்கு விஜயம் செய்தார். இதன்போது அவர் மாலையணிவித்து வரவேற்கப்படுவதை யும்,குழந்தையைத் தூக்கி முத்தமிடுவதையும் படங்களில் காணலாம். படம் : அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

## துப்பாக்கி, பணத்துடன் ஒருவர் கைது

களுத்துறை சுழற்சி நிருபர்

தினியாவல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கல்தெனியெல்ல பகுதியில்,அக்கப்பட்டாஸ்", வாயு ரைபில்ரக துப்பாக்கி (Air Rifle) மற்றும் 106370 ரூபா பெறுமதியான ரொக்கப் பணம் என்பவற்றுடன் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

இவற்றை இவர்,வீட்டிலிருந்து திருடியுள்ளதாக விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.இது தொடர்பில் அதேபகுதியைச் சேரந்த 36 வயதுடைய நபர் ஒருவர், தினியாகல பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச்சந்தேக நபர் அப்பகுதியில் வாழும் சாதாரண பொது மக்களுக்கு அன்றாடம் பெரும் அச்சுறுத்தலாக இருந்து வருவதாகவும் பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

மேலும் ஏற்கனவே,திருட்டுச் சம்பவம் தொடர்பில் இவர் பொலிஸாரால் தேடப்பட்டு

வந்தவரென்பதும் குறிப்பிடத்தக்கது.

இது தவிர,பல்வேறு திருட்டுச் சம்பவங்கள், பாலியல் பலாத்காரங்கள்,உட்பட்ட பல்வேறு குற்றச் செயல்களுடனும் இவர், தொடர்புடையவராவார்.வழக்குகளுக்கு ஆஜராகததால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டு தலைமறைவாக வாழ்ந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.





கொழும்பு வடக்கு ரோட்டரி கழகத்தின் 53 ஆவது வருடாந்த பொதுக் கூட்டம் கொழும்பு கலதாரி ஹோடலில் அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் ரோட்டரி மாவட்ட ஆளுநர் தாரிக் துல்பா பிரதம அதிதியாக கலந்து கொண்டார். தலைவர் லூசியன் பெரேரா, முன்னாள் தலைவர் அசோக பீரிஸ், செயலாளர் நாயகம் அரியவிக்ரம, மாவட்ட ஆளுநர் புபுது டி சொய்சா மற்றும் அம்ஜத் யூசுப் ஆகியோரும் இதில் கலந்துகொண்டனர். படம் : ருசெயிக் பாருக்





திறன்கள் அபிவிருத்தி, தொழில் கல்வி மற்றும் தொழில் நுட்ப இராஜாங்க அமைச்சர் டாக்டர் சீதா அரம்பேபொல,அண்மையில் அநுராதபுர மாவட்ட தொழில் நுட்ப பயிற்சி நிறுவனத்திற்கு விஜயம் செய்தார். கல்லூரி அதிபர் மற்றும் அதிகாரிகளுடன் பல்வேறு உரையாடிய அவர், கல்லூரியின் வளங்களையும் பார்வையிட்டார். (படம்:பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)

## பொரளை அஹதியாவில் முஹர்ரம் நிகழ்வு





ஏ.எஸ்.எம்.ஜாவித்

பொரளை அஹதிய்யா மற்றும் இஸ்லாமிய கல்வி நிலையத்தின் 33ஆவது, வருடாந்த ஹிஜ்ரி 1442 முஹர்ரம் நிகழ்வு அஹதிய்யா பாடசாலை அதிபர் ஷிப்லி ஹாசிமின் ஏற்பாட்டில் தலாபிட்டிய அஹதிய்யாவின் தலைவர் உவைன் உவைஸ் தலைமையில் நேற்று முன்தினம் (23) தெமட்கொட வை.எம்.எம்.ஏ தலைமைக் காரியால கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக சங்கைக்குரிய கிரிஇப்பேவே விஜித தேரரும் கௌரவ அதிதியாக பிரதமரின் ஆலோசகர் ஏ.எஸ்.எம்.நஸீம் ஹாஜியார் மற்றும் இப்திகார் அசீஸ் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது முஹர்ரம் தின விஷேட துஆப்பிரார்த்தனையை மௌலவி மஸாஹிம் நிகழ்த்தினார். மாணவர்களின் பேச்சு, இஸ்லாமிய கீதம் மற்றும் ஹஸீதா நிகழ்வுகளும் இங்கு இடம் பெற்றன. அஹதிய்யா மாணவர்களுக்கும், கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் இலவச சீருடைத் துணிகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மாத்தளை மாவட்ட

# எல்லைக் கிரமங்களில் காட்டு யானைகளின் அட்டகாசம் அதிகரிப்பு

**மாத்தளை சுழற்சி,அக்குறணை குறூப் நிருபர்கள்**

மாத்தளை மாவட்டத்தில் எல்லைக் கிரமங்களில் காட்டு யானைகளின் அட்டகாசம் அதிகரித்து வருவதாக பிரதேச மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். கடந்த காலங்களில் இது விடயமாக ஆட்சியாளர்கள் கவனமெடுக்காத காரணத்தால் தாம் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டு வந்துள்ளதாகவும் புதிய அரசாவது இதற்கு ஏற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

இது தொடர்பில் மக்கள் தெரிவித்த கருத்து,....



கடந்த பல வருடங்களாக மாத்தளை மாவட்ட எல்லைக் கிராமங்களில் காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்துள்ளதாகவும் இவ்வாறு சுமார் 30 கிராமங்கள் இதில் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

சீகிரிய, வஸ்கமுவ போன்ற பாதுகாக்கப்பட்ட வனப் பிரதேசங்களின் எல்லைகளில் உள்ள கிராமங்களே அதிகம் பாதிக்கப்பட்டு வருவதாகவும் சில இடங்களில் மின் வேலி போடப்பட்டிருந்த போதும் அவை பழுதடைந்துள்ளன. அவை புனரமைக்கப்படாத காரணத்தால் யானைகள் கிராமங்களுக்குள் பிரவேசிப்பதாகவும் தெரிவித்தனர்.

தம்புள்ள, கலேவல போன்ற கிராமங்களில் எல்லைக் கிரமங்களாக உள்ள பல இடங்களும் அண்மைக் காலமாக பாதிக்கப்பட்டுள்ளன. எனவே இது விடயமாக உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். அவ்வாறு பாதிக்கப்பட்ட ஒரு வீட்டையும் படத்தில் காணலாம்.

அமரர் சௌமியமூர்த்தி

# தொண்டமானின் ஜனன தினமன்றே தலைவர் தெரிவு

இ.தொ.காவின் தலைவர் அமரர் ஆறுமுகன் தொண்டமானின் மறைவின் பின்னர், அவ்வமைப்பின் தொழிற்சங்க பிரிவு மற்றும் அரசியல் கிளைகளுக்கான தலைமைப்பதவி இன்னும் வெற்றிடமாகவே காணப்படுகின்றது.

ஞாயிற்றுக்கிழமை 30 ஆம் திகதியே அமரர் சௌமியமூர்த்தி தொண்டமானின் ஜனன தினமாகும். அன்றைய தினம் தேசிய சபை கூடி புதிய தலைவரை தெரிவுசெய்யலாம் என அக்கட்சி வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

எனினும், காங்கிரஸ் தரப்பிலிருந்து இது பற்றி இன்னும் அதிகாரப்பூர்வ அறிவிப்பு எதுவும் வெளியாகவில்லை.

பொதுத்தேர்தல் முடிவடைந்த பின்னர் தேசிய சபை கூடியே ஜனநாயக முறைப்படி புதிய தலைவரை தெரிவுசெய்யும் என தேர்தலுக்கு முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. ஜீவன் தொண்டமானுக்கு பொதுச் செயலாளர் பதவி கையளிக்கப்படும்போதும் அதே அறிவிப்புதான் விடுக்கப்பட்டது.

தற்போது தேர்தல் முடிவடைந்துவிட்டது. விரைவில் மாகாணசபைத் தேர்தல் நடைபெறவுள்ளது. இவ்வாறானதொரு பின்புலத்திலேயே இ.தொ.காவின் தேசிய சபை எப்போது கூடுமென பலரும் கேள்வி எழுப்பிவருகின்றனர்.

ஆகஸ்ட் 30 ஆம் திகதியே அமரர் சௌமியமூர்த்தி தொண்டமானின் ஜனன தினமாகும். அன்றைய தினம் தேசிய சபை கூடி புதிய தலைவரை தெரிவுசெய்யலாம் என அக்கட்சி வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது. எனினும், காங்கிரஸ் தரப்பிலிருந்து இது பற்றி இன்னும் அதிகாரப்பூர்வ அறிவிப்பு எதுவும் வெளியாகவில்லை.

# நல்லாட்சியில் இடைநிறுத்தப்பட்டுள்ள 6, 548 நியமனங்களை மீள வழங்குமாறு கோரிக்கை



நல்லாட்சி அரசாங்கத்தால் வழங்கப்பட்டு, தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ள 6,548 திட்டமிடல் உதவியாளர்களுக்கான நியமனங்களை விரைவில் மீள வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. தமிழ் முற்போக்கு கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர் அரவிந்தகுமார் இந்த விடயத்தை வலியுறுத்தியுள்ளார்.

அண்மையில் ஊடகங்கங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

கடந்த ஆட்சியில் வழங்கப்பட்ட 1,300 இரண்டாம் மொழி ஆசிரியர்களுக்கான நியமனங்களையும் விரைவில் மீள வழங்குமாறும் அவர் கேட்டுள்ளார். எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு கூட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளதாகவும் அரவிந்தகுமார் குறிப்பிட்டுள்ளார்.

அந்த விடயத்தை ஏற்றுக்கொண்ட எதிர்க்கட்சித் தலைவர், இது தொடர்பில் விசேட பிரேரணை ஒன்றை முன்வைப்பதற்கு இணக்கம் தெரிவித்தாகவும் அவர் தெரிவித்தார். அதனூடாக திட்டமிடல் உதவியாளர்களுக்கும், இரண்டாம் மொழி ஆசிரியர்களுக்கும் இழைக்கப்பட்டுள்ள அநீதிக்கு விமோசனம் கிடைக்கும் என அரவிந்தகுமார் மேலும் தெரிவித்துள்ளார்.

# புதிய சபாநாயகருக்கு மல்வத்து அஸ்கிரிய தலைவர்கள் பாராட்டு



**எம்.ஏ .அமீனுல்லா**

புதிய சபாநாயகரான மஹிந்த யாபா அபேவர்தன அந்த பொறுப்புகளையும் கமைகளையும் புரிந்து கொண்டு பாராளுமன்றத்தை சிறந்த வழியில் முன்னெடுத்துச் செல்வார்.

அவர் நீண்ட காலமாக பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்திய ஒரு அனுபவம் வாய்ந்த பாராளுமன்ற உறுப்பினர் என்றும் மல்வத்தை மற்றும் அஸ்கிரியா விஹாரைகளின் பீடாதிபதிகள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

மேலும் சபாநாயகர் பதவிக்கு ஒரு மிதமான நபரை நியமிக்க எடுக்கப்பட்ட முடிவைப் தாம் வெகுவாக பாராட்டுவதாகவும், அதன் பணிகளை வெற்றிகரமாகச் செய்ய அனைவரும் ஆதரவு வழங்கப்பட வேண்டும் என்றும் பீடாதிபதிகள் கேட்டுக் கொண்டனர். சபாநாயகர் மஹிந்த யாபா அபேவர்தன நேற்று முன்தினம் (22 )ஆம் மல்வத்து மற்றும் அஸ்கிரிய மகா விகாரைகளுக்குச் சென்று பீடாதிபதிகளின் ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்ட பின்பே பீடாதிபதிகள் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

தொடர்ந்துரையாற்றிய மல்வத்தை விகாரையின் பீடாதிபதி, வணக்கத்திற்குரிய திப்பட்டுவாவே ஸ்ரீ சித்தார்த்த சுமங்கல தேரர்,

சமீப காலங்களில் பாராளுமன்றத்தின் சில உறுப்பினர்கள் பாராளுமன்றத்தின் கௌரவத்தை களங்கப்படுத்தியதை காண முடிந்தது என்றும் அவர் கூறினார். மேலும் எதிர்காலத்தில் இதுபோன்ற நிலை மீண்டும் வராமல் தடுக்க சபாநாயகர் உள்ளிட்ட அனைத்து மக்கள் பிரதிநிதிகளும் பொறுப்பேற்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

# 'புகைப்படத்தால் புதுயுகம் படைப்போம்' தலவாக்கலையில் கண்காட்சி







**ஹற்றன் விசேட நிருபர்**


மலையக மக்களின் வாழ்வியல் அம்சங்கள், அரசியல் பொருளாதாரம், சமயம், சுற்றுப்புற சூழல், தொழில்,கலை கலாசாரம் ஆகியவற்றை உள்ளடக்கிய வகையில் 'புகைப்படத்தால் புதுயுகம் படைப்போம்' எனும் தொனிப்பொருளில் புகைப்படக் கண்காட்சி நேற்று தலவாக்கலை கதிரேசன் மண்டபத்தில் நடைபெற்றது.

இக் கண்காட்சியினை தமிழ் முற்போக்கு கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர்களான இராதாகிருஸ்ணன், பதுளை பாராளுமன்ற உறுப்பினர் அரவிந்த குமார் ஆகியோர் ஆரம்பித்து வைத்தனர். கொவிட் 19 சுகாதார பொறிமுறைகளுக்கமைவாக அமைக்கப்பட்ட கண்காட்சியில் மலையக மக்களின் வாழ்க்கையில் காணப்படும் துன்பங்கள் மற்றும் அவலங்கள், வாழ்விட பிரச்சினைகள் போன்றன புகைப்படங்களாக காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த புகைப்படங்களை மலையகத்தில் உள்ள நான்கு தோட்டங்களைச் சேர்ந்த இளைஞர், யுவதிகளின் கை வண்ணத்தில் உருவாக்கப்பட்டுள்ளதுடன் ஹொலிரூட், லோகி, ஊவா, ஹைலன்ட், அட்டம் பிட்டிய ஆகிய பகுதிகளில் வாழும் மக்களின் வாழ்வியல் அம்சங்களே புகைப்படங்களாக தொகுத்துள்ளனர்.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் ஒழுங்கு செய்திருந்த இக்கண்காட்சிக்கு லிந்துல தலவாக்கலை நகர சபையின் தலைவர் அசோக சேபால, மலையக மக்கள் முன்னணியின் நிதிச்செயலாளர் புஸ்பா விஸ்நாதன் உட்பட பொது மக்கள் பலர் கலந்து கொண்டிருந்தனர்.

# திலகரின் "மலைகளைப் பேசவிடுங்கள்" நூல் அறிமுக விழா




அரசியல், சமூக, கலை, இலக்கிய செயற்பாட்டாளர் மல்லியப்புசந்தி திலகர் எழுதியுள்ள இரண்டாவது நூலான "மலைகளைப் பேசவிடுங்கள்" நூலின் அறிமுக விழா எதிர்வரும் 29 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 2 மணிக்கு ஹற்றன் நகரசபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. மூத்த எழுத்தாளரும் முன்னாள் மத்திய மாகாண சபை உப தவிசாளருமான மு.சிவலிங்கம் தலைமையில் நடைபெறும். நிகழ்வில் நூலின் ஆய்வுரையை பேராதனைப் பல்கலைக்கழக விரிவுரையாளர் ஆர்.எம்.ஜெயசீலன் வழங்க, முன்னாள் ஸ்ரீபாத கல்வியியல் கல்லூரி உப பீடாதிபதியும் விரிவுரையாளரும் கல்வித்துறை வளவாளருமான வ.செல்வராஜா கருத்துரை வழங்கவுள்ளார்.

நூல் அறிமுகத்தை வாசிப்புத் துறை வளவாளர் நா. கிருஷ்ணகுமார் வழங்க சுயாதீன ஊடகவியலாளர் ஜீவா சதாசிவம் நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கவுள்ளார். நூலாசிரியரின் ஏற்புரையுடன் நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களான அரசியல், சமூக செயற்பாட்டாளர்களான செந்தூரன் வரவேற்புரையையும் வினோஜ் நன்றியுரையையும் வழங்குவர்.

# உயர் பதவிகள் கேட்டு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால அழுத்தம் கொடுக்கவில்லை

## ஏற்றுமதி அபிவிருத்தி அமைச்சர் ஜானக வக்கும்புற

**இரத்தினபுரி சுழற்சி நிருபர்**

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உயர் பதவிகள் கேட்டு அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்கவில்லை என இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ஏற்றுமதி அபிவிருத்தி துறை அமைச் சருமான ஜானக வக்கும்புற நேற்று தெரிவித்தார்.

எம்பிலிபிட்டியவில் நடைபெற்ற ஊ டகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் பேசிய அவர்,...

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன என்னுடன் தனிப்பட்ட முறையில் அரசியல் மற்றும் பல விடயங்கள் குறித்துக் கலந்து ரையாடியுள்ளார். ஆனால் ஒரு போதும் அவர் தனக்கு அரசாங்கத்தில் உயர் பதவிகளோ அமைச்சு பொறுப்புக்களோ வேண்டும் என அழுத்தம் கொடுக்கவில்லை.

இந் நாட்டின் அதி உயர் அதிகாரமுடைய ஜனாதிபதி பதவியை வகித்த தனக்குப் பதவி மோகம் இல்லை எனவும் ஆனால் எந்தப் பொறுப்பான பதவி கிடைத்தாலும் அதனை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறேன் எனவும் அவர் என்னிடம் தெரிவித்தார்.

புதிய அரசியலமைப்பு சட்டத்தை உருவாக்குவதற்கு இந்நாட்டு மக்கள் 2/3 பெரும்பான்மை பலத்தை கொடுத்துள்ளனர்.ராஜபக்ச சகோதரர்களின் தலைமைத்துவத்திற்கு இந்நாட்டு மக்களுக்கு நம்பிக்கை இருக்கிறது. மக்கள் கொடுத்த வரத்தினை நாங்கள் ஒரு போதும் துஷ்பிரயோகம் செய்ய மாட்டோம் எனவும் அவர் தெரிவித்தார்.

# சிங்கராஜ வனத்தின் நடுவே பாரிய பாதை அமைப்பு : சூழல் பாதுகாப்பு அமைப்புகள் விசனம்

**இரத்தினபுரி சுழற்சி நிருபர்**



உலக உரிமை பட்டியலில் யுனெஸ்கோ நிறுவனத்தால் சேர்க்கப்பட்டு பாதுக்கப்பட்டு வரும் சிங்கராஜ காட்டின் நடுப் பகுதியில் பெரிய பாதையொன்று அமைக்கப்பட்டு வருவதால் சிங்கராஜ காட்டுக்கும் அதன் அண்மித்த வனங்களின் இயற்கை வளங்களும் பெரும் பாதிப்பு ஏற்பட்டு வருவதாக பொது மக்களும் சுற்றாடல் பாதுகாப்பு அமைப்புக்களும் முறைப்பாடு தெரிவித்து வருகின்னறன.

இக்காட்டின் இயற்கை தன்மையை அழிக்கும் வகையில் லங்காகம தெனியாய வழியான இப்பாதை அமைப்பு மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் டோசர்கள் மற்றும் கனரக இயந்திரங்கள் இதற்காகப் பயன்படுத்தப்பட்டு வருவதாகவும் இயற்கை சுற்றாடல் அமைப்பு குற்றஞ்சாட்டுகிறது. எனவே இவ்விடயத்தில் அவதானம் செலுத்தி இந்த காடழிவை தடுத்து நிறுத்துமாறு பொறுப்புவாய்ந்தவர்களிடம் வினயமாக வேண்டுவதாக பொது அமைப்புகள் தெரிவிக்கின்றன.

# அங்கும்புறையில் கசிப்பு தயாரித்த ஒருவர் கைது

**அக்குறணை குறூப் நிருபர்**

அங்கும்புறை பொலிஸ் பிரிவிலுள்ள வனப் பகுதியில் கசிப்பு தயாரித்துக் கொண்டிருந்த சந்தேக நபர் ஒருவரை அங்கும்புர பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அங்கும்புறை பொலிஸாருக்கு கிடைத்த தகவல் படி விஷேட சோதனை ஒன்றை மேற்கொண்ட பொலிஸார் கசிப்பு தயாரித்துக் கொண்டிருந்த சந்தேக நபரை கைது செய்ததுடன் 10,000 மில்லி லீட்டர் கோடா மற்றும் 750 மில்லி லீட்டர் கசிப்பு உட்பட கசிப்பு தயாரிப்பதற்கு பயன்படுத்திய எரிவாயு (கேஸ்) சிலிண்டருடன் உபகரணங்களையும் மீட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட சந்தேக நபரை கண்டி நீதவான் முன் ஆஜர் செய்யவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# மட்டக்களப்பில் கடும் வரட்சி; 23,335 குடும்பங்கள் பாதிப்பு

## கால்நடைகள் உணவு, நீர் இன்றி அலைவு





(பெரியபோரதீவு தினகரன் நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்போது கடும் வெய்யிலுடன் கூடிய காலநிலை நிலவி வருகின்றது. இதனால் மாவட்டத்தின் படுவாங்கரைப் பகுதியில் அமைந்துள்ள பெரும்பாலான கிராமங்களில் குடிநீர் தட்டுப்பாடு நிலவுவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். உள்ளூராட்சி மன்றங்கள் ஊடாக நீர்த் தாங்கிகள் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகின்றன. ஆனாலும் அவ்வாறு வழங்கப்படும் குடிநீர் தமக்கு போதுமானதாக இல்லை எனவும் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். இந்நிலையில் மனிதர்களுக்கு மாத்திரமின்றி குடிநீருக்கா கால்நடைகளும் அலைந்து திரிவதையும் அவானிக்க முடிகின்றது. மட்டக்களப்பு மாவட்டத்தின் பிரதான குளங்களின் நீர்மட்டமும் குறைந்துள்ளன. கோவில்போரதீவு, பெரியபோரதீவு, வெல்லாவெளி, பழுகாமம், மற்றும், களுதவளை, களுவாஞ்சிகுடி, மகிளூர், போன்ற பல பகுதிகளில் அமைந்துள் சிறிய குளங்கள் அனைத்தும் முற்றாக வற்றியுள்ளன. இவற்றால் கிராமங்களிலுள்ள கிணறுகளும், வற்றிப்போயுள்ளன. மக்கள் தமது அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு நீருக்காக காலையில் எழுந்தவுடன் அலைந்து திரியவேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி.கலாமதி பத்மராஜாவின் பணிப்புரைக்குமைய அனர்த்த நிவாரண சேவைப் பிரிவினால் மாவட்டத்தில் வரட்சிப் பாதிப்புக்குள்ளான 8 பிரதேச செயலகங்களில், அவ்வவ் பிரதேச செயலாளர்கள் ஊடாக அப்பகுதியிலுள்ள பிரதேச சபைகளின் மூலம், வவுசர்கள் மூலம் குடிநீர் வழங்கும் செயற்பாடுகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதுவரையில் மாவட்டத்தில் 23,335 குடும்பங்களைச் சேர்ந்த 64,761 மக்கள் வரட்சியினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், ஏற்கனவே வரட்சியினால் பாதிக்கப்படும், பிரதேச சபைகளுக்கு 5 பெரிய வவுசர்கள், 17 உழவு இயந்திரத்தைக் கொண்டு பயன்படுத்தும் வவுசர்கள், என்பனவும் பாதுகாப்பு அமைச்சின் கீழுள்ள அனர்த்த நிவாரண சேவைப் பிரிவினால் வழங்கி வைக்கப்பட்டுள்ளதாகவும், மாவட்ட செயலகத்தின் அனர்த்த நிவாரண சேவைகள் உத்தியோகஸ்த்தர் ஆர்.சிவநாதன் தெரிவித்தார்.

# வீட்டுத்தோட்ட அறுவடை விழா



பாண்டிருப்பு தினகரன் நிருபர்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் சுபீட்சத்தின் நோக்கு திட்டத்திற்கமைய நாடு முழுவதும் 'சௌபாக்கியா' வீட்டுத் தோட்டச் செய்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதற்கமைய கிழக்கு மாகாண விவசாய திணைக்களத்தினால் காரைதீவு விவசாய போதனாசிரியர் பிரிவில் மாதிரி வீட்டுத்தோட்ட மரக்கறி செய்கை அறுவடை விழா காரைதீவு விவசாய போதனாசிரியர் ஏ.எல்.ரதீனாபேகம் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் அக்கரைப்பற்று வலய உதவி விவசாயப் பணிப்பாளர் திருமதி ஏ.ரவீந்திரன், தலைமைப்பீட விவசாயப் போதனாசிரியர் எஸ்.பரமேஸ்வரன், வலய போதனாசிரியர் ஏ.எல்.ரபீக், தொழிநுட்ப உதவியாளர் எஸ்.நிலக்ஷி, பாடவிதான உத்தியோகத்தர்களான கோகுலராஜ், எஸ்.ஏ.எல்.பஹ்மி அஹமட், ஏ.பீ.தஸ்லிம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## கிண்ணியாவில் குடிநீரின்றி இரண்டாயிரம் பேர் பாதிப்பு

(ரொட்டவெவ குறூப் நிருபர்)

திருகோணமலை கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள 31 கிராம உத்தியோகத்தர் பிரிவில் 6 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் குடிநீர் தட்டுப்பாடு நிலவுவதால் 2000க்கும் மேற்பட்டவர்கள் குடிநீர் இன்றி பாதிக்கப்பட்டுள்ளனர். கிண்ணியா பிரதேச செயலாளர் முகம்மது கனியின் ஆலோசனைக்கு அமைய குழாய் நீர் இல்லாத பிரதேசங்களிலுள்ள குடும்பங்களுக்கு தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சின் ஊடக குடிநீர் வழங்கப்பட்டு வருகின்றது.

வரட்சியி னால் நண்ணீர் மீன் வளர்ப்பாளர்கள், கால் நடை வளர்ப்பாளர்கள் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளதாக கிண்ணியா பிரதேச செயலக,தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் மைய அபிவிருத்தி உத்தியோகத்தர் றஸ்மி தெரிவித்தார்.

## மஹா கும்பாபிஷேகம் இன்று ஆரம்பம்

பனங்காடு தினகரன் நிருபர்

அக்கரைப்பற்று பனங்காடு அருள்மிகு மாதுவை உடனுறை ஸ்ரீ பாசுபதேசுவரர் தேவஸ்தான புனராவர்த்தன அஷ்டபந்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேக விழா இன்று திங்கட்கிழமை ஆரம்பிக்கப்பட உள்ளது.

இவ்வாலயத்தின் மகா கும்பாபிஷேகம், சர்வாரி வருடம் ஆவணி மாதம் 12ம் நாள் வெள்ளிக்கிழமை சுக்கிலபட்ச தசமி திதியும் மூல நட்சத்திரமும் அமிர்தசித்த யோகமும் கூடிய காலை 6 மணி முதல் ஏழு இருபது மணி வரையான சுபமுகூர்த்த நேரத்தில் சிம்ம லக்கின சுப முகூர்த்தத்தில் மகா கும்பாபிஷேகம் நடைபெற உள்ளது. கும்பாபிஷேக நிகழ்வுகளின் விசேட அம்சமாக எண்ணைக் காப்பு சரத்தும் நிகழ்வு 25 ஆம் திகதி 11:55 முதல் 26ஆம் திகதி மாலை 4 மணி வரை எண்ணைக்காப்பு சார்த்த முடியும். சிவஸ்ரீ க கு மூர்த்தீஸ்வரர் குருக்களின் ஏற்பாட்டில் இடம்பெறும் கும்பாபிஷேக நிகழ்வில் பிரதிஷ்டா பிரதம பிரதிஷ்டா குரு சிவஸ்ரீ பாலகுகேஸ்வர சிவாச்சாரியார் தலைமையில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## திருகோணமலை அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல்

கந்தளாய் தினகரன் நிருபர்

நிலையான நகர அபிவிருத்தி திட்டத்தின் கீழ் திருகோணமலை நகர்ப்புறங்களில் செயல்படுத்தப்படவிருக்கும் அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பாக நேற்றுமுன்தினம் (22) அரசாங்க அதிபர் அசங்க அபேவர்த்தனவின் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

இந்த நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் முறையான நகர்ப்புற திட்டமிடலுக்கான வாய்ப்பு வழங்கப்படும் என்றும் பொதுமக்கள் பெரும் பலன்களைப் பெற முடியும் என்றும் அவர் இதன் போது தெரிவித்தார்.

திருகோணமலை நகர்ப்புறங்களில் இந்த மேம்பாட்டுத் திட்டம் எவ்வாறு செயல்படுத்தப்படுகிறது என்பதை திட்ட அதிகாரிகள் தெளிவுபடுத்தினர். நிலையான அபிவிருத்தித் திட்டம் நிர்வாக மையங்கள், வணிகப் பகுதிகள், பொதுப் போக்குவரத்து, உடற்பயிற்சி பகுதிகள், சுற்றுச்சூழல் மேம்பாடுகள் மற்றும் நகரை அழகுபடுத்தல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் இதன் போது கலந்துரையாடப்பட்டன.

இந் நிகழ்வில் கிழக்கு மாகாணத்தின் தலைமைச் செயலாளர் துசிதா பி. வனிகசிங்க, திட்டங்களுக்கு பொறுப்பான அதிகாரிகள், நகர்ப்புற மேம்பாட்டு ஆணையத்தின் அதிகாரிகள், பல்வேறு துறைகளின் தலைவர்கள் மற்றும் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

## வடிகான்களுக்கு மூடி இன்மையால் மக்கள் அவதி

பாண்டிருப்பு தினகரன் நிருபர்

பாண்டிருப்பில் திருவள்ளுவர் வீதி, திரௌபதை அம்மன் ஆலய முன் வீதி, மாரியம்மன் ஆலய வீதி உட்பட பல உள்வீதிகளில் அமைந்துள்ள வடிகான்களுக்கு மேல் கொங்கிறீட் மூடிகள் இடப்படாமையினால் மக்கள் விபத்துகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

பாண்டிருப்பிலுள்ள உள் வீதிகள் சிலவற்றில் அமைக்கப்பட்டுள்ள வடிகான்களுக்கு மேல் கொங்கிறீட் மூடிகள் போடப்படாமையினால் அவ் வீதிகளில் பயணிப்போர் பெரும் சிரமங்களுக்கு முகம்கொடுத்துள்ளதுடன், விபத்துக்குள்ளாகியும் வருகின்றனர். உள் வீதிகள் குறுகியதாகவுள்ள நிலையில் வடிகான்களுக்கும் மூடிகள் இன்மையால் வாகனங்களில் வருவோர் அதனை திருப்பமுடியாதுள்ளனர். இரவுவேளையில் பயணிப்போர்வடிகான்களுக்குள்விழுந்துவிபத்துக்குள்ளாகியும் வருகின்றனர்.

## சம்மாந்துறை தேசிய பாடசாலைக்கு புதிய அதிபர்



(காரைதீவு குறூப் நிருபர்)

சம்மாந்துறை முஸ்லிம் மத்திய கல்லூரியின் புதிய அதிபராக இலங்கை கல்வி நிருவாக சேவையின் (SLEAS) ஏ.எம்.நாஸீர் அலி நியமிக்கப்பட்டுள்ளார்.இவர் யாழ் பல்கலைக் கழகத்தின் (SLEAS(III), BCS (UOJ), PGDE) பட்டத்தை பெற்றவர் ஆவார். அத்தோடு இலங்கை கல்வி நிருவாக சேவை (SLEAS) பரீட்சையில் சித்தி பெற்ற வருமாவார்.

# முஸ்லிம் காங்கிரஸின் மூலமே சவால்களை வெற்றி கொள்ள முடியும்

## முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மன்சூர்

சம்மாந்துறை கிழக்கு தினகரன் நிருபர்)



முஸ்லிம் சமூகத்தின் சவால்களை வெற்றிகொள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்ற இயக்கம் அவசியமாகும். நமது சமூகத்தின் விடிவுக்காக உருவாக்கப்பட்ட இந்த இயக்கமே நமக்கான பெரும் சக்தியாகும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஐ.எம். மன்சூர் தெரிவித்தார்.

பாராளுமன்றத் தேர்தலில் தனது வெற்றிக்காக உழைத்த கட்சி செயற்பாட்டாளர்கள் மற்றும் ஆதரவாளர்களுக்கு நன்றி தெரிவிப்பதற்கான கூட்டம் நேற்றுமுன்தினம் (22) சம்மாந்துறையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலே இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில், அரசு ஒரே நாடு ஒரே சட்டம் என்ற கோஷத்தை முன் வைத்து நாட்டில் புதிய கலாசாரத்தை உருவாக்க முற்பட்டிருக்கின்றது. நாட்டில் நடைமுறையிலுள்ள தனியார் சட்டங்களை ஒழிக்க நடைவடிக்கை எடுக்கப்படவுள்ளன. இதன் மூலம் முஸ்லிம்களின் தனியார் சட்டங்கள் நீக்கப்பட முஸ்தீபுகள் நடைபெறப் போகின்றன.

அரசின் புதிய உத்தேச அரசியலமைப்பு திருத்தத்தில் வரவுள்ள தேர்தல் முறை மாற்றத்தால் சிறுபான்மை மக்களின் பிரதிநிதித்துவங்களை குறைக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

முஸ்லிம் சமூகத்தின் உரிமை போராட்டத்தில் முதுகெலும்பாக முஸ்லிம் காங்கிரஸ் எல்லாக் காலங்களிலும் மிகவும் நேர்த்தியாகவும், புத்திசாதுரியத்துடனும் தனது காய்நகர்த்தலை மேற்கொண்டு வருகின்றது.

இந்த இயக்கத்தின் கீழ் அணிதிரள்வதன் மூலமே ஒற்றுமையின் வெளிப்பட்டைக் காணமுடியும் என்றார்.

## அட்டாளைச்சேனை அஸ்ரப் நகரில் சேதன பசளை உற்பத்தி தொழிற்சாலை

(சாய்ந்தமருது குறூப் நிருபர்)

அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்களுக்கான சேதனப் பசளை உற்பத்தி தொழிற்சாலையொன்று அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவின் அஸ்ரப் நகர் கிராமத்தில் கிழக்கு மாகாண சபையால் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இத்தொழிற்சாலை 250 மில்லியன் ரூபா செலவில் நாளொன்றிற்கு 50 டொன் சேதனப் பசளையை உற்பத்தி செய்யும் நோக்கத்தில் இத்தொழிற்சாலை அமைக்கப்பட்டுள்ளது. இத்தொழிற்சாலையை அண்மையில் கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யகம்பத் திறந்து வைத்தார்.

கல்முனை மாநகர சபை, அக்கரைப்பற்று மாநகர சபை, சம்மாந்துறை, நாவிதன்வெளி, நிந்தவூர், காரைதீவு, அட்டாளைச்சேனை, ஆலையடிவேம்பு, அக்கரைப்பற்று பிரதேச சபை என்பவற்றிலிருந்து சேகரிக்கப்படும் திண்மக்கழிவுகள் இத்தொழிற்சாலைக்குக் கொண்டு வரப்பட்டு சேதனப் பசளையாக மாற்றம் செய்யப்பட்டு விவசாயிகளுக்கு சகாய விலையில் விற்பனை செய்யப்படவுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் இவ்வாறான சேதனப்பசளை தொழிற்சாலை காத்தான்குடி பிரதேசத்தில் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அம்பாறை மாவட்டத்தில் கரையோரப் பிரதேசங்களில் உள்ள உள்ளூராட்சி நிறுவனங்களிலிருந்து சேகரிக்கப்படும் திண்மக்கழிவுகளை சேதனப் பசளையாக மாற்றும் இரண்டாவது தொழிற்சாலை இதுவாகும்.

இத்தொழிற்சாலை அமைக்கப்படுவதற்கு முன்னர் அஸ்ரப் நகரில் அமைக்கப்பட்டிருந்த சேதனப்பசளை உற்பத்தி நிலையம் நாளொன்றிற்கு 10 டொன்களையே உற்பத்தி செய்தமை குறிப்பிடத்தக்கது.

## அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் பீ.சி.ஆர் பரிசோதனை

(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)

அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயப் பிரிவில் தொடர்ந்தும் பீ.சி.ஆர் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும், இதுவரை நிறைவு பெற்றுள்ள 35 பரிசோதனைகளில் யாருக்கும் தொற்றில்லை என்பது உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் ஏ.எம்.இஸ்மாயில் தெரிவித்தார்.

இதுவரை மேற்கொள்ளப்பட்ட மொத்தம் 35 பரிசோதனைகளில் எவருக்கும் கொரோனா தொற்று உறுதி செய்யப்படவில்லை என அவர் சுட்டிக்காட்டினார்.அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிக்குட்பட்ட பிரதேசங்களில் அதிகம் பொது மக்களுடன் தொடர்பு பேணுபவர்கள், பிரயாணங்களின் மூலம் அதிகம் வெளியூர் தொடர்புகளைக் கொண்டுள்ளவர்கள், வெளிநாடுகளிலிருந்து அண்மைக்காலத்தில் பிரதேசத்திற்குத் வருகை தந்தவர்கள், சிகையலங்கார தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் என பல தரப்பட்டோர் பீ.சி.ஆர் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

இதுவரை சுமார் 35 பீ.சி.ஆர் பரிசோதனைகள் நிறைவடைந்துள்ளன. எதிர்வரும் நாட்களில் தொடர்ந்தும் பரிசோதனை முன்னெடுக்கப்படும் எனவும் சுகாதார வைத்திய அதிகாரி மேலும் குறிப்பிட்டார்.



கல்வி அமைச்சினால் பாடசாலை மாணவர்களுக்கு போசாக்கு உணவு வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மூதூர் கல்வி வலயத்திற்கு உட்பட்ட உமர் பாறூக் வித்தியாலயத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் மூதூர் வலயக் கல்விப் பணிப்பாளர் இஸட். எம்.எம். நளீம் முனவ்பரா, மூதூர் பலநோக்கு கூட்டுறவு சங்க தலைவர் வி.எம். நகீப் ஆகியோர் பாடசாலை அதிபர் ஐ.எம். றிஸ்வானிடம் உணவுப் பொதிகளை வழங்கி வைப்பதை காணலாம். (படம் : மூதூர் தினகரன் நிருபர்)






திருகோணமலை மாவட்டத்தில் இயங்கி வரும் எழுத்தாணி கலைப்பேரவை மற்றும் அகம் மனிதாவிமான வள நிலையம் என்பன இணைந்து இளைஞர்களுக்கான ஊடகத்துறை டிப்ளோமா பயிற்சி நெறியை ஆரம்பிப்பதற்கான நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம் பெற்ற போது. (படங்கள்: அன்புவழிபுரம் தினகரன் நிருபர்)

# விலைமனுக் கோரல்

## வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) கம்பனி

### விலைக்கேள்வி இலக்கம் : 183/T/2019

### மத்தளை இராஜபக்ஷ சர்வதேச விமானநிலையத்திற்கு தொழிலாளர்களை வழங்குதல்

வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) கம்பனியின் தவிசாளரால், மத்தளை இராஜபக்ஷ சர்வதேச விமானநிலையத்திற்கு தொழிலாளர்களை வழங்குவதற்காக முத்திரைக் குறியிடப்பட்ட விலைக்கேள்விகள் தகைமைகளை பூர்த்தி செய்துள்ள விலைக்கேள்வியாளர்களிடமிருந்து இத்துடன் அழைக்கப்படுகின்றன. ஆரம்பத்தில் ஒப்பந்தம் ஒரு வருட காலத்துக்காக அளிக்கப்படுவதுடன் திருப்திகரமான செயலாற்றுகையினைக் கருத்திற் கொண்டு அது மேலுமொரு வருடத்தால் நீடிக்க முடியும். மத்தளை இராஜபக்ஷ சர்வதேச விமானநிலையத்தின் இவ் அனைத்து கட்டுமானப் பணிகளும் விவரக்குறிப்பீடு மற்றும் விலைப்பட்டியலில் உள்ளவாறும் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

இவ் ஒப்பந்தம் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விலைக்கேள்வியாளர்களுக்கே வழங்கப்படுவதுடன், இந்த தாபனத்தில் இதற்கு முன்னர் நிராகரிக்கப்பட்ட ஒப்பந்த பெயர் பட்டியலில் பெயர் உள்ளடங்கப்படாத ஒருவர் / தாபனமாக அமையப் பெறுதல் வேண்டும்.

கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) கம்பனியின், வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவிலிருந்து (தொலைபேசி இலக்கங்கள் : 011-2264103/ 011-2264102) விலைக்கேள்விக் கட்டணமாக திருப்பிச் செலுத்தப்படாத ரூபா 4,500.00 (நான்காயிரத்து ஐந்நூறு மாத்திரம்) காசாக செலுத்துவதன் மூலம் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்ட அக்குறித்த விலைக்கேள்வி ஆவணங்களை கொள்வனவு செய்துகொள்ள முடியும். இவ் விலைக்கேள்வி ஆவணங்கள், 2020.08.25 ஆந் திகதி முதல் 2020.09.21 ஆந் திகதி வரையில் ஏதேனும் வேலை செய்யும் நாட்களில் மு.ப. 09.00 மணிக்கும் பி.ப. 03.00 மணிக்கும் இடையேயான காலப்பகுதிக்குள் வெளியிடப்படும். இக்குறித்த விலைக்கேள்வி ஆவணங்களை மேற்குறிப்பிட்ட விலாசத்தில் கட்டணமின்றி இலவசமாக பார்வையிட முடியும்.

விலைக்கேள்வி உத்தரவாதத்திற்காக அக்குறித்த விலைக்கேள்வி ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள தாபனத்தினால் வெளியிடப்படுகின்ற ரூபா 150,000.00 (ரூபா ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் மாத்திரம்) பெறுமதியான பிணைமுறி, விலைக்கேள்வியுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

2020.09.09 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு மத்தளை இராஜபக்ஷ சர்வதேச விமானநிலையத்தின் "சிவில் பொறியியல் பிரிவின் கேட்போர் கூடத்தில் நடைபெறும் ஆரம்ப விலைக்கேள்வி சம்பந்தமாக இடம்பெறும் கூட்டத்தில் பங்கேற்குமாறு அனைத்து விலைக்கேள்வியாளர்களுக்கும் அல்லது அவர்களின் அதிகாரம்பெற்ற பிரதிநிதிகளுக்கு இத்துடன் அழைப்பு விடுக்கின்றேன்.

செயலாளர், பெறுகைக் குழு இலக்கம் 2, வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவு, வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) கம்பனி, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், கட்டுநாயக்க என்ற முகவரிக்கு முத்திரைக் குறியிடப்பட்ட விலைக்கேள்வி ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன், 2020.09.22 ஆந் திகதி பி.ப. 02.00 மணிக்கு அக்கால அவகாசம் முடிவடையும். அத்திகதியில் குறித்த நேரத்திற்குரிய கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும்.

இது தொடர்பாக மேலதிக தகவல்களை, கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) கம்பனியின், சிவில் பொறியியலாளர் (பராமரிப்பு) பிரிவின், கிளைத் தலைவர் ஊடாக 011-2264700/ 011-2264704 என்ற தொலைபேசி இலக்கங்களை அழைப்பதன் மூலம் பெற்றுக்கொள்ளமுடியும்.

**தவிசாளர்,**
**வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனி**
**பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம்,**
**கட்டுநாயக்க.**

# விலைமனுக் கோரல்

## வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) கம்பனி

### கேள்விப்பத்திர இலக்கம். : 169/T/2018

### தொடர்பாடல் ஒருங்கிணைப்பு கட்டிடம் பண்டாரநாயக்க சர்வதேசவிமானநிலையம், கட்டுநாயக்க

தவிசாளர், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) கம்பனியினால் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலைய வளாகத்தில் தொடர்பாடல் ஒருங்கிணைப்பு கட்டிடத்துக்காக முத்திரைக் குறியிடப்பட்ட விலைமனுக்கள், தகைமை பெற்ற மற்றும் தகுதியுடைய விலைகூறுநர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

இவ் ஒப்பந்தத்தின் கால எல்லை – 365 நாட்களாகும்.

கருத்திட்ட அமைவிடம் : கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம் ஆகும்.

தேசிய போட்டியிடப்படும் விலைக்கூறல் நடைமுறைகளுக்கமைவாகவே, விலைக்கூறல்கள் இடம்பெறும்.

இவ் ஒப்பந்தத்தை வழங்குவதற்கு தேர்ந்தெடுக்கப்படுகின்ற தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விலைக்கூறுநர் வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) கம்பனியின் நிராகரிக்கப்பட்ட பெயர் பட்டியலில் பெயர் உள்ளடங்கப்படாத ஒருவர் / தாபனமாக அமையப் பெறுதல் வேண்டும். மேலும் இவ்விலைக்குறிப்பீட்டாளர்கள் கட்டுமான கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் (CIDA) கட்டிடங்களை நிர்மாணிப்பதற்காக சீ4 (C-4) தரத்தில் அல்லது அதற்கு உயர் தரத்தில் பதிவுசெய்த, குறித்த வகையிலான கட்டுமானப் பணிகள் தொடர்பாக அனுபவமுள்ள ஒப்பந்த தாரராக இருத்தல் வேண்டும்.

இது தொடர்பாக ஆர்வம் காட்டும் விலைக்குறிப்பீட்டாளர்களுக்கு, 2020.08.25 முதல் 2020.09.22 ஆந் திகதி வரையில் ஏதேனும் வேலை செய்யும் நாட்களில் மு.ப. 09.00 மணிக்கும் பி.ப. 03.00 மணிக்கும் இடையேயான காலப்பகுதிக்குள், கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) கம்பனியின், வழங்கீட்டுத்தொடர் முகாமைத்துவ பிரிவின் கிளைத்தலைவருக்கு எழுத்தாலான வேண்டுகோள் விடுப்பதன் மூலம் மற்றும் கேள்விப்பத்திர கட்டணமாக திருப்பி தரப்படாத ரூபா 15,000.00 (பதினைந்தாயிரம் மாத்திரம்) காசாகச் செலுத்தி, ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்ட அக்குறித்த விலைக்குறிப்பீட்டு ஆவணங்களைக் கொள்வனவு செய்து கொள்ள முடியும். அக்குறித்த விலைக்குறிப்பீட்டு ஆவணங்களை மேற்குறிப்பிட்ட விலாசத்தில் கட்டணங்களின்றி பார்வையிட முடியும்.

கேள்விப்பத்திர உத்தரவாதத்திற்காக விலைக்கூறுநர்கள், ஒரு விலைக்குறிப்பீட்டிற்காக அக்குறித்த கேள்விப்பத்திரங்களில் குறிப்பிட்டுள்ள நிறுவனத்தினால் வெளியிடப்படுகின்ற ரூபா. 1,000,000.00 (பத்து இலட்சம் மாத்திரம்) காசாக அல்லது கேள்வி தகவல் அட்டவணையில் தொகுதி இலக்கம் 5 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கேள்வியின் அடிப்படையிலான விலைக்குறிப்பீட்டு பிணைமுறியுடன் அக்குறித்த விலைக்குறிப்பீடுகள் முன்வைத்தல் வேண்டும். அதற்குச் சமனான பிணைமுறி (தேவையேற்படும்போது காசாக மாற்றக்கூடிய) கேள்விப்பத்திரத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

2020.09.09 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) கம்பனியின், நிர்வாக கட்டிட வளாகத்தில், 4 ஆம் மாடியில் அமைந்துள்ள சிவில் பொறியியலாளர் (திட்டமிடல் மற்றும் வடிவமைப்பு) பிரிவில், கேட்போர் மண்டபத்தில் இடம்பெறும் ஆரம்ப விலைக்கூறல்கள் குறித்து நடைபெறும் விளக்க கூட்டத்தில் பங்கேற்குமாறு, அனைத்து விலைக்கூறுநர்களுக்கும் மற்றும் அவர்களது அதிகார பூர்வ பிரதிநிதிகளுக்கும் இத்துடன் அழைப்பு விடுக்கின்றேன்.

பூர்த்தி செய்யப்பட்ட விலைக்குறிப்பீட்டு பிரதியுடன் 2020.09.23 ஆந் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு நேரடியாக சமுகமளித்து அல்லது பதிவுத் தபால் மூலம் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) கம்பனியின், வழங்கீட்டுத்தொடர் முகாமைத்துவ பிரிவின், பெறுகைக் குழு இலக்கம் 1, தவிசாளருக்கு கிடைக்கக்கூடியவாறு ஏற்பாடுகள் செய்தல் வேண்டும். தாமதமாக கிடைக்கும் விலைக்குறிப்பீடுகள் நிராகரிக்கப்படும். அத்திகதியில் அக்குறித்த நேரத்திற்கு விலைக்குறிப்பீடுகள் பொறுப்பேற்கும் நேரம் முடிந்ததும் விலைக்கூறுநர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் முன்னிலையில் அக்குறித்த விலைக்குறிப்பீடுகள் திறக்கப்படும்.

இது தொடர்பாக மேலதிக தகவல்களைப் பெறவேண்டுமாயின், கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) கம்பனியின், சிவில் பொறியியலாளர் (திட்டமிடல் மற்றும் வடிவமைப்பு) பிரிவின் கிளைத் தலைவரினூடாக தொலைபேசி இலக்கங்கள் 011-2263502 / 011-2263506 மற்றும் தொலைநகல் 011-2251356 ஊடாக பெற்றுக்கொள்ள முடியும்.

**தவிசாளர்,**
**வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனி,**
**பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம்,**
**கட்டுநாயக்க.**

# விலைமனுக் கோரல்

## வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) கம்பனி

### விலைக்குறிப்பீட்டு இலக்கம்: 106/T/2019

### வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) கம்பனியின் ஓய்வீடத்துக்காக கண்ணாடி மூடிகளைக் கொண்ட 20 Chafing Dish மற்றும் Touch Panel களைக் கொண்ட 10 Induction Hob களை அளித்தல்

வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனியின், தவிசாளரால், கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை ) கம்பனியின் ஓய்விடத்துக்காக கண்ணாடி முடிகளைக் கொண்ட 20 Chafing Dish மற்றும் Touch Panel களைக் கொண்ட 10 Induction Hob களை அளிப்பதற்காக விலைக் கேள்விகள், அழைக்கப்படுகின்றன.

விலைக்கேள்வி இணைகோப்பு திருப்பித் தரப்படாத ரூபா ஆயிரம் (1,000.00 ரூபா) காசு வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) கம்பனி, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின், கட்டுநாயக்கவில் அமைந்துள்ள வழங்கல் தொடர் முகாமைத்துவ பிரிவிற்குச் செலுத்துவதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியுமாக இருப்பதுடன், அதற்காக விலைக்கேள்வியாளரால் வேண்டுதல் கடிதமொன்று சமர்ப்பித்தல் வேண்டும்.

வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) கம்பனியின், பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின், கட்டுநாயக்கவில் அமைந்துள்ள வழங்கல் தொடர் முகாமைத்துவ பிரிவினால் 2020.08.25 ஆந் திகதி முதல் 2020.09.21 ஆந் திகதி வரை ஏதேனும் வேலை செய்யும் நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரையிலான காலப்பகுதி வரை விலைக்கேள்வி இணைக்கோப்பினை பெற்றுக்கொள்ள முடியும். தேவைப்படுமாயின் மேற்குறிப்பிட்ட விலைக்கேள்வி ஆவணங்கள் வழங்கல் தொடர் முகாமைத்துவ பிரிவு அலுவலகத்தில் இலவசமாக பார்வையிட முடியும்.

விலைக்கேள்வியாளர்கள் அவர்களின் விலைக்கேள்விகள் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனியில் அமைந்துள்ள வழங்கல் தொடர் முகாமைத்துவ பிரிவில் அதற்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி பெட்டியில் வைப்பீடு செய்தல் வேண்டும். மேலும், விலைக்கேள்வியாளரின் விருப்பத்தின் பிரகாரம் அவர்களின் முத்திரையிடப்பட்ட விலைக்கேள்விகள் மேற்குறிப்பிட்ட விலாசத்திற்கு தனிப்பட்ட முறையில் நேரடியாக சமுகமளித்தும் ஒப்படைத்து விட முடியும்.

விலைக்கேள்விகளைப் பொறுப்பேற்றல் 2020.09.22 ஆந் திகதி செவ்வாய் பி.ப. 02.00 மணிக்கு முடிவடைவதுடன் உரிய விலைக்கேள்விகளைத் திறத்தல் அத்துடன் வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் கம்பனி, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், கட்டுநாயக்கவில் அமைந்துள்ள வழங்கல் தொடர் முகாமைத்துவ பிரிவில் இடம் பெறும். விலைக்கேள்வியாளர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளுக்கு விலைக்கேள்விகளைத் திறக்கும்போது அதில் பங்கேற்க முடியும்.

விலைக்கேள்வி உத்தரவாதத்திற்காக இலங்கையில் செயற்படுகின்ற, அரசின் மத்திய வங்கியின் அங்கீகாரம் பெற்ற வங்கியொன்றினால் தவிசாளர், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமான சேவைகள் கம்பனியின் தேவையின் அடிப்படையில் செலுத்தும் வகையில் வெளியிடப்பட்ட ரூபா எழுபத்தேழாயிரம் ரூபா.77,000.00) பெறுமதி வாய்ந்த வங்கி பிணை முறி விலைக்கேள்வியுடன் சமரப்பிக்கப்படுதல் வேண்டும்.

இது தொடர்பாக மேலதிக தகவல்களைப் பெறவேண்டுமாயின், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனியின், வழங்கல் தொடர் முகாமைத்துவ பிரிவின் தொலைபேசி இலக்கம். 011-2264103/011-2264104 அழைப்பதன் மூலம் அல்லது head.scm@airport.lk என்ற மின்னஞ்சல் மூலம் அல்லது www.airport.lk இணையத்தளத்திற்கு பிரவேசிப்பதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

**தவிசாளர்,**
**வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனி,**
**பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம்,**
**கட்டுநாயக்க.**

## இலங்கை சனநாயக சோசலிச குடியரசு

### வீதி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு

# விலைமனுக் கோரல்

### வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அதிவேக நெடுஞ்சாலை செயற்பாடுகள், பராமரிப்பு மற்றும் முகாமைத்துவப் பிரிவு தொடர்பாக பாதுகாப்புச் சேவையை வழங்குவதற்காக விலைமனுக்கோரல்

01. வீதி அபிவிருத்தி அதிகார சபையில் அதிவேக நெடுஞ்சாலை செயற்பாடுகள், பராமரிப்பு மற்றும் முகாமைத்துவப் பிரிவின் (அ.நெ. செ.ப.ம.மு. பிரிவு) பெறுகைக் குழுத் தலைவரினால், அந்த பிரிவிலுள்ள கீழே காணப்படும் செயற்றிட்டங்கள் தொடர்பாக, தகுதி மற்றும் தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன.

| ஒப்பந்த இலக்கம் | செயற்றிட்டத்தின் பெயர் | சேவை வழங்கப்பட வேண்டிய இடங்கள் | ஒப்பந்த காலம் (தினங்கள்) | விலைமனுப் பிணை (ரூ.) |
|---|---|---|---|---|
| RDA/ EOM&M/ GOSL/ Sec-Ser/ 2020/24 | அதிவேக நெடுஞ்சாலை செயற்பாடுகள், பராமரிப்பு மற்றும் முகாமைத்துவப் பிரிவு தொடர்பான பாதுகாப்புச் சேவைகளை வழங்கல் | சீதுவை, ஜாஎல, பேலியகொடை, ஹொரணசந்தி கெரவலப்பிட்டி, கடவத்தை, கடுவலை, பண்டாரகம, கெலனிகம, வெலிபென்ன, நீர்கொழும்பு, போத்தல களஞ்சியசாலை, உடுகாவ பராமரிப்புப்பிரிவு, உடுகாவ வீடமைப்புத் தொகுதி மற்றும் சூரியவெவ முகாம் பிரதேசம் | 365 | 650,000.00 |

02. வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அ.நெ.செ.ப.ம.மு. பிரிவு, செயற்படுத்தும் முகவராண்மையாகும்.
03. விலைமனுக் கோரல் தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறைக்கமைவாக மேற்கொள்ளப்படும்.
04. ஒப்பந்தம் கையளிக்கப்படுவது தொடர்பாக தகைமை பெறுவதற்கு விலைமனுதாரர்கள், இதற்குச் சமமான கொள்ளளவையுடைய, தொழிலாளர்களை வழங்குவது தொடர்பாக அனுபவத்தைக் கொண்டிருக்க வேண்டும்.
05. விலைமனுக்கள் மூடப்படும் திகதி தொடக்கம் 91 நாட்காட்டி நாட்கள் (2020.12.15) வரை விலைமனுக்கள் செல்லுபடியாதல் வேண்டும்.
06. விலைமனுக்கள், மேற்படி அட்டவணையில் காட்டப்பட்டுள்ள பெறுமதியையுடைய விலைமனுப் பிணையொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும். (2021.01.12ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்)
    செல்லுபடியாகும் விலைமனுப்பிணையைக் கொண்டிராத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
07. விலைமனுதாரர்களால், விலைமனு ஆவணங்களுக்குரிய அனைத்துப் பக்கங்களும் ஒப்பமிட்டு, அலுவலக முத்திரை பதியப்படல் வேண்டும்.
08. ஒரு முன்னோடி விலைமனுக்கூட்டம், 2020.09.08 அன்று 10.30 மணிக்கு கஹட்டகஹஹேன, வல்கம, பண்டாரகம என்ற முகவரியிலுள்ள வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குரிய "அதிவேக நெடுஞ்சாலை செயற்பாடுகள், பராமரிப்பு மற்றும் முகாமைத்துவப் பிரிவின் பெறுகைக் குழு அலுவலகத்தில் நடைபெறும்.
09. இது தொடர்பாக ஆர்வங்காட்டும் விலைமனுதாரர்க்கு சிங்கள மொழியில் தயாரிக்கப்பட்ட முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியொன்றை, மீளளிக்கப்படாத ரூ. 10,000.00 + 800.00 கட்டணத்தை ரொக்கப்பணமாகச் செலுத்துவதன் மூலம் கஹட்ட கஹஹேன, வல்கம, பண்டாரகம என்ற இடத்தில் அமைந்துள்ள வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குரிய "அதிவேக நெடுஞ்சாலை செயற்பாடுகள், பராமரிப்பு மற்றும் முகாமைத்துவப் பிரிவின் பணிப்பாளர் அலுவலகத்திற்கு விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்ததன் பின்னர், 2020.08.24 முதல் 2020.09.14 வரை, மு.ப. 9.00 முதல் பி.ப. 15.00 வரையான காலத்திற்குள் பெற்றுக்கொள்ளலாம். 1987 இலக்கம் 03 உடைய பொது ஒப்பந்தச் சட்டத்தின் பிரகாரம், முகவராண்மை/ பிரதிநிதி மற்றும் விலைமனுவின் வெற்றியாளர்கள் கம்பனி பதிவாளர் திணைக்களத்தில் விலைமனு தொடர்பாக பதிவு செய்து கொள்ள வேண்டும். 2020.09.15 அன்று பி.ப. 2.00 மணிக்கு விலைமனு பொறுப்பேற்பது முடிவடையும்.
10. முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் இரண்டு பிரதிகளைக் கொண்டதாக குறித்த திகதி மற்றும் நேரத்திற்கு முன்னர் தலைவர், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பெறுகைக் குழு, வீதி, அபிவிருத்தி அதிகார சபை, 01ஆம் மாடி, மஹநெகும மகமெதுர, இலக்கம் 216, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, கொஸ்வத்த, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும் அல்லது நேரில் வந்து ஒப்படைக்கப்படல் வேண்டும்.
    விலைமனுக்கள் சேர்க்கப்படும் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் "அதிவேக நெடுஞ்சாலை செயற்பாடுகள், பராமரிப்பு மற்றும் முகாமைத்துவப் பிரிவு தொடர்பாக பாதுகாப்புச் சேவையை வழங்கல்" என குறிப்பிட வேண்டும்.
11. வீதி அபிவிருத்தி அதிகார சபை, 01ஆம் மாடி, மஹநெகும, மகாமதுர. இல. 216, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, கொஸ்வத்த, பத்தரமுல்ல, பணிப்பாளர் அலுவலகத்தில் விலைமனுக்கள் பொறுப்பேற்பது முடிவடைந்தவுடன் உடனடியாக அவை திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளுக்கு அச்சந்தர்ப்பத்தில் கலந்துகொள்ளலாம்.
12. மேலதிக விபரங்கள் தொடர்பான தொலைபேசி இலக்கம்.

**i. பணிப்பாளர் (அ.நெ.செ.ப.ம.ம. பிரிவு)**
**வீதி, அபிவிருத்தி அதிகார சபை,**
**தொ.பே: 011-3047817**

**ii. பொறியியலாளர் (அ.நெ.செ.ப.ம.ம. பிரிவு)**
**வீதி அபிவிருத்தி அதிகார சபை,**
**தொ.பே: 011-3047806**

**தலைவர்,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை பெறுகைக் குழு,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை,**
**1 ஆம் மாடி, "மஹநெகும மகாமெதுர",**
**இல. 216, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல.**

## அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) பிரிவின் கீழான அறிவித்தல்.

கம்பனியின் பெயர்:

**வொண்டர் ஹோல்டிங்ஸ் இன்டர்நெஷனல் (பிவீடீ) எல்டீடி**

கம்பனியின் பழைய பெயர்:

**வொண்டர் வெல்னஸ் (பிவீடீ) எல்டீடி**

இலக்கம் : PV-00210255

பதிவு முகவரி :

இல. 56, பழைய வீதி, வட்டரெக்க, மீகொட.

**பணிப்பாளர்**

## அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(1)ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.

கம்பனியின் பெயர்:

**ஒஜே. எல்கே (பிவீடி) எல்டிடீ**

பதிவிலக்கம்: **பிவீ 00224976**

கூட்டிணைப்புத் திகதி: **2020.07.23**

பதிவு முகவரி:

**183, "விஜேசிரி", பண்டார நாயக்க, மாவத்தை, கட்டுபெத்த, மொறட்டுவ.**

**செயலாளர்**

## பொது அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(1)ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.

கம்பனியின் பெயர்:

**ஒம்னி டெக்னொலொஜீஸ் (பிரைவட்) லிமிட்டட்**

பதிவிலக்கம்: பிவீ 00225630

கூட்டிணைக்கப்பட்ட திகதி: 2020.08.08

பதிவு முகவரி:

**422/1ஏ, கொழும்பு வீதி, குரண, கட்டுநாயக்க**

**செனேலி நட்டலி ஃபோர்த் (செயலாளர்) மூலம் வழங்கப்பட்டது.**

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(1)ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.

கம்பனியின் பெயர்:

**ஓல்குளோபல் லொஜிஸ்டிக்ஸ் (பிறைவட்) லிமிடட்**

பதிவிலக்கம் : PV-00223387

கூட்டிணைப்புத் திகதி: 2020.06.25

பதிவு முகவரி :

இல. 227/95B, மஹாவித்யாலய மாவத்த, கொழும்பு-13.

**செயலாளர்கள் 2020.08.20**

## விசேட அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

சிங்கப்பூரில் உரிய முறையில் கூட்டிணைக்கப்பட்ட, சிங்கப்பூர், Bizhub, Oxley, 01-12, 61 UB1 வீதியில் தமது பதிவு அலுவலகத்தைக் கொண்டுள்ள மற்றும் இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசில் தமது பதிவு அலுவலகத்தைக் கொண்டுள்ள, பதிவிலக்கம் FC 1353 மற்றும் இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசில் கொழும்பு-05, ஏ தாபரே மாவத்தை, இல. 18/229A இல் தமது பதிவு முகவரியையுடைய ஜெனரேஷன் நெக்ஸ்ட் கொமியுனிகேஷன்ஸ் பிடிஈ, எல்டிடீ (இதன் பின்னர் மேற்படி வெளிநாட்டுக் கம்பனியென அழைக்கப்படும் மற்றும் குறிப்பிடப்படும்) ஆகிய நாம், இத்தால் இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் பொது மக்களுக்கும் அறிவித்துக் கொள்வதாவது, 2016 செப்டம்பர் 26ஆம் திகதியையுடைய மற்றும் மேற்படி வெளிநாட்டுக் கம்பனியால் நிறைவேற்றப்பட்ட, இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசில் பத்தரமுல்லவிலுள்ள பதிவாளர் நாயகத் திணைக்களத்தில் எழுத்துமூல அதிகாரம் மற்றும் அற்றோணி தத்துவங்கள் பதிவேட்டின் நாட்புத்தக இல. 112, இருமடித்தாள் 173, அத்தியாயம் 15953 கீழாக பதிவு செய்யப்பட்டு, 2017 ஜனவரி 03ஆம் திகதி, மேற்படி இலங்கை குடியரசில் கல்கிஸ்ஸ, வித்யாலய வீதி, 14ஏ ஐச் சேர்ந்த ஜீவக்க வினேஷ் எட்வர்ட் பெரேராவை (731530513V இலக்க தேசிய அடையாள அட்டை உரித்தாளர்) மேற்படி வெளிநாட்டுக் கம்பனியின் சட்ட ரீதியான அற்றோணி தத்துவதாரராக நியமித்த விசேட அற்றோணி தத்துவம், 2020 ஓகஸ்ட் இருபத்தைந்தாம் (25) திகதி செயல்வலுப்பெறும் வகையில் இத்தால் இரத்துச் செய்யப்பட்டு. இல்லாதொழிக்கப்படுகின்றது என்பதாகும். 2020 ஓகஸ்ட் இருபத்தைந்தாம் (25) திகதிக்குப் பின்னர், மேற்படி வெளிநாட்டுக் கம்பனி சார்பாக, மேற்படி ஜீவக்க வினேஷ் எட்வர்ட் பெரேராவினால் மேற்கொள்ளப்படும் எந்தவொரு கொடுக்கல் வாங்கல் அல்லது செயற்பாடுகளுக்கும் நாம் பொறுப்பாக இருக்க மாட்டோம் என மேலும் அறிவித்துக் கொள்கின்றோம்.

**ஜெனரேஷன் நெக்ஸ்ட் கொமியுனிகேஷன்ஸ்**
**பிடிஈ. எல்டிடீ**
**முதன்மையாளர்.**

## பலாங்கொடை நகர சபை

# கேள்வி அறிவித்தல்

2020 ஒக்டோபர் 01ம் திகதி முதல் 2021 செப்டம்பர் 30ஆம் திகதி வரையான ஒரு வருட காலத்திற்கு பலாங்கொடை நகர சபைக்குச் சொந்தமான பலாங்கொடை பஸ் நிலையம் மற்றும் மக்கள் சந்தை மலசலகூடத்தை சுத்திகரித்தல் மற்றும் பராமரிப்பதற்கான கட்டணங்களை அறவிட்டு நடத்திச் செல்வதற்காக பலாங்கொடை நகர சபையின் தலைவரான சமிக்க ஜயமினி விமலசேன ஆகிய என்னால் 2020 செப்டம்பர் 15ம் திகதி மு.ப. 10.00 வரை கேள்விப் பத்திரங்கள் ஏற்கப்படும். மேலதிக விபரங்களை வாரத்தின் வேலை நாட்களில் வேலை நேரங்களில் அலுவலக தொலைபேசி இல. 045-4930830 ஐ அழைத்து அல்லது info@balangoda.uc.gov.lk இடம் பெற்றுக்கொள்ளலாம்.

02. 2020 செப்டம்பர் 14ம் திகதி பி.ப. 3.00 வரை கேள்விப் பத்திரங்கள் பலாங்கொடை நகர சபை அலுவலகத்தினால் விநியோகிக்கப்படுவதுடன் 2020 செப்டெம்பர் 15ம் திகதி மு.ப. 10.30 இற்கு கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். இவ் வேளையில் கேள்வி விண்ணப்பதாரருக்கு அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

| கேள்விப் பத்திரங்கள் கோரப்படும் சேவையின் தன்மை | மீளளிக்கப்படும் கேள்விப் பிணை தொகை | விண்ணப்பப் படிவக் கட்டணம் | குறைந்த பட்ச மாதாந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|
| பஸ் நிலையத்தின் ஆண்/ பெண் பொது மலசலகூட கட்டணத்தை அறவிட்டு, நடத்திச் செல்லல், மக்கள் சந்தை பொது மலசலகூட கட்டணத்தை அறவிட்டு நடத்திச் செல்லல். | ரூ. 7,500.00 | ரூ. 2,500.00 | ரூ. 70,000.00 + அரசு அனுமதிக்கப்பட்ட வரித் தொகையைச் செலுத்துதல் வேண்டும். |

**சமிக்க ஜயமினி விமலசேன**
**தலைவர்,**
**பலாங்கொட நகர சபை**

**2020 ஆகஸ்ட் 20ம் திகதி**
**பலாங்கொடை நகர சபையில்**

## அயகம பிரதேச சபை

### 2021ஆம் வருடத்தில் பொருட்கள்/ சேவைகளை வழங்குவதற்காக வழங்குநர்கள் மற்றும் நிர்மாண வேலைகளுக்காக ஒப்பந்தக்காரர்கள் மற்றும் ஒப்பந்த நிறுவனங்களை பதிவு செய்தல்

பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள உருப்படிகளுக்காக வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல் 2020.12.31ஆம் திகதி வரை இடம்பெறும். பதிவுகளுக்காக விண்ணப்பிக்கையில், ஒன்றுக்கு மேற்பட்ட உருப்படிகளுக்காக விண்ணப்பிப்பதாயின், அவற்றிற்காக வெவ்வேறான விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் வேண்டும். பதிவுக் கட்டணமாக 800.00 ரூபா அறவிடப்படும் என்பதுடன் பதிவுகளிற்காக ரூபா800/= இற்கான தொகையொன்று அறவிடப்படுவதுடன் 'செயலாளர் பிரதேச சபை - அயகம'' என்ற பெயருக்குக் காசோலையொன்றை அல்லது காசுக்கட்டளையொன்றை அனுப்புவதன் மூலம் அல்லது அலுவலகத்திற்கு நேரடியாகச் சமுகமளித்து பணத்தை செலுத்துவதன் மூலம் பிரதேச சபையின் வழங்குநராக, ஒப்பந்தக்காரராகப் பதிவு செய்து கொள்ளப்படலாமென தயவுடன் அறிவித்துக் கொள்வதுடன், விண்ணப்பங்களை அனுப்பும் போது வர்த்தகப் பதிவுச்சான்றிதழின் நிழற்பட பிரதியொன்றை கிடைக்கச் செய்தல் வேண்டுமெனவும் மேலும் அறிவித்துக் கொள்கின்றேன்.

02. இங்கு, பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான மேலதிக தகவல்களை, பதிவுக்கான விண்ணப்பப்படிவங்கள் மற்றும் ஏனைய தகவல்களை www.ayagama.ps.gov.lk எனும் எமது இணையத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**எல்.ஆர்.ஏ. நிஷாந்த புஷ்பகுமார,**
**தலைவர்,**
**அயகம பிரதேச சபை, அயகம.**

**01 பொருட்கள் வழங்குதல்**

1.1 அலுவலக காகிதாதிகள், தொலைநகல் காகிதாதிகள் அச்சுத் தாள்கள் மற்றும் ஏனைய காகிதாதிகள்
1.2 அலுவலக மரத்தளபாடங்கள் மற்றும் உருக்குத் தளபாடங்கள்
1.3 கணனி இயந்திரங்கள், கணனி துணைப்பாகங்கள் மென்பொருள், ரிபன் மற்றும் டோனர், நிழற்படப் பிரதி இயந்திரங்கள், தட்டச்சுப் பொறி, ரோணியோ இயந்திரம், கணித்தல் இயந்திரம்.
1.4 தொலைபேசிகள், தொலைநகல் இயந்திரங்கள் மற்றும் தொலைபேசி முறைமைகள்
1.5 அச்சடிக்கப்பட்ட அலுவலக காகிதாதிகள், இறப்பர் முத்திரைகள், திகதி முத்திரைகள், பெயர்ப் பலகைகள்
1.6 நூலகப் புத்தகங்கள் மற்றும் அச்சடிக்கப்பட்ட காகிதாதிகள்
1.7 அலுவலக தோற்பைகள் மற்றும் தோற் பொருட்கள்
1.8 வீதி விளக்கு உபகரணங்கள்
1.9 மின் உபகரணங்கள் மற்றும் வளி சீராக்கி இயந்திரங்கள்
1.10 துணி வகைகள் (சீருடைகள், மேசைத் விரிப்புகள், திரைச்சேலைகள்)
1.11 நீர்க்குழாய் உபகரணங்கள், நீர்மானிகள், நீர்த்தாங்கிகள்
1.11 இறப்பர் முத்திரைகள், தின முத்திரைகள், பெயர் பலகைகள்
1.12 நூலகப் புத்தகங்கள்
1.13 வாகனங்கள் மற்றும் இயந்திரோபகரணங்களுக்கான உதிரிப்பாகங்கள் (டீசல் / பெற்றோல்)
1.14 டயர், டியுப் மற்றும் பெற்றரிகள்
1.15 தீயணைக்கும் உபகரணங்கள்
1.16 ஒலிபெருக்கி இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள்
1.17 தோணி துடுப்புகள் மற்றும் மோட்டார் படகுகள்
1.18 நிர்மாணப் பொருட்கள் i (கல், மணல், செங்கல், ஷட்டரிங், மரம், ஆதாரங்கள் மற்றும் மரப் பொருட்கள்)
1.19 நிர்மாணப் பொருட்கள் ii (சீமெந்து, நிறப்பூச்சு வகைகள், உருக்கு, இரும்பு, கொங்கிறீட் சார்ந்த உற்பத்திகள், தரையோடுகள் மற்றும் சகல விதமான கட்டிடப் பொருட்கள்)
1.20 நிர்மாண வேலைகளுக்காகப் பயன்படுத்தப்படும் வாகனங்கள் (லொறி, டிராக்டர், டிப்பர், பாரந்தூக்கிகள், நீர்த்தாங்கி பவுசர்கள், எக்ஸ்கவேட்டர்கள், டோசர், பெக்கோ லோடர், வீதி அழுத்தி இயந்திரங்கள், அதிர்வாக்கிகள், மோட்டர் கிரேடர்)
1.21 நிர்மாண வேலைகளுக்குப் பயன்படுத்தும் உபகரணங்கள் (கத்திகள், மண்வெட்டிகள், வீச்சுக்கத்திகள், சவல், வீல்பறோ, ரேக்கைகள், கைக்கோடரிகள், லண்டா, கொங்கிறீட் கலவை இயந்திரங்கள், நீர் மோட்டர்கள்)
1.22 திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவத்திற்குப் பயன்படுத்தப்படும் உபகரணங்கள் (குப்பை வண்டிகள், பொப்கெட் இயந்திரங்கள், ஹலர் இயந்திரங்கள் மற்றும் ஏனைய உபகரணங்கள்)
1.23 துப்புரவேற்பாட்டுப் பொருட்கள், கிருமிநாசினிகள் மற்றும் சுகாதார உபகரணங்கள் (ஈர்க்கிள், தும்புத் தடிகள், கைமேஸ்கள், கையுறைகள், குளோரின்)
1.24 விளையாட்டுத்துறை தொடர்பான உபகரணங்கள்
1.25 உணவுபானங்கள் மற்றும் உபசார உபகரணங்கள் வழங்குதல்

**02 சேவைகளை வழங்கல்**

2.1 அலுவலக இயந்திரங்களுக்கான சிறிய திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ் செய்தல்
2.2 மோட்டார் வாகனம் மற்றும் இயந்திரோபகரணங்களுக்கான திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ் செய்தல்
2.3 தீயணைப்பு உபகரணங்களைப் பொருத்துதல், பராமரித்தல் மற்றும் சேர்விஸ் செய்தல்
2.4 உபசாரங்களுக்கான சேவை வழங்குதல் (சமர்ஹட், மேடைகள், ஒலிபெருக்கி இயந்திரங்களை வாடகைக்கு வழங்குதல்)
2.5 டிஜிட்டல் அச்சு சேவைகள், டைப் செட்டிங், கற் சிற்பங்கள் மற்றும் ஞாபகச் சின்னங்கள்
2.6 உருக்கியொட்டும் வேலைகள் மற்றும் கடைசல் பட்டறை வேலைகள்
2.7 நிர்மாண சேவைகள் (கட்டிடம், வீதி, பாலம்)
2.8 வாகனங்கள், இயந்திரோபகரணங்களை வாடகைக்கமர்த்துதல்
2.9 சட்டம் மற்றும் அளவை சேவைகள்
2.10 பழுதடைந்த பொருட்களை கொள்வனவு செய்தல் (இரும்பு, பிளாஸ்டிக், பொலித்தீன், காட்போட் மற்றும் காகிதங்கள்)
2.11 கணனி மென்பொருள் (Software) வழங்குதல்.

### அயகம பிரதேச சபை

எனது இலக்கம்: அய/பிச/03/08

**2021ஆம் வருடத்தில் வழங்குநர் / ஒப்பந்தக்காரர்கள் மற்றும் ஒப்பந்த நிறுவனங்களை பதிவு செய்து கொள்வதற்கான விண்ணப்பப் படிவம்**

**01. பிரத்தியேகத் தகவல்கள்**

(a) விண்ணப்பதாரரின் / நிறுவனத்தின் முழுப் பெயர் :..........................................
..........................................
(b) பதிவிலக்கம் :..........................................
(c) தொலைபேசி இலக்கம் :..........................................
(d) தொலைநகல் இலக்கம் :..........................................
(e) மின்னஞ்சல் முகவரி :..........................................
(f) அஞ்சல் முகவரி :..........................................
(g) பதிவு செய்வதற்கு உத்தேசிக்கும் உருப்படி மற்றும் இலக்கம் :..........................................
(h) வியாபாரப் பதிவுச் சான்றிதழின் இலக்கம் (நிழற்படப் பிரதியொன்றை இணைக்கவும்) :..........................................
(i) கடன் அடிப்படையில் வழங்கக்கூடிய உச்ச கால எல்லை: ..........................................
(j) பதிவுக் கட்டணம் :ரூ..........................................
(k) காசுக் கட்டளையின் இலக்கம் மற்றும் பெறுமதி :..........................................
(l) ஏனையவை :..........................................

மேற்படி தகவல்கள் உண்மையானவை மற்றும் சரியானவையென சான்று பகர்கிறேன். இதற்கமைய எமது நிறுவனத்தை ...................................................... வழங்குவதற்கு வழங்குநராகப் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**திகதி:** ..................................... .....................................
**விண்ணப்பதாரரின் கையொப்பம்**

**2) அலுவலக பயன்பாட்டிற்கு:**
இயைபுடைய விண்ணப்பப் படிவத்தை இணைப்புடன் பொறுப்பேற்று விடயத்திற்கான அலுவலருக்கு ஒப்படைக்கப்பட்டது.

**திகதி:**.......................... **பொறுப்பேற்றவரின் கையொப்பம்**..........................
**பெயர்:**..........................
**(முத்திரை)**

**3) விடயத்திற்கான அலுவலர்**
பரீட்சித்துப் பார்த்து அறிக்கையிடுவதற்கு அனுப்பப்பட்டுள்ளது.

**திகதி:**.......................... ..........................
**தலைவர்/செயலாளர்**

4) விடயத்திற்கான அலுவலரின் சிபாரிசு
காசுக் கட்டளை / காசோலையை சிறாப்பரிடம் ஒப்படைத்துள்ளேன். குறித்த வழங்குநரை பதிவு செய்து கொள்வதற்கு சிபாரிசு செய்கின்றேன் / செய்யவில்லை.

**திகதி:**.......................... ..........................
**விடயத்திற்கான அலுவலர்.**

5) குறித்த வழங்குநரை பதிவு செய்து கொள்வதற்கு அனுமதிக்கின்றேன்/ அனுமதிக்கவில்லை.

**திகதி:**.......................... ..........................
**தலைவர்/செயலாளர்**

## அறிவித்தல்

**1964 ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க காணிசுவீகரிப்பு (திருத்தல்) சட்டத்தினால் திருத்தப்பட்ட காணி சுவீகரிப்பு சட்டத்தின் (460 ஆவது அத்தியாயம்)**

### 7 ஆவது பிரிவின் கீழான அறிவித்தல்

கொழும்பு பிரதேச செயலாளரின் இலக்கம் கொ/பி.செய/கா.சு/L/3/20/NH
காணி அமைச்சின் இலக்கம் L/03/96/NH/382

இங்கு கீழே உள்ள அட்டவணையில் விபரிக்கப்படும் காணி ஒரு பொதுத் தேவைக்காக, மருதானை பாதையில் வரிமதிப்பீட்டிலக்கம் 191/1 இருந்து 21 வரையான காணியினை அரசு சுவீகரிக்க எதிர்பாக்கிறது. இது பற்றிய மேலதிக தகவல்களை 2151/2 இலக்கத்தினைக் கொண்ட 2019 நவம்பர் 25 ஆம் திகதியுடைய அரசாங்கத்தின் அதிவிசேட வர்த்தமானியை பார்க்கவும்.

**அட்டவணை**

மாவட்டம் : கொழும்பு
பிரதேச செயலகப்பிரிவு : கொழும்பு
கிராம உத்தியோகத்தர் பிரிவு : பஞ்சிகாவத்த
கிராமத்தின் பெயர் :
மருதானை (தொகுதி இலக்கம் 25) கொழும்பு மாநகரசபை
காணியின் பெயர் :
சம்பந்தப்பட்ட காணி வரைபடத்தில் குறிப்பிட்டவாறு வரிமதிப்பீட்டிலக்கம் 175/40, 191/20 மற்றும் காசிம் ஹாஜியார் பிளேஸ்
காணி வரைபட இலக்கம் : P.P.CO 9823
விஸ்தீரணம் : 0.1166 ஹெக்டயர்
காணித்துண்டின் இலக்கம் : 01 மற்றும் 02

**டி.பீ. விக்ரமசிங்ஹ**
**பிரதேச செயலாளர்**
**கொழும்பு.**

**2019.11.26**
**கொழும்பு பிரதேச செயலகத்தில்**

## கேள்வி அறிவித்தல்

**மத்திம வருமான வீடமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக்கான உடனடி நிகழ்ச்சித்திட்டம்**

**நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு**

### மாதாந்த வாடகை அடிப்படையில் வாகனங்களை வழங்குவதற்காக விலைமனுக்கள் கோரல் 2020/2021

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சினால் செயற்படுத்தப்படும் மத்திம வருமான வீடமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக்கான உடனடி நிகழ்ச்சித்திட்டத்தின் நாளாந்த போக்குவரத்து தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்காக Hybrid Sedan Petrol வளிச்சீராக்க வசதிகள் சகிதம் இரண்டு மோட்டார் வாகனங்கள் மற்றும் எட்டு ஆசனங்களைக் கொண்ட இரட்டை வளிச்சீராக்க வசதிகள் சகிதம் வேன் ஒன்றை மாதாந்த வாடகை அடிப்படையில் வழங்குவதற்காக முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

2020-08-24ஆம் திகதி முதல் 2020-09-04ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 வரை அனைத்து விபரங்கள் மற்றும் நிபந்தனைகள் அடங்கிய கேள்வி மாதிரிப் படிவங்களை மீளளிக்கப்படாத 1,000.00 ரூபா கட்டணத்தைச் செலுத்தி பின்வரும் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட மாதிரிப் படிவங்களை 2020-09-07ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் வேலைத்திட்டப் பணிப்பாளர், மத்திம வருமான வீடமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக்கான உடனடி நிகழ்ச்சித்திட்டம், த.பெ. 1826, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக் கட்டிடம், 9ஆம் மாடி, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு 02 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது மேற்படி முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''மாதாந்த வாடகை அடிப்படையில் வாகனங்களை வழங்குவதற்காக விலைமனுக்கள் கோரல் - 2020/2021'' எனக் குறிப்பிடுதல் வேண்டும். கேள்விகள் 2002-09-07ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்குத் திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம். வேலைத்திட்ட பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

**நிகழ்ச்சித்திட்டப் பணிப்பாளர்,**
**த.பெ. 1826,**
**9வது மாடி, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக் கட்டிடம்,**
**சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை,**
**கொழும்பு 02.**
**தொலைபேசி: 0112347012**
**2020-08-20**

## இலங்கை சட்ட உதவி ஆணைக்குழு

# பதவி வெற்றிடம் அறிவித்தல்

**இலங்கை சட்ட உதவி ஆணைக்குழு குறைந்த வருமானம் பெறுவோருக்கு சட்ட உதவி வழங்கும் நோக்கில் 1978 ம் ஆண்டு 27 ஆம் இலக்க சட்ட உதவி சட்டத்தின் மூலம் கூட்டிணைக்கப்பட்ட நிறுவனமாகும்.**

### உதவிப் பணிப்பாளர்/பிரதிப் பணிப்பாளர் (நிர்வாகம்) பதவி 01

**விண்ணப்பதாரியின் தகைமைகள்**

- ➢ பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சட்டம் அல்லது சமூக விஞ்ஞானம் அல்லது முகாமைத்துவம் அல்லது மனித வள முகாமைத்துவம் பற்றிய பட்டதாரியாக இருத்தல்.
- ➢ பட்டம் பெற்ற பின்னர் அரச, அரச கூட்டுத்தாபனம் அல்லது சட்டரீதியான சபையொன்றில் குறித்த துறையில் முகாமைத்துவ மட்ட பதவியொன்றில் குறைந்தது 05 வருட அனுபவம் பெற்றிருத்தல்.
- ➢ 2020.07.01 ம் திகதிக்கு வயது 32 வருடங்களுக்கு குறையாமலும் 45 வயதிற்கு அதிகரிக்காமலும் இருத்தல்.
- ➢ இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.
- ➢ சிறந்த நன்னடத்தை உடையவராக இருத்தல்.
- ➢ தனக்குரிய தொழில் பொறுப்பை திறமையாக மேற்கொள்வதற்கு தேவையான உடல் உள ஆரோக்கியத்துடன் இருத்தல்.

**தொழிலின் பொறுப்பு**

பொதுத் தன்மைக்கு இணங்க கொள்கை அடைவு, மேற்பார்வை மற்றும் கட்டளையிடும் முகாமைத்துவம் மற்றும் அது சம்பந்தமாக முடிவெடுப்பதற்குரிய செயற்பாடுகள் உள்ளிட்ட நிறுவனத்தின் உயர் கட்டளையிடும் அதிகாரிக்கு வழங்கப்படும் முழுப் பொறுப்புக்கள் அடங்கிய செயற்பாடுகளிலும் ஒரு பகுதியை பெற வேண்டியது கடமைகளில் நிறுவனத்தின் உயர் கட்டளையிடும் அதிகாரியின் கடமைகளுக்கு உறுதுணையாக அல்லது ஒத்துழைப்பாக இருக்கும் வகையில் உமது பதவிக்கு விஷேடமாக வழங்கப்படும் பொறுப்பாகும்.

**சம்பள அளவு**

முகாமைத்துவ சேவை சுற்று நிருபத்திற்கு அமைய MM 1-3-2016 Rs.55,925/= 1375x10,1910x15 = 98325/= முகாமைத்துவ சேவை திணைக்களத்தால் அனுமதிக்கப்பட்ட அரச கொடுப்பனவுகள் +EPF/ETF

(நீங்கள் தற்போது அரச கூட்டுத்தாபனமொன்றில் அல்லது சட்ட நிறுவனமொன்றில் பணி புரிபவராயின் குறித்த நிறுவனத்தின் தலைவர் மூலம் உங்களின் விண்ணப்பத்தை கீழ் காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

### பதவி: சட்ட உத்தியோகத்தர் (முழு வெற்றிடங்கள் 05)

(கொழும்பு 01, கடவத்தை 01, முல்லைத்தீவு - 01, கிளிநொச்சி 01 - பதுள்ள - 01)

**தகைமைகள்**

- ➢ உச்ச நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்த பின் மூன்று (03) வருட செயற்பாட்டு தொழில் அனுபவம் பெற்றிருத்தல்.
- ➢ 2020.07.01 திகதிக்கு வயது 28 வருடங்களுக்கு குறையாமலும் 45 வயதிற்கு அதிகரிக்காமலும் இருத்தல்.
- ➢ இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.
- ➢ சிறந்த நன்னடத்தை உடையவராக இருத்தல்.
- ➢ தனக்குரிய தொழில் பொறுப்பை திறமையாக மேற்கொள்வதற்கு போன்று இலங்கையின் எப்பாகத்திலும் பணி புரிவதற்கான உடல் உள ஆரோக்கியத்துடன் இருத்தல்.

**தொழிலின் பொறுப்பு**

சட்ட உதவி ஆணைக்குழுவின் சட்டத்தரணியாக நீதிமன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் ஆணைக்குழுவின் மூலம் சட்ட உத்தியோகத்தருக்காக ஒப்படைக்கப்படும் சகல கடமைகளையும் நிறைவேற்றுதல்.

**சம்பள அளவு**

முகாமைத்துவ சேவை சுற்று நிருபத்திற்கு அமைய MM 1-1 Rs.53,175/= 10x1375, 15x1910 =95575/= முகாமைத்துவ சேவை திணைக்களத்தால் அனுமதிக்கப்பட்ட அரச கொடுப்பனவுகள் + EPF/ ETF

### பதவி - முகாமைத்துவ உதவியாளர் (வெற்றிடங்கள் 05)

கொழும்பு பிரதான காரியாலயம் (நீதிமன்ற எழுதுவினைஞர்) - 01 கந்தளாய் - 01, கெக்கிராவ - 01, புத்தளம் - 01, வெலிமட - 01

**தகைமைகள்**

1. 2020.07.01 திகதிக்கு வயது 18 க்கு குறையாமலும் 45 க்கு அதிகரிக்காமலும் இருப்பதோடு இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.
2. கல்விப் பொது தராதரப் பத்திர சாதாரண தர பரீட்சையில் கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ் போன்ற பாடங்கள் உள்ளடங்கலாக நான்கு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே தடவையில் ஆறு பாடங்களில் சித்தி அடைந்திருக்க வேண்டும்.
3. கல்விப் பொது தராதரப் பத்திர உயர்தர பரீட்சையில் குறைந்தது மூன்று பாடங்களில் சித்தி அடைந்திருக்க வேண்டும். (பொது பரீட்சை தவிர்ந்து)
4. சிறந்த நன்னடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.
5. தன் பதவிக்கு விதிக்கப்படும் காரியங்களை சிறப்பாக நிறைவேற்றக்கூடியவராகவும், இலங்கையின் எப்பிரதேசத்திலும் பணி புரிவதற்கான உடல் மற்றும் உள தகுதி உடையவராகவும் இருத்தல் வேண்டும்.
6. கணனி சம்பந்தமாக சிறந்த அறிவு உடையவராக இருத்தல் வேண்டும். (சிங்களம் அல்லது தமிழ்/ ஆங்கிலம்)
7. சட்டத்தரணியொருவரிடம் எழுதுவினைஞராக கடமையாற்றிய அனுபவம் இருப்பின் அது மேலதிக தகைமையாக கருத்திற் கொள்ளப்படும். தொழிலின் பொறுப்பு நிறுவனத்தின் கட்டளை மற்றும் நிர்வாக மட்ட உத்தியோகத்தர்கள் கடமைகளுக்கு உறுதுணையாக இருப்பது அல்லது ஒத்துழைப்பது, தொழிநுட்ப தன்மை அல்லாத கடமைகள் இதனுள் அடங்கும். இக் கடமைகளுக்குள் நியமன அதிகாரி மூலம் விஷேடமாக குறித்துரைக்கப்படும் கடமைகள் இச் சேவை மட்டத்திற்குரிய சேவையாளர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்ட வேண்டும்.

**சம்பள அளவு**

MA 1-2 (27910 - 10x300 - 7x350 - 12x600 - 12x710 x 49080)+ முகாமைத்துவ சேவை திணைக்களத்தால் அனுமதிக்கப்பட்ட அரச கொடுப்பனவுகள் + EPF/ ETF
(எழுத்து மூல பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சையின் பின்னர் இணைத்துக் கொள்ளப்படும்.)

மேலே குறிப்பிடப்பட்ட சகல பதவிகளுக்கும் இணைத்துக் கொள்ளப்பட்ட பின்னர் வினைத்திறன் தடைகாண் பரீட்சைக்கு குறிப்பிட்ட காலத்தில் தோற்ற வேண்டும்.
மேலே குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்கான விண்ணப்பங்களை "2020 ஆகஸ்ட் 31 ம் திகதிக்கு" முன்னர் கீழ் காணும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவும். கடித உறையின் இடப்பக்க மேல் மூலையில் உங்களின் மூலம் விண்ணப்பிக்கப்படும் பதவியைக் குறிப்பிடவும்.

**முகவரி :** **தவிசாளர்**
**இலங்கை சட்ட உதவி ஆணைக்குழு**
**உயர் நீதிமன்ற கட்டிடத் தொகுதி**
**கொழும்பு-12.**

## பொது அற்றோணித் தத்துவப் பத்திரத்தை இரத்துச் செய்தல்

இலக்கம் 372, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் சங்கரப்பிள்ளை கைலாசப்பிள்ளை ஆகிய நான் பதிவாளர் திணைக்களத்தில் 97ம் இலக்கப் புத்தகத்தில் 229ம் பக்கத்தில் 22.03.2018ம் திகதி பதிவு செய்யப்பட்ட 16.03.2018ம் திகதி பிரசித்த நொத்தாரிஸ் A.S. புனிதசேகரன் முகதாவில் அத்தாட்சிப்படுத்திய பொது அற்றோணித் தத்துவப் பத்திர இல 340 மூலம் இலக்கம் 372, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் வைத்தியகலாநிதி கார்த்திகா கைலாசப்பிள்ளை என்பவரை எனது அற்றோணித் தத்துவக்காரராக நியமித்திருந்தேன். மேற்கூறிய அற்றோணித் தத்துவத்தை 28.07.2020ம் திகதி முதல் நடைமுறைக்கு வருமாறு இரத்துச் செய்கின்றேன். இன்றிலிருந்து என்னுடைய அற்றோணித் தத்துவக்காரரால் மேற்கொள்ளும் எந்த நடவடிக்கைகளுக்கும் நான் பொறுப்பாளியல்ல என்பதை இத்தால் அறிவிக்கின்றேன்.

**சங்கரப்பிள்ளை கைலாசப்பிள்ளை**

## அறிவித்தல்



பெயர் :- **எம்.ஆர். வினேஷ் கிரிஹாட் பிரனாந்து**
கிளை :- நீர்கொழும்பு
முகவரி :- 46/C, சென் அந்தனீஸ் வீதி, பலங்கதுறை, கொச்சிக்கடை.
தே.அ.அ.இல. :- 951362506V
சேவையிலிருந்து விலகிய திகதி 10.08.2020



பெயர் :- **சமில் சுரங்க தெவனிகுரு**
கிளை :- தலைமையகம்
முகவரி :- 140/6, எம்பரலுவ வடக்கு, வேலிவேரிய.
தே.அ.அ.இல. :- 921571330V
சேவையிலிருந்து விலகிய திகதி 10.08.2020

திரீ சிங்ஹ தனியார் நிறுவனத்தில் சேவையில் இருந்து மேற்படி தேசிய அடையாள அட்டை இலக்கங்களைக் கொண்டவர்கள் மேற்படி திகதி முதல் இந் நிறுவனத்தில் சேவையில் இல்லை என்பதால் அத்தினத்தின் பின்பு அவர்களால் மேற்கொள்ளப்படும் கொடுக்கல், வாங்கல்களுக்கு எமது நிறுவனத்தினால் பொறுப்புக் கூறப்படமாட்டாது என இத்தால் அறிவிக்கிறோம்.

**Repeat Your Ad For Better Offers**

# நோத்சீ லிமிடெட்

**கடற்றொழில் அமைச்சின் கீழ் செயற்படும் ஓர் கம்பனி**

## வெற்றிடங்கள்

இலங்கையிலுள்ள தகைமையுள்ள பிரஜைகளிடமிருந்து கீழ்க் காணும் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## பொது முகாமையாளர்

(a) **தகைமையும் அனுபவமும்:**

1. பல்கலைக்கழக ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஓர் பல்கலைக்கழக நிறுவனத்திலிருந்து முகாமைத்துவம்/ வர்த்தகம்/ மனித வளம்/ பொறியியல் துறையில் பெற்றுக்கொண்ட பட்டதாரிப் பட்டம்.

   **அத்துடன்**

   சம்பந்தப்பட்ட துறையில் ஓர் பட்டப் பின் படிப்பு தகைமை (முதுமாணி) அல்லது இப் பதவியின் பாடப் பரப்புடன் சம்பந்தப்பட்டதாக ஓர் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் பட்டய கணக்காளர் நிறுவனத்தின் இணை அங்கத்துவம்.

   **மற்றும்**

   ஓர் கூட்டுத்தாபனம், நியதிகள் சபை அல்லது ஓர் நம்பகமான தனியார் நிறுவனத்தில் ஓர் முகாமைத்துவ மட்டத்தில் குறைந்தபட்சம் 15 வருட அனுபவம்

2. இப் பதவியோடு தொடர்புபட்ட துறையில் ஓர் அங்கீகரிக்கப்பட்ட பட்டயக் கணக்காளர் நிறுவனத்தில் முழுமையான அங்கத்துவம்.

   **மற்றும்**

   ஓர் கூட்டுத்தாபனம், நியதிகள் சபை அல்லது ஓர் நம்பகமான தனியார் நிறுவனத்தில் ஓர் முகாமைத்துவ மட்டத்தில் குறைந்தபட்சம் 15 வருட அனுபவம்

**(b)** சம்பந்தப்பட்ட சம்பள குறியீட்டு இல. மற்றும் மாதாந்த சம்பள அளவு

**HM 1-3** 2016 - தரம் II - 86,865 - 15x2,270 - 120,915/-அத்துடன் மாதாந்த எரிபொருள் கொடுப்பனவு, உத்தியோகபூர்வ வாகன வசதிகள் அல்லது மாதாந்த போக்குவரத்து கொடுப்பனவாக ரூ. 50,000/- மற்றும் ஏனைய அனுமதிக்கப்பட்ட அரச கொடுப்பனவுகள்.

**(c)** **வயது:**

வயது 35 வருடங்களுக்கு குறையாமலும் 55 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு கூடிய வயதெல்லை பொருந்தாது.

## கணக்காளர்

(a) **தகைமையும் அனுபவமும்:-**

ICASL/ CIMA/ ACCA வில் இடைநிலைத் தகைமை அல்லது முகாமைத்துவம்/ வர்த்தகத்தில் ஓர் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக பட்டம் அல்லது முகாமைத்துவத் துறையில் HNDA முதலாவது பட்டம் அல்லது சமமான தகைமையைப் பெற்றுக்கொண்ட பின்பு ஓர் கூட்டுத்தாபனம்/ சபை அல்லது ஓர் நம்பகமான நிறுவனத்தில் கணக்கியல் மற்றும் நிதியியலில் குறைந்த பட்சம் 3 வருட தகைமைக்குப் பின்னரான அனுபவம்.

(b) **உள்ளக விண்ணப்பதாரிகள்**

சம்பந்தப்பட்ட துறையுடன் பொருந்தக்கூடிய கனிஷ்ட முகாமையாளர் வகை JM 1-1 பதவியில் 5 வருட திருப்திகரமான சேவையை நிறைவேற்றிய அதே தகைமையையும் அனுபவத்தையும் விண்ணப்பதாரி கொண்டிருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு வயதெல்லை பொருந்தாது.

(c) சம்பந்தப்பட்ட சம்பள குறியீட்டு இல. மற்றும் மாதாந்த சம்பள அளவு

MM 1-1-2016 - தரம்-II - 53,175 - 10x1,375 - 15x1,910 - 95,575/-

(w.e.f. 01.01.2020) அத்துடன் வாழ்க்கைச் செலவுப் படி மற்றும் அரசினால் அனுமதிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகள்.

d) **வயது**

வயது 30 வருடத்திற்கு குறையாமலும் 45 வருடத்திற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு கூடிய வயதெல்லை பொருந்தாது. மேலே சொல்லப்பட்ட பதவிகளுக்கு கீழ்க்காணும் தகவுத் திறன் பொதுவாகப் பொருந்தும்.

e) ஏனையவை

**ஒவ்வொரு விண்ணப்பதாரியும்**

1. இப்பதவியின் கடமைகளை செவ்வனே நிறைவேற்றுவதற்கு உடல் மற்றும் உள ரீதியான தகைமையைக் கொண்டிருத்தல் வேண்டும். மற்றும் நாட்டின் எப்பாகத்திலும் கடமையாற்ற வேண்டும்.
2. சிறந்த நல்லொழுக்கம் உடையவராக இருத்தல் வேண்டும்.

**நியமனத்தின் தன்மை**

மேற்படி பதவி நிரந்தரமானதும் மூன்று வருட தகுதிகாண் காலத்தையும் கொண்டதாகும். அத்துடன் ஊ.சே.நி மற்றும் ஊ.ந.நி பெறுவதற்கு உரித்துடையவராவார். அத்துடன் கம்பனிக்கு பொருந்தக்கூடிய அரசு அனுமதித்த கொடுப்பனவுகளும் செலுத்தப்படும்.

**ஆட்சேர்ப்பு முறை:-**

காலத்திற்குக் காலம் உரித்தான துறையில் விதிக்கப்படும் தேர்ச்சிகள் மற்றும் திறன்களை ஊழியரானவர் பெற்றுக்கொள்ளல் வேண்டும். கம்பனியின் ஆட்சேர்ப்புத் திட்டத்தில் திட்டவட்டமாக குறிக்கப்பட்டுள்ள தெரிவு செய்தல் தகவுத்திறன் தொடர்பாக நேர்முகப் பரீட்சைக் குழுமத்தினால் தீர்மானிக்கப்பட்ட திறமையின் அடிப்படையில் தெரிவு செய்தல் மேற்கொள்ளப்படும்.

கல்வி/ தொழில்சார் தகைமைகள் மற்றும் முன்னைய தொழில் அனுபவங்களுடன் உரவினரல்லாத இரு பரிந்துரைப்பவர்களின் தொடர்பு விபரங்களுடன் உங்களது முழுமையான சுயதரவுகளுடனான விண்ணப்பங்களை அனுப்பி வைத்தல் வேண்டும்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை தயவு செய்து குறிப்பிடுங்கள். 2020 செப்டம்பர் 08ஆம் திகதி அல்லது அதற்கு முன் (பத்திரிகை விளம்பர திகதியிலிருந்து இரண்டு வாரத்திற்குள்) கொழும்பு-10, டி.ஆர். விஜேயவர்தன மாவத்தை, இல. 450, நோத்சீ லிமிடெட் தலைவருக்கு முகவரியிடப்பட்டு பதிவுத் தபாலில் விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.

## காணி உரித்து நிருணயத் திணைக்களம்

## பதவி வெற்றிடங்கள்

### மாவட்ட ஆணையாளர் பதவிக்காக நிரந்தர அடிப்படையில்,

(பிரதி/ உதவி ஆணையாளர் பதவிக்காக நிரந்தர மற்றும் ஒப்பந்த அடிப்படையில் அதிகாரிகளைச் சேர்த்துக் கொள்ளல்)

காணி உரித்து நிருணயர் திணைக்களத்தின் நாடளாவிய ரீதியில் உருவாக்கப்படும் மாவட்ட அலுவலகங்களில் வெற்றிடங்கள் காணப்படும் மாவட்ட ஆணையாளர் பதவிக்கு தற்போது சேவையில் உள்ள, இலங்கை நிர்வாக சேவையின் I தரத்திலான அதிகாரிகளை நிரந்தர அடிப்படையில் மற்றும் பிரதேச அவலகங்களில் வெற்றிடமாகக் காணப்படும் பிரதி/ உதவி ஆணையாளர் பதவிக்காக தற்போது சேவையில் உள்ள இலங்கை நிர்வாக சேவையின் II மற்றும் III ஆம் தரத்திலான அதிகாரிகளை நிரந்தர அடிப்படையில் ஓய்வுபெற்ற இலங்கை நிர்வாகச் சேவை அதிகாரிகள் ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

**மாவட்ட ஆணையாளர் பதவிகள் வெற்றிடமாகவுள்ள மாவட்ட அலுவலகங்கள் - கம்பஹா, கண்டி மற்றும் குருநாகல்**

1. **பதவி - மாவட்ட ஆணையாளர் (நிரந்தர அடிப்படையில்)**

   I. தகைமைகள் - இலங்கை நிர்வாக சேவையின் I தரத்திலான அதிகாரியாக இருத்தல்.

   பிரதி/ உதவி ஆணையாளர் பதவிகள் வெற்றிடமாகவுள்ள பிரதேச அலுவலகங்கள் -
   வலிகாமம் கிழக்கு (கோப்பாய்), பியகம, ஜாஎல/ வத்தளை, நீர்கொழும்பு, கொடக்கவெல, குண்டசாலை, பூஜாப்பிட்டி, அம்பகமுவ கோரளை, மிஹிந்தலை, தம்புத்தேகம ஹக்மன, தங்கல்ல, அலவ்வ, பொல்காவலை, மாவத்தகம, இப்பாகமுவ, நிக்கவெரட்டிய, தமன்கடுவ, லங்காபுர, பல்லேபெல, கல்பிட்டி, நாத்தண்டிய. ஹொரண, மீரிகம, கலேவல, மினிப்பே, குருநாகல், மொனராகலை, குருவிட்ட, இரத்தினபுரி, பலாங்கொடை, பேருவளை, ஹிக்கடுவ/ அல்பிட்டிய, வெலிப்பிட்டிய, கேகாலை, ஹங்வெல்ல, மஹரகம, கோட்டே, தெஹிவளை, நாஉல, இம்புல்பே, மற்றும் பொலன்னறுவை.

2. **பதவி - பிரதி/ உதவி ஆணையாளர் (நிரந்தர அடிப்படையில்)**

   I. தகைமைகள் - இலங்கை நிர்வாக சேவையின் II அல்லது IIIஆம் தரத்திலான அதிகாரியாக இருத்தல்.

3. **பதவி - உதவி ஆணையாளர் (ஒப்பந்த அடிப்படையில்)**

   I. தகைமைகள்
   - இலங்கை நிர்வாக சேவையின் அதிகாரியாக இருத்தல்
   - அரச சேவையில் முறையாக ஓய்வு பெற்றவராக இருத்தல்
   - சேவைக்காலத்தில் ஒழுக்காற்று தண்டனைகளுக்கு இலக்காகாது இருத்தல் வேண்டும்.
   - வயது 60- 67 இடையில் இருத்தல் வேண்டும்.
   - உடல், உளரீதியில் ஆரோக்கியமாக இருப்பதுடன் சேவைக்குத் தகுதியானவர் என்பதை உறுதி செய்வதற்காக அண்மையில் பெற்றுக் கொண்ட மருத்துவ சான்றிதழை நேர்முகத் தேர்வில் சமர்ப்பித்தல் வேண்டும்.

   II. தேர்ந்தெடுக்கப்படும் முறை -
   நேர்முகத் தேர்வு சபையின் பரிந்துரைகளுக்கு அமைவாக தகைமையுள்ள அதிகாரிகள் தேர்ந்தெடுக்கப்படுவர்.

   III கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய வசதிகள்
   - அரச நிர்வாக சுற்றுநிருபம் இல. 03/2018 இன் படி கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய வரப்பிரசாதங்களும் வழங்கப்படும்.

**விண்ணப்பிக்க வேண்டிய முறை:**

விண்ணப்பிப்பதற்கு எதிர்பார்க்கும் சேவையில் ஈடுபட்டுள்ள அதிகாரிகள் தமது விண்ணப்பத்தை நிறுவன தலைமையூடாகவும் ஓய்வு பெற்ற அதிகாரிகள் தம்மால் தயாரிக்கப்பட்ட சுயதரவுப் பத்திரத்தை 2020.09.30ஆம் திகதிக்கு முன்பு கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். குறித்த தினத்திற்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். அனுப்பப்படும் விண்ணப்பங்கள் உள்ளிடும் உறையின் இடது பக்க மேல் மூலையில் 'இலங்கை நிர்வாக சேவையில் வெற்றிடமாகவுள்ள பதவிகளுக்கு விண்ணப்பித்தல்' என்று குறிப்பிடுதல் வேண்டும்.

**காணி உரித்து நிருணய ஆணையாளர் நாயகம்,**
**காணி உரித்து நிருணயத் திணைக்களம்,**
**இல. 1200/6, 'மிஹிகத்த மெதுர', ரஜமல்வத்த வீதி,**
**பத்தரமுல்ல.**

இலங்கை சனநாயக சோசலிச குடியரசு
நெடுஞ்சாலைகள் அமைச்சு
**வீதி அபிவிருத்தி அதிகார சபை**

## பதவி வெற்றிடங்கள்

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பதவி வெற்றிடத்திற்கு இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**I. பணிப்பாளர் (அகக் கணக்காய்வு) HM 1-3**

**கல்வித் தகைமைகள் , தொழில்முறை தகைமைகள் மற்றும் முன் அனுபவங்கள்**

1) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் (UCG) அங்கீகரிக்கப்பட்ட கணக்கியல் / நிதி / வணிக முகாமைத்துவம் / வணிகத்துறையில் இளமாணிப்பட்டம் அல்லது கணக்கியலில் உயர் தேசிய டிப்ளோமா.

   அத்துடன்

   அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை பட்டய நிறுவனத்தின் இணை உறுப்பினர் நிலை, இது கோரப்பட்டுள்ள பதவிக்கு பொருத்தமானதாக இருத்தல் வேண்டும்.

   மற்றும்

   ஒரு நிறுவனம், சட்டரீதியான வாரியம் / நிறுவனம் அல்லது புகழ்பெற்ற தனியார் நிறுவனத்தில் நிரூபிக்கப்பட்ட தடபதிவுடன் "நிர்வாக மட்டத்தில்" குறைந்தபட்சம் 17 வருட முன்அனுபவம்.

2) கணக்கியல்/ நிதி/ வணிக முகாமைத்துவம் / வர்த்தகம் போன்ற துறைகளில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை பட்டய நிறுவனத்தின் முழு/ சக உறுப்பினர் நிலை.

   மற்றும்

   ஒரு நிறுவனம், சட்டரீதியான வாரியம் / நிறுவனம் அல்லது புகழ்பெற்ற தனியார் நிறுவனத்தில் நிரூபிக்கப்பட்ட தடபதிவுடன் "நிர்வாக மட்டத்தில்" குறைந்தபட்சம் 17 வருட முன்அனுபவம்.

**சம்பள அளவு**

**HM 1 - 3 - ரூபா. 86,865 - 2,270 x 15 - 120,915/- +** அரசு மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் அங்கீகரிக்கப்பட்ட மற்றைய அனைத்து கொடுப்பனவுகளும்.

**வயதெல்லை**

வயது 35 வயதிற்குக் குறையாமல், 55 வயதிற்கு அதிகமாகாமல் இருத்தல் கூடாது.

**பதவி வெற்றிடத்திற்கு பொருந்தும் பொதுவான நிபந்தனைகள்**

- அதிகாரசபையினால் ஊழியர்களின் சேமலாப நிதி பங்களிப்பு ஊழியர்களால் 8% க்கு எதிராக 12% மற்றும் ஊழியர்களின் நம்பிக்கை பொறுப்பு நிதிக்கு 3% கூடுதல் பங்களிப்பு வழங்கப்படும்.
- அங்கீகரிக்கப்பட்ட எரிபொருள் கொடுப்பனவு அல்லது போக்குவரத்து கொடுப்பனவு கொண்ட ஒரு ஒதுக்கப்பட்ட வாகனம் நடைமுறையில் உள்ள பொது நிறுவன சுற்றறிக்கை எண் 1/2015 மற்றும் 1/2015 (i) இன் விதிமுறைகளுக்கு அமைவாக வழங்கப்படும்.
- அரசாங்கத்துறைகள்/ அரச கூட்டுத்தாபனங்கள்/ சட்டரீதியான சபைகள் மற்றும் அதிகார சபைகளை சேர்ந்த விண்ணப்பதாரிகள் விண்ணப்பிப்பின் அந்தந்த நிறுவனத்தின் தலைவர்கள் மூலம் விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும்.
- விண்ணப்பதாரி சம்பந்தப்பட்ட சரிபார்ப்புகளைப் பெற இரண்டு உறவினரல்லாதவர்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் தொலைபேசி எண்கள் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட வேண்டும்.
- கல்வி மற்றும் பிற சான்றிதழ்களின் நகல்களை விண்ணப்பத்துடன் இணைக்கப்படல் வேண்டும்.

விண்ணப்பத்தை பதிவுத்தபாலின் மூலம் அனுப்ப வேண்டியதுடன், விண்ணப்பிக்கும் வெற்றிடத்தை தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடல் வேண்டும். விண்ணப்பங்களை பணிப்பாளர் (நிர்வாகம்) ற்கு **02/09/2020** ஆம் திகதிக்கு முன் கிடைக்கப்பெறுமாறு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

பணிப்பாளர் நாயகம்
**வீதி அபிவிருத்தி அதிகார சபை**
1 ஆம் மாடி, "மகநெகும மஹாமெதுர",
இல. 216, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, கொஸ்வத்தை
பத்தரமுல்லை.

BE BETTER INFORMED! News you can trust now free on your mobile phone.
Visit - apps.lakehouse.lk
DOWNLOAD TODAY!
Dinamina Daily News Thinakaran
AVAILABLE AT
LAKE HOUSE

# விலைமனுக்கோரல்

## வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) கம்பனி

## விலைகேள்வி இலக்கம் : 040/T/2019

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்திற்கு 85" தொலைக்காட்சிகள்/ 05 காட்சிப்பலகைகள் வழங்குதல்.

(Supply of 05 Nos. of 85" Television/ Display)

வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனியின் தவிசாளரால் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்திற்கு 85" தொலைக்காட்சிகள் / 05 காட்சிப்பலகைகள் வழங்குவதற்காக விலைக்கேள்விகள் கோரப்படுகின்றன.

விலைக்கேள்வி இணைக்கோப்பு திருப்பித் தரப்படாத இரண்டாயிரம் ரூபா (2,000.00 ரூபா) காசு வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனி, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின், கட்டுநாயக்காவில் அமைந்துள்ள வழங்கல் தொடர் முகாமைத்துவ பிரிவிற்குச் செலுத்துவதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியுமாக இருப்பதுடன், அதற்காக விலைக்கேள்வியாளரால் வேண்டுதல் கடிதமொன்று சமர்ப்பித்தல் வேண்டும்.

வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) கம்பனியின், பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின், கட்டுநாயக்காவில் அமைந்துள்ள வழங்கல் தொடர் முகாமைத்து பிரிவினால் 2020.08.25 ஆம் திகதி முதல் 2020.09.21 ஆந் திகதி வரை ஏதேனும் வேலை செய்யும் நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3,00 மணி வரையிலான காலப்பகுதி வரை விலைக்கேள்வி இணைக்கோப்பினை பெற்றுக்கொள்ள முடியும். தேவைப்படுமாயின் மேற்குறிப்பிட்ட விலைக்கேள்வி ஆவணங்கள் வழங்கல் தொடர் முகாமைத்துவ பிரிவு அலுவலகத்தில் இலவசமாக பார்வையிட முடியும்.

விலைக்கேள்வியாளர்கள் அவர்களின் விலைக்கேள்விகள் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனியில் அமைந்துள்ள வழங்கல் தொடர் முகாமைத்துவ பிரிவில் அதற்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி பெட்டியில் வைப்பீடு செய்தல் வேண்டும். விலைக் கேள்வியாளரின் விருப்பத்தின் பிரகாரம் அவர்களின் முத்திரையிடப்பட்ட விலைக்கேள்விகள் மேற்குறிப்பிட்ட விலாசத்திற்கு தனிப்பட்ட முறையில் நேரடியாக சமுகமளித்தும் ஒப்படைத்து விட முடியும்.

விலைக்கேள்விகளைப் பொறுப்பேற்றல் 2020.09.22 ஆந் திகதி செவ்வாய் பி.ப. 02.00 மணிக்கு முடிவடைவதுடன் உரிய விலைக்கேள்விகளைத் திறத்தல் அத்துடன் வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் கம்பனி, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், கட்டுநாயக்காவில் அமைந்துள்ள வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவில் இடம்பெறும், விலைக்கேள்வியாளரால் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளுக்கு விலைக்கேள்விகளைத் திறக்கும் வேளையில் அதில் பங்கேற்க முடியும்.

விலைக்கேள்வி உத்தரவாதத்திற்காக இலங்கையில் செயற்படுகின்ற, அரசின் மத்திய வங்கியின் அங்கீகாரம் பெற்ற வங்கியொன்றினால் தவிசாளர், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமான சேவைகள் கம்பனியின் தேவையின் அடிப்படையில் செலுத்தும் வகையில் வெளியிடப்பட்ட ரூபா ஒரு இலட்சத்து முப்பதாயிரம் (ரூபா. 130,000.00) பெறுமதி வாய்ந்த வங்கி பிணை முறி விலைக்கேள்வியுடன் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

இது தொடர்பாக மேலதிக தகவல்களைப் பெறவேண்டுமாயின், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை)கம்பனியின், வழங்கல் தொடர் முகாமைத்துவ பிரிவின், தொலைபேசி இலக்கம், 011-2264103/011-2264106 ஊடாக அழைப்பதன் மூலம் அல்லது head.scm@aiport.lk என்ற மின்னஞ்சல் மூலம் அல்லது www.airport.lk இணையத்தளத்திற்கு பிரவேசிப்பதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

**தவிசாளர்,**
**வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனி**
**பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம்,**
**கட்டுநாயக்க.**

# விலைமனுக்கோரல்

## வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனி

**விலைக்கேள்வி இலக்கம் : 134/T/2019**

## கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் ஏற்றிட கண்காணிப்பு குறித்து நெருங்கி சுழலும் நிழற்படக்கருவி (CCTV) ஒன்றினை வழங்குதல் மற்றும் இணைத்தல்

வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனியின் தவிசாளரால் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் ஏற்றிட கண்காணிப்பு குறித்து நெருங்கி சுழலும் நிழற்படக்கருவி (CCTV) ஒன்றினை வழங்குவதற்காக மற்றும் இணைப்பதற்காக விலைக்கேள்விகள் கோரப்படுகின்றன.

விலைக்கேள்வி இணைக்கோப்பு திருப்பித் தரப்படாத ரூபா மூவாயிரம் (3,000.00 ரூபா) காசு வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) கம்பனி, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் கட்டுநாயக்காவில் அமைந்துள்ள வழங்கல் தொடர் முகாமைத்துவ பிரிவிற்குச் செலுத்துவதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியுமாக இருப்பதுடன், அதற்காக விலைக்கேள்வியாளரால் வேண்டுதல் கடிதமொன்று சமர்ப்பித்தல் வேண்டும்.

வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) கம்பனியின், பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின், கட்டுநாயக்காவில் அமைந்துள்ள வழங்கல் தொடர் முகாமைத்துவ பிரிவினால் 2020.08.25ஆந் திகதி முதல் 2020.09.21ஆந் திகதி வரை ஏதேனும் வேலை செய்யும் நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரையிலான காலப்பகுதி வரை விலைக்கேள்வி இணைக்கோப்பினை பெற்றுக்கொள்ள முடியும். தேவைப்படுமாயின் மேற்குறிப்பிட்ட விலைக்கேள்வி ஆவணங்கள் வழங்கல் தொடர் முகாமைத்துவ பிரிவு அலுவலகத்தில் இலவசமாகப் பார்வையிட முடியும்.

விலைக்கேள்வியாளர்கள் அவர்களின் விலைக்கேள்விகளை கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனியில் அமைந்துள்ள வழங்கல் தொடர் முகாமைத்துவ பிரிவில் அதற்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி பெட்டியில் வைப்பீடு செய்தல் வேண்டும். மேலும், விலைக்கேள்வியாளரின் விருப்பத்தின் பிரகாரம் அவர்களின் முத்திரையிடப்பட்ட விலைக்கேள்விகள் மேற்குறிப்பிட்ட விலாசத்திற்கு தனிப்பட்ட முறையில் நேரடியாக சமுகமளித்தும் ஒப்படைத்து விட முடியும்.

விலைக்கேள்விகளைப் பொறுப்பேற்றல் 2020.09.22ஆந் திகதி செவ்வாய் பி.ப. 02.00 மணிக்கு முடிவடைவதுடன், உரிய விலைக்கேள்விகளைத் திறத்தல் அத்துடன் வரையறுக்கப்பட்ட விமான நிலைய மற்றும் விமான சேவைகள் கம்பனி, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், கட்டுநாயக்காவில் அமைந்துள்ள வழங்கல் தொடர் முகாமைத்துவ பிரிவில் இடம்பெறும். விலைக்கேள்வியாளர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளுக்கு விலைக்கேள்விகளைத் திறக்கும்போது அதில் பங்கேற்க முடியும்.

விலைக்கேள்வி உத்தரவாதத்திற்காக இலங்கையில் செயற்படுகின்ற, அரசின் மத்திய வங்கியின் அங்கீகாரம் பெற்ற வங்கியொன்றினால் தவிசாளர், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமான சேவைகள் கம்பனியின் தேவையின் அடிப்படையில் செலுத்தும் வகையில் வெளியிடப்பட்ட ரூபா ஒரு இலட்சத்து எழுபத்து நான்காயிரத்து தொளாயிரத்து இருபது (ரூபா. 174,920.00) பெறுமதி வாய்ந்த வங்கி பிணை முறி விலைக்கேள்வியுடன் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

இது தொடர்பாக மேலதிக தகவல்களைப் பெறவேண்டுமாயின், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) கம்பனியின், வழங்கல் தொடர் முகாமைத்துவ பிரிவின் தொலைபேசி இலக்கம். **011-2264103/011-2264106** ஊடாக அழைப்பதன் மூலம் அல்லது **head.scm@airport.lk** என்ற மின்னஞ்சல் மூலம் அல்லது **www.airport.lk** இணையத்தளத்திற்கு பிரவேசிப்பதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

**தவிசாளர்,**
**வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) கம்பனி,**
**பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம்,**
**கட்டுநாயக்க.**

# விலைமனுக்கோரல்

## வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) கம்பனி

**விலைக்குறிப்பீட்டு இலக்கம்: 063/T/2019**

கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்திற்கு
25KW மற்றும் 50KW GRID TIE INVERTERS வழங்கல்

வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) கம்பனியின் தவிசாளரால் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்திற்கு 25KW மற்றும் 50KW GRID TIE INVERTERS வழங்குவதற்காக விலைக்கேள்விகள் அழைக்கப்படுகின்றன.

விலைக்கேள்வி இணைகோப்பு திருப்பித் தரப்படாத ரூபா ஆயிரத்து ஐந்நூறு (1,500.00 ரூபா) காசு வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை ) கம்பனி, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின், கட்டுநாயக்கவில் அமைந்துள்ள வழங்கல் தொடர் முகாமைத்துவ பிரிவிற்குச் செலுத்துவதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியுமாக இருப்பதுடன், அதற்காக விலைக்கேள்வியாளரால் வேண்டுதல் கடிதமொன்று சமர்ப்பித்தல் வேண்டும்.

வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) கம்பனியின், பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின், கட்டுநாயக்கவில் அமைந்துள்ள வழங்கல் தொடர் முகாமைத்துவ பிரிவினால் 2020.08.25 ஆந் திகதி முதல் 2020.09.21 ஆந் திகதி வரை ஏதேனும் வேலை செய்யும் நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரையிலான காலப்பகுதி வரை விலைக்கேள்வி இணைக்கோப்பினை பெற்றுக்கொள்ள முடியும். தேவைப்படுமாயின் மேற்குறிப்பிட்ட விலைக்கேள்வி ஆவணங்கள் வழங்கல் தொடர் முகாமைத்துவ பிரிவு அலுவலகத்தில் இலவசமாக பார்வையிட முடியும்.

விலைக்கேள்வியாளர்கள் அவர்களின் விலைக்கேள்விகள் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) கம்பனியில் அமைந்துள்ள வழங்கல் தொடர் முகாமைத்துவ பிரிவில் அதற்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி பெட்டியில் வைப்பீடு செய்தல் வேண்டும். மேலும், விலைக்கேள்வியாளரின் விருப்பத்தின் பிரகாரம் அவர்களின் முத்திரையிடப்பட்ட விலைக்கேள்விகள் மேற்குறிப்பிட்ட விலாசத்திற்கு தனிப்பட்ட முறையில் நேரடியாக சமுகமளித்தும் ஒப்படைத்து விட முடியும்.

விலைக்கேள்விகளைப் பொறுப்பேற்றல் 2020.09.22 ஆந் திகதி வியாழன் பி.ப. 02.00 மணிக்கு முடிவடைவதுடன் உரிய விலைக்கேள்விகளைத் திறத்தல் அத்துடன் வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் கம்பனி, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், கட்டுநாயக்கவில் அமைந்துள்ள வழங்கல் தொடர் முகாமைத்துவ பிரிவில் இடம்பெறும். விலைக்கேள்வியாளர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளுக்கு விலைக்கேள்விகளைத் திறக்கும்போது அதற்கு சமுகமளிக்க முடியும்.

விலைக்கேள்வி உத்தரவாதத்திற்காக இலங்கையில் செயற்படுகின்ற , அரசின் மத்திய வங்கியின் அங்கீகாரம் பெற்ற வங்கியொன்றினால் தவிசாளர், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் கம்பனியின் தேவையின் அடிப்படையில் செலுத்தும் வகையில் வெளியிடப்பட்ட ரூபா அறுபதாயிரம் (ரூபா. 60,000.00) பெறுமதி வாய்ந்த வங்கி பிணை முறி, விலைக்கேள்வியுடன் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

இது தொடர்பாக மேலதிக தகவல்களைப் பெறவேண்டுமாயின், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) கம்பனியின், வழங்கல் தொடர் முகாமைத்துவ பிரிவின், தொலைபேசி இலக்கம். 011-2264103 / 011-2264106 ஊடாக அழைப்பதன் மூலம் அல்லது head.scm@airport.lk என்ற மின்னஞ்சல் மூலம் அல்லது www.airport.lk இணையத்தளத்திற்கு பிரவேசிப்பதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

**தவிசாளர்,**
**வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) கம்பனி,**
**பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம்,**
**கட்டுநாயக்க.**

# விலைமனுக் கோரல்

## வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) கம்பனி

**விலைக்கேள்வி இலக்கம்: 117/T/2019**

கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் வானோடல் சேவைகள் வளாகத்தில் பயணிகளுக்கான தற்போதுள்ள மின்னுயர்த்தியினை பிரதியீடு செய்தல் மற்றும் அகற்றுதல். (Removal & Replacement of 01 No. Passenger Elevator in the Navigation Services Complex at Bandaranaike International Airport, Katunayake)

வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) கம்பனியின் தவிசாளரால் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் வானோடல் சேவைகள் வளாகத்தில் பயணிகளுக்கான தற்போதுள்ள மின்னுயர்த்தியினை பிரதியீடு செய்தல் மற்றும் அகற்றுவதற்காக விலைக்கேள்விகள் கோரப்படுகின்றன.

விலைக்கேள்வி இணைகோப்பு திருப்பித் தரப்படாத ரூபா ஆறாயிரம் (6,000.00 ரூபா) காசு வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனி, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் கட்டுநாயக்கவில் அமைந்துள்ள வழங்கல் தொடர் முகாமைத்துவ பிரிவிற்குச் செலுத்துவதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியுமாக இருப்பதுடன், அதற்காக விலைக்கேள்வியாளரால் வேண்டுதல் கடிதமொன்று சமர்ப்பித்தல் வேண்டும்.

வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனியின், பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின், கட்டுநாயக்கவில் அமைந்துள்ள வழங்கல் தொடர் முகாமைத்துவ பிரிவினால் 2020.08.25 ஆம் திகதி முதல் 2020.09.21 ஆந் திகதி வரை ஏதேனும் வேலை செய்யும் நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரையிலான காலப்பகுதி வரை விலைக்கேள்வி இணைக்கோப்பினை பெற்றுக்கொள்ள முடியும். தேவைப்படுமாயின் மேற்குறிப்பிட்ட விலைக்கேள்வி ஆவணங்கள் வழங்கல் தொடர் முகாமைத்துவ பிரிவு அலுவலகத்தில் இலவசமாக பார்வையிட முடியும்.

விலைக் கேள்வியாளர்கள் அவர்களின் விலைக்கேள்விகள் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) கம்பனியில் அமைந்துள்ள வழங்கல் தொடர் முகாமைத்துவ பிரிவில் அதற்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி பெட்டியில் வைப்பீடு செய்தல் வேண்டும். மேலும், விலைக்கேள்வியாளரின் விருப்பத்தின் பிரகாரம் அவர்களின் முத்திரையிடப்பட்ட விலைக்கேள்விகள் மேற்குறிப்பிட்ட விலாசத்திற்கு தனிப்பட்ட முறையில் நேரடியாக சமுகமளித்தும் ஒப்படைத்து விட முடியும்.

விலைக்கேள்விகளைப் பொறுப்பேற்றல் 2020.09.22 ஆந் திகதி செவ்வாய் பி.ப. 02.00 மணிக்கு முடிவடைவதுடன் உரிய விலைக்கேள்விகளைத் திறத்தல் அத்துடன் வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமான சேவைகள் கம்பனி, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், கட்டுநாயக்கவில் அமைந்துள்ள வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவில் இடம்பெறும். விலைக்கேள்வியாளர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளுக்கு விலைக்கேள்விகளைத் திறக்கும்போது அதில் பங்கேற்க முடியும்.

விலைக்கேள்வி உத்தரவாதத்திற்காக இலங்கையில் செயற்படுகின்ற, அரசின் மத்திய வங்கியின் அங்கீகாரம் பெற்ற வங்கியொன்றினால் தவிசாளர், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமான சேவைகள் கம்பனியின் தேவையின் அடிப்படையில் செலுத்தும் வகையில் வெளியிடப்பட்ட ரூபா மூன்று இலட்சத்து அறுபதாயிரம் (ரூபா. 360,000.00) பெறுமதி வாய்ந்த வங்கி பிணை முறி, விலைக்கேள்வியுடன் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

விலைக்கேள்வி சமர்ப்பித்தலுடன் தொடர்புடைய தெளிவுபடுத்தல்கள் 2020.09.09 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) கம்பனியின், இயந்திர பொறியியல் பராமரிப்பு கட்டிடத்தின் கலந்துரையாடும் அறையில் நடாத்தப்படும்.

இது தொடர்பாக மேலதிக தகவல்களைப் பெறவேண்டுமாயின், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை ) கம்பனியின் வழங்கல் தொடர் முகாமைத்துவ பிரிவின் தொலைபேசி இலக்கம். 011-2264103/011-2264102 ஊடாக அழைப்பதன் மூலம் அல்லது head.scm@airport.lk என்ற மின்னஞ்சல் மூலம் அல்லது www.airport.lk இணையத்தளத்திற்கு பிரவேசிப்பதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

**தவிசாளர்,**
**வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) கம்பனி,**
**பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம்,**
**கட்டுநாயக்க.**

தினகரன்
# விளையாட்டு
2020 ஓகஸ்ட் 24 திங்கட்கிழமை
sports.tkn@lakehouse.lk

## இங்கிலாந்துக்கு எதிரான 20 ஓவர் கிரிக்கெட் :

# பாகிஸ்தான் அணி அறிவிப்பு





இங்கிலாந்துக்கு எதிரான தொடருக்கான பாகிஸ்தான் 20 ஓவர் கிரிக்கெட் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்து – பாகிஸ்தான் அணிகள் இடையிலான 3 ஆட்டங்கள் கொண்ட 20 ஓவர் கிரிக்கெட் போட்டி தொடர் எதிர்வரும் 28, 30 மற்றும் செப்டம்பர் 1ம் திகதிகளில் மான்செஸ்டரில் நடக்கிறது. இங்கிலாந்துக்கு எதிரான தொடருக்கான பாகிஸ்தான் 20 ஓவர் கிரிக்கெட் அணி அறிவிக்கப்பட்டுள்ளது. தலைவர் பதவியில் இருந்து கழற்றி விடப்பட்ட பிறகு சர்ப்ராஸ் அகமது முதல்முறையாக 20 ஓவர் அணியில் இடம் பிடித்துள்ளார். முகமது ஹபீஸ், சோயிப் மாலிக் ஆகியோர் தங்களது இடத்தை தக்கவைத்துள்ளனர்.

துடுப்பாட்ட வீரர் ஷான் மசூத்துக்கு அணியில் இடம் கிட்டவில்லை. பாகிஸ்தான் அணி வீரர்கள் வருமாறு:

பாபர் அசாம் (தலைவர்), பஹார் ஜமான், ஹைதர் அலி, ஹாரிஸ் ராவுப், இப்திகர் அகமது, இமாத் வாசிம், குஷ்தில் ஷா, முகமது ஹபீஸ், முகமது ஹஸ்னைன், முகமது ரிஸ்வான், முகமது அமிர், நசீம் ஷா, சர்ப்ராஸ் அகமது, ஷதாப் கான், ஷகீன் ஷா அப்ரிடி, சோயிப் மாலிக், வஹாப் ரியாஸ்.

## சிநேகபூர்வ கிரிக்கெட் சுற்றுப்போட்டி: சஹிரியன் பவர் பிளயர் 96 அணி வெற்றி



கல்முனை சாஹிரா கல்லூரியில் சாதாரண தர மற்றும் உயர்தர வகுப்புகளில் கல்வி கற்ற பழைய மாணவர்களான சஹிரியன்ஸ் பவர் பிளயர் 96 அணியினருக்கும் சஹிரியன்ஸ் சுப்பர் ஹீரோஸ் 97 அணியினருக்குமிடையிலான சிநேகபூர்வ கிரிக்கெட் சுற்றுப்போட்டி சாய்ந்தமருது பௌஸி மைதானத்தில் நேற்று (23ம் திகதி) இடம்பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றியீட்டிய சஹிரியன் பவர் பிளயர் 96 அணியின் தலைவர் ஏ.எம்.எம். நசீர்கான் தனது அணி துடுப்பெடுத்தாடுவதற்கு இணங்க நிர்ணயிக்கப்பட்ட ஓவர்கள் முடிவில் 6 விக்கட்டுக்களை இழந்து 62 ஓட்டங்களைப் பெற்றனர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சஹிரியன்ஸ் சுப்பர் ஹீரோஸ் 97 அணியினர் 38 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 25 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவினர். இச் சிநேபூர்வ கிரிக்கெட் சுற்றில் 10 பந்து வீச்சுகளுக்கு 26 ஓட்டங்களைப் பெற்ற சஹிரியன்ஸ் பவர் பிளயர் 96 அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் ஏ.சி.எம் றிபாய் ஆட்ட நாயகனாக தெரிவு செய்யப்பட்டார்.

**யூ.கே. காலித்தீன்**


OBSERVER MOBITEL SCHOOL CRICKETER OF THE YEAR 2020
SINCE 1978 42nd
Recognizing talent, inspiring greatness.
Sri Lanka Telecom Mobitel
உங்களுடனே. என்றும்.

## 42வது ஒப்சவர்-மொபிடெல்

### மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர் / வீராங்கனை- 2020

உங்களுக்கு விருப்பமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனைக்கு வாக்களித்து அவரை இந்த ஆண்டின் ஒப்சேவர் - மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனையைத் தெரிவு செய்யுங்கள்.

☐ **மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்-2020**

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2019/2020 பிரிவு I, II, III களில் பூர்த்தி செய்த வீரர்கள் மட்டுமே வாக்களிக்கலாம்.

☐ **மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீராங்கனை-2020**

தேசிய ரீதியில் இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2019/2020 தேசிய மட்டத்தில் பூர்த்தி செய்த வீராங்கனைகள் மட்டுமே வாக்களிக்கலாம்.

வாக்கினை அளிப்பது : ..........

வீரர்களுக்கான பிரிவு : பிரிவு I ☐ பிரிவு II ☐ பிரிவு III ☐

தேசிய மட்ட வீராங்கனை : ..........

(ஒரு கூப்பன் ஒரு வாக்குக்கு மட்டுமே செல்லுபடியாகும்)

பாடசாலை : ..........

வாக்களித்தவர் பெயர் : ..........

முகவரி : ..........

மொபைல் இல. : ..........

SUNDAY OBSERVER

Vote: schoolboycricketer.lk இணையத்தளத்திற்குள் பிரவேசித்து வாக்களிக்க முடியும்

**வாராந்த சீட்டிழுப்பில் பரிசுகளை வெல்லுங்கள்:**

1வது பரிசு : Mobitel 4G Wi-Fi Router
2வது பரிசு: ரூ. 2,500
3வது பரிசு: ரூ.1,500
4வது பரிசு: ரூ. 1,000


42வது ஒப்சவர்-மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரரை தெரிவு செய்யும் போட்டி தற்போது ஆரம்பமாகியுள்ளது. கூப்பனை நிரப்பி விளையாட்டு ஆசிரியர், **சண்டே ஒப்சவர், லேக் ஹவுஸ், கொழும்பு-10** எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

**நிபந்தனைகள்:**

மொபிடெல் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர், லேக்ஹவுஸ் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர் இந்தப் போட்டியில் பங்கு பெற முடியாது.

ஒரு கூப்பனில் ஒரு பிரிவில் ஒருவருக்கே வாக்களிக்கலாம். போட்டி தொடர்பில் சண்டே ஒப்சவர் விளையாட்டு நிர்வாகத்தினரின் முடிவே இறுதியானது.

திகதி 2020-08-29 இல. 25


'கிரிக்கெட் பிலாஸ்ட்டர் 2020'

## மடவளை ஓல்ட் மதீனியன்ஸ் விளையாட்டுக் கழகம் இறுதிப் போட்டிக்கு தகுதி



**(அக்குறணை குறூப் நிருபர்)**

கெலிஓயா விளையாட்டுக் கழகம் ஒழுங்கு செய்துள்ள 'கிரிக்கெட் பிலாஸ்ட்டர் 2020' கண்டி மாவட்ட கடின பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் மடவளை ஓல்ட் மதீனியன்ஸ் விளையாட்டுக் கழகம் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது. (22.8.2020)

கண்டி பல்லேகலை திறந்தவெளி சிறைச்சாலை மைதானத்தில் இடம்பெற்ற இரண்டாம் அரை இறுதிப் போட்டியில் கண்டி லிவர்பூல் விளையாட்டுப்கழகத்தை 7 விக்கட்டுக்களால் வெற்றி கொண்டு ஓல்ட் மதீனியன்ஸ் விளையாட்டுக்கழகம் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது. மேற்படி 40 ஓவர்கள் கொண்ட போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய கண்டி ரிவர்பூல் கழகம் 29.2 ஓவர் முடிவில் சகல விக்கட்டுக்களையும் இழந்து 101 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஜனித் 28 பந்துகளில் 21 ஓட்டத்தையும் கே. பாண்டியன் 24 பந்துகளில் 15 ஓட்டங்களையும் மனோ 36 பந்துகளில் 14 ஓட்டங்களையும் பெற்றனர். அஹ்மட் ரஸூர் 8 ஓவர்கள் பந்து வீசி 30 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கட்டுக்களையும் இன்சாப் பைசல் 5 ஓவர் பந்து வீசி 11 ஓட்டங்களுக்கு 2 விக்கட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு ஆடிய ஓல்ட் மதீனியன்ஸ் அணி 20 ஓவர் முடிவில் 3 விக்கட்டுக்களை மட்டும் இழந்து வெற்றி இலக்கான 102 ஓட்டங்களைப் பெற்றது. மொகமட் ரிபாஸ் 78 பந்துகளில் ஆட்டமிழக்காது 51 ஓட்டங்களைப் பெற்றார். முன்சிப் இம்தியாஸ் 17 பந்துகளில் 15 ஓட்டங்களைப் பெற்றார். எனவே மேற்படி வெற்றி மூலம் மடவல ஓல்ட் மதீனியன்ஸ் அணி எதிர்வரும் செப்டம்பர் 6ம் திகதி இடம்பெற உள்ள இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது.

ஏற்கனவே கம்பளை விக்கிரமபாகு கல்லூரி மைதானத்தில் நடந்து முடிந்த முதலாவது அறை இறுதிப் போட்டியில் கம்பளை ஓல்ட் சஹிரியன்ஸ் அணி கண்டி தண்டர்ஸ் அணியை வெற்றி கொண்டு இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. மொத்தம் 12 அணிகள் பங்கு கொண்ட இச்சுற்றுப் போட்டியில் லீக் அடிப்படையில் நடந்து பின்னர் நொக்கவுட் முறையில் இறுதிப் போட்டி வரை இடம் பெற்று வருகின்றன.






பேருவளை சீனங்கோட்டை ஒக்ஸ்பேர்ட் விளையாட்டுக்கழகத்தின் 35 ஆவது வருட நிறைவை முன்னிட்டு நளீம் ஹாஜியார் விளையாட்டரங்கில் எதிர்வரும் 5ஆம் திகதி (05/09/2020) மாபெரும் கிரிக்கெட் சுற்றுப்போட்டி இடப்பெறவுள்ளது. இப்போட்டிக்கு அனுசரணையாளர்களாகிய சி.ஜி.எல் இரத்தினக்கல் ஆய்வு கூட உரிமையாளர் மதனி நஜுமுதீன், பாதில் ஜெம்ஸ் உரிமையாளர் பாதில் பௌமி ஒக்ஸ்பேர்ட் அணிகளுக்கான ஜேர்ஸியை தலைவர் இர்சாத் நிஸாமிடம் கையளிப்பதை படங்களில் காணலாம். கழக உறுப்பினர்களும் படத்தில் காணப்படுகின்றனர். படங்கள் : பேருவளை விஷேட நிருபர்

## மாத்தளை ஜொலி போய்ஸ் விளையாட்டுக்கழகம் சம்பியன்





**உக்குவளை விசேட நிருபர்**

மாத்தளை ஜொலி போய்ஸ் விளையாட்டுக்கழகம் மற்றும் உக்குவளை கோல்ட்மூன் விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் இடம்பெற்ற உதைபந்தாட்ட போட்டியில் 4:3 என்ற கோல் அடிப்படையில் உக்குவளை கோல்ட் மூன் விளையாட்டுக்கழகத்தை தோல்வியடையச் செய்து மாத்தளை ஜொலி போய்ஸ் விளையாட்டுக்கழகம் மாத்தளை மாவட்ட கிராம சேவகர் பிரிவுக்கான சம்பியன் கிண்ணத்தை சுவிகரித்துக் கொண்டது.

வருடத்தோறும் மாத்தளை மாவட்ட பிரதேச செயலக பிரிவுகளின் கிராம சேவையாளர் பிரிவுகளுக்குள் இயங்கும் விளையாட்டுக் கழகங்களிற்கிடையில் நடைபெறும் உதைபந்தாட்ட போட்டி கடந்த சில வாரங்களாக மாத்தளை நகரில் இடம்பெற்று இறுதிப் போட்டிக்கு மாத்தளை ஜொலி போய்ஸ் விளையாட்டுக்கழகம் மற்றும் உக்குவளை கோலட்மூன் விளையாட்டுக்கழகம் என்பன தெரிவாகின. இதன் அடிப்படையில் இறுதிப்போட்டி கடந்த 16 ம் திகதி இடம்பெற்ற போது ஜொலி போய்ஸ் விளையாட்டுக்கழகம் வெற்றியீட்டியமை குறிப்பிடத்தக்கதாகும். மேற்படி போட்டி மாலை 3.00 மணிக்கு ஆரம்பமாகி மிகவும் விறுவிறுப்பாக இடம் பெற்ற இவ் உதைப்பந்தாட்ட போட்டியில் அரையிறுதி நேரம் வரை எந்தவொரு அணியும் புள்ளிகளை பெற்றுக் கொள்ளவில்லை.அரையிறுதி ஆட்டத்தின் பின்னர் போட்டி மிகவும் விறுவிறுப்புடன் இடம் பெற்றதோடு இரு அணிகளின் ஆதரவாளர்கள் மற்றும் பார்வையாளர்களின் பலத்த கரகோசத்தின் மத்தியிலும் எந்தவொரு அணியும் புள்ளிகளை பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் போட்டியின் நடுவர்களாக இயங்கிய பிரபல உதைபந்தாட்ட நடுவர் கே.ஆர்.எம். ஹாரிஸ், முகமட் இல்காம் , அதுல வீரக்கொடி ஆகியோர் பெனல்டி மூலம் சந்தர்ப்பங்களை கொடுத்து வெற்றி தோல்வியை நிர்ணயிக்க எடுக்கப்பட்ட முடிவுடன் 4:3 என்ற கோல் அடிப்படையில் போட்டியில் ஜொலி போய்ஸ் வெற்றிப் பெற்றமை குறிப்பிடப்பட்டது.

## இரத்ததான நிகழ்வு



**ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்**

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் ஏற்பாட்டில் அட்டாளைச்சேனை அல்நஜா விளையாட்டுக் கழகம் மற்றும் அல் நஜா சமூகசேவை அமைப்பு இணைந்து நடாத்திய மாபெரும் இரத்தான நிகழ்வு நேற்று (23.08.2020) கழகத்தின் தலைவர் எஸ்.எம்.இத்ரீஸ் தலைமையில் அல் நாஜா விளையாட்டுக் கழகத்தின் அட்டாளைச்சேனை காரியாலயத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் அட்டாளைச்சேனை பிரதேச வைத்தியசாலையின் பொறுப்பதிகாரி டாக்டர் எஸ்.எம்.முனாஸ்தீன்,முன்னாள் பிரதேச சபையின் உறுப்பினர் எஸ்.எல். முனாஸ், அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் இரத்த வங்கியில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2020 ஓகஸ்ட் மாதம் 24ம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.